ஸ்ரீ ரவீந்திரநாத் தாகூர் எழுதிய சிறுகதைகள்

ஸ்ரீ ரவீந்திர நாத் டாகூர் எழுதிய

சிறு கதைகள்

…ளியா, காதம்பினி முதலியன

M. Annamalai

கலை நிலயம்
3, பேயாழ்வார் கோவில் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

விலை அணா 8.

ஸ்ரீ ரவீந்த்ர நாத் டாகூர் எழுதிய

சிறு கதைகள்

தாளியா, வரதக்ஷிணை முதலியன

வங்காளி முதனூலிலிருந்து

ஸ்ரீ. ஸ்ரீ. ஆசார்யர்

மொழி பெயர்த்தது.

ஸ்ரீ. தி. சு. அவிநாசி லிங்கம் அவர்கள்
பி.எ., பி.எல்., எம்.எல்.எ.

முகவுரையுடன்.

M. annamalay.

இரண்டாம் பதிப்பு

கமல நிலயம்
3, பேயாழ்வார் கோயில் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.
1936

முகவுரை

நம் தமிழ் மொழி வளர வேண்டுமானால் பிற மொழிகளிலிருக்கும் அழகிய நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட வேண்டும். அத்தகைய சேவையை ஸ்ரீ. ஸ்ரீ. ஆசார்யர் அவர்கள் செய்துள்ளார். உலகம் போற்றும் வங்காளக் கவிஞர் ஸ்ரீ ரவீந்த்ர நாத் டாகூர் அவர்களுடைய கதைகளில் சிலவற்றை அவர் மொழி பெயர்த்திருக்கிறார்; அவை மிக அழகாக இருக்கின்றன.

ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயம்,
போத்தனூர்,
20—12—1934.

தி. சு. அவிநாசி லிங்கம்,
பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ.

முதல் பதிப்பின்

முகவுரை

ஸ்ரீ. ரவீந்த்ர நாத் டாகூர் எழுதியுள்ள சிறு கதைகளின் மேன்மையைப் பற்றித் தமிழ் மக்களுக்கு அதிகமாகச் சொல்ல வேண்டியதொன்றுமில்லை....முன் தொகுதிகளிலுள்ள கதைகளைப் போலல்லாமல் இத் தொகுதியின் கதைகள் வங்காளி பாஷையிலிருந்து நேரே மொழி பெயர்க்கப் பட்டிருக்கின்றன.... இந்திய முதனூல் ஒன்றை அது எழுதியுள்ள பாஷையிலிருந்து நேரில் தமிழ்ப் படுத்துவதற்கும், இந்திய மனோ பாவங்களுக்கு அடியோடு வேறு பட்டிருக்கும் இங்கிலீஷ் பாஷையில் செய்துள்ள மொழி பெயர்ப்பு மூலமாகத் தமிழ்ப் படுத்துவதற்கும் எவ்வளவோ வித்தியாச முண்டு. இப்படி வித்தியாசம் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் இங்கிலீஷ் பாஷையின் அமைப்பு நம்முடைய பாஷையின் அமைப்புக்கு வேறு பட்டிருப்பது மாத்திரமே அல்லாமல் அதில் மொழி பெயர்க்கப் படும் இந்திய நூல்கள் இங்கிலீஷ்காரர் சுவைக்குத் தக்கப்படி தான் மொழி பெயர்க்கப் படுகின்றன. உதாரணமாக, பத்து வயதில் ஒரு சிறுமிக்கு விவாகம் செய்தார்கள் என்பதை இங்கிலீஷில் அப்படியே மொழி பெயர்க்கக் கை கூசுகிறது; ஏனெனில் இங்கிலந்தில் அவ்வயதில் கலியாணம் செய்வதென்றால் விபரீதமாகத் தோன்றும். இது ஒன்றன்று. இம்மாதிரி எவ்வளவோ விஷயங்களை இங்கிலீஷில் விட்டுவிடவோ அல்லது வேறு மாதிரி எழுதவோ வேண்டி வருகிறது. ஒரு இந்திய நூலை இங்கிலீஷ்காரரின் சுவைக்கு ஏற்றபடி செய்திருக்கும் இங்கிலீஷ் மொழி பெயர்ப்பிலிருந்து தமிழ் செய்வதனால் அதன் பூரண ரஸம் கிடைக்காமலே போய்விடக்கூடும். ஆகையால் மொழி பெயர்ப்போர் முதனூலின் பாஷையில் சிறிது பரிசயம் செய்து கொண்டாலன்றி அதன் முழு ரஸத்தையும் மொழி பெயர்ப்பில் கொண்டு வர இயலாது....

வங்காளி பாஷையில் எனக்குள்ள பயிற்சியைக் கொண்டு இப்பெருங் காரியத்தைத் துணிந்து கையிலெடுக்கப் பேருதவி புரிந்த என் வங்காளி நண்பர் ஸ்ரீமான் சுரேச சந்திர சக்ரவர்த்திக்கு நான் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன்....என் மொழி பெயர்ப்பில் தமிழ் வழுவிய இடங்களை கண்ணும் கருத்துமாய்ப் பரிசோதித்துக் கொடுத்த ஸ்ரீமான் வ. வே. சு. அய்யரவர்களுக்கு நான் பட்டுள்ள கடமையும் சிறிதன்று.

ஸ்ரீ. ஸ்ரீ. ஆசாரியன்.

கதைகள் பக்கக் குறிப்பு

தாலியா

வரலாறு

தோல்வியடைந்த ஷா ஷுஜா தன் தம்பியாகிய ஒளரங்கஜீப்புக்குப் பயந்தோடி அரக்கண தேசத்தில் அடைக்கலம் புகுந்தபோது அழகிய தன் மூன்று பெண்களையும் கூடவே அழைத்து வந்திருந்தான். அவ்வாரக்கண நாட்டரசன் அப்பெண்மணிகளைத் தன் அரசிளங்குமாரனுக்கு விவாகம் செய்துகொள்ள இச்சிப்பதைக் கண்ட ஷுஜா அதற்கு இணங்க மனமில்லாதவனாயிருந்தான். ராஜாவின் உத்தரவின்படி ஷுஜா நதியைக் கடக்கும்போது படகை மத்தியில் அமிழ்த்தி விட மாலுமிகள் முயன்றார்கள். தனக்கு நேர்ந்துள்ள ஆபத்தை ஷுஜா அறிந்துகொண்டு தன் கடைசிப் பெண்ணாகிய அமீனாவைத் தானே நதிக்குள் எறிந்துவிட்டான். மூத்த குமாரி தற்கொலை செய்துகொண்டு இறந்தாள். ஷுஜாவின் நம்பிக்கையுள்ள வேலையாட்களில் ஒருவனான ரஹமத் ஷேக் என்பவன் ஜுலேகாவை எடுத்துக்கொண்டு நீந்தித் தப்பியோடி விட்டான். ஷுஜாவும் கடைசிவரை போராடிக்கொண்டே உயிர் துறந்தான்.

வெள்ளத்தின் வேகத்தால் கொண்டுபோகப்பட்ட அமீனா தெய்வாதீனமாய் ஒரு செம்படவன் வலையில் சிக்கிக்கொள்ளவே அவனால் காப்பாற்றப்பட்டு அவன் வீட்டிலேயே வளர்ந்து வந்தாள்.

வயது சென்ற அரக்கணத்தரசன் காலஞ்சென்றான். ராஜகுமாரனும் பட்டாபிஷேகம் செய்யப்பெற்று சிங்காதனம் ஏறினான்.

க

ஒருநாள் காலையில் கிழச் செம்படவன் கோபத்தோடு வந்து “ தின்னி ! ” என்று கூப்பிட்டான். இது செம்படவன் தன் அரக்கண பாஷையில் அமீனுவுக்குச் சூட்டிய புதுப் பெயர். “ தின்னி, இன்று காலை உனக்கு என்ன வந்துவிட்டது ! வீட்டு வேலையில் ஒருதரம் கூடக் கை வைக்கவில்லையே ! என் புது வலைக்குப் பிசினும் துடைக்கவில்லை ! என் படகும்...”

அமீனு செம்படவன் கிட்ட வந்து ஆதரவோடு : “ தாத்தா, இன்றைக்கு என் அக்கா வந்திருக்கிறாள், ஆகையால் இன்று எனக்கு விடுமுறை தினம்,” என்றாள்.

“ உனக்கு அக்கா வேறு உண்டா, தின்னி ?”

ஜூலிகா திடீரென்று முன்வந்து : “ ஆகா உண்டு, நான் தான் அவள்,” என்றாள்.

கிழவன் ஒன்றும் சொல்லத் தோன்றாதவனாய் ஜூலிகாவின் அருகில் வந்து அவள் முகத்தை உற்றுப் பார்த்தான்.

திடீரென்று “ உனக்கு வீட்டுவேலை ஏதாவது தெரியுமோ ?” என்று அவளைக் கேட்டான்.

அமீனு கிழவனைப்பார்த்து, “ தாத்தா, அக்காவுக்காக வீட்டுவேலை நான் செய்துவிடுகிறேன். அவளுக்கு வீட்டு வேலை எதுவும் தெரியாது,” என்றாள்.

கிழவன் சற்றுநேரம் யோசித்துவிட்டு: "நீ எங்கே இருக்கப்போகிறாய்?" என்று ஜாலிகாவைக் கேட்டான்.

"அமீனாவோடு!" என்றாள்.

இதென்ன கஷ்டமாக வந்து சேர்ந்ததே! என்று கிழவன் தனக்குள் எண்ணிக்கொண்டே, "எங்கே சாப்பிடுவாய்?" என்று மறுபடியும் கேட்டான்.

ஜாலிகா: "அதற்கு ஒரு வழியிருக்கின்றது" என்று சொல்லிச் செம்படவன் முன்பு ஒரு பொன் நாணயத்தை இகழ்ச்சியோடு வீசி எறிந்தாள்.

அமீனா அதைப் பொறுக்கி எடுத்துச் செம்படவன் கையில் வைத்துக் கொடுத்து, "தாத்தா, இனி ஒன்றும் பேசாதே, உன் வேலையைப் பார் போ. நாழியாய்விட்டது," என்றாள்.

ஜாலிகா, எப்படி மாறுவேடம் பூண்டு பல இடங்களில் திரிந்து கடைசியில் அமீனாவின் செய்தி கிடைத்ததும் செம்படவன் குடிசைக்கு வந்து சேர்ந்தாள் என்பதைச் சொல்லப் புகுந்தால், அது பின்னும் ஒரு பெருங்கதையாக முடியும். அவளைக் காப்பாற்றின ரஸ்டம் பேக் தன் பெயரை மாற்றிக்கொண்டு அரக்கனா ராஜ சமஸ்தானத்தில் வேலை பார்த்து வந்தான்.

உ

சிறு நதி வழக்கம்போலே ஓடிக்கொண்டிருந்தது. கோடைகால ஆரம்பத்தில் குளிர்ந்து வீசும் காலைக் காற்றில் கைலு மரத்தின் ரக்தவர்ணமான பூங் கொத்திலிருந்து புஷ்பங்கள் உதிர்ந்துகொண்டிருந்தன.

மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு ஜூலிகா அமீனுவைப் பார்த்து: "நம் தந்தையின் மரணத்திற்காகப் பழி வாங்குவதற்கென்றே ஈசன் நம்மிருவரையும் காப்பாற்றினூர் என்று தோன்றுகிறது, இதைத் தவிர வேறெக்காரணமும் பொருத்தமாயில்லை," என்றாள்.

அமீனு நதியின் அக்கரையில் வெகு தூரத்தில் அடர்ந்து வளர்ந்திருந்த வனாந்தரங்களை நோக்கிக்கொண்டே தணிந்த குரலில் சொல்லலானாள்: "அக்கா, அப் பழங் கதைகளை எல்லாம் இப்போழுது நீ சொல்லாதேயம்மா, எனக்கு இவ் வுலக வாழ்க்கையில் ஏதோ ஒருவிதமான பற்றுதல் ஏற்பட்டு விட்டது. புருஷர்கள் வேண்டியிருந்தால் ஒருவரோடொருவர் போராடி வெட்டிக்கொண்டு சாகட்டும். இங்கு எனக்கு எவ்விதத் துயரமும் இல்லை."

ஜூலிகா: "சீச்சீ! அமீனு, நீ என்ன, ஷாஜாதா* விட்டுப்பெண்ணு நீ! தில்லி சிங்காதனம் எங்கே, அரக்கண நாட்டின் மூலையிலுள்ள உன் செப்படவன் குடிசை எங்கே!" என்றாள்.

---

* ஷாஜாதா என்றால் இளவரசன். தில்லி பாதுஷாவின் எல்லாப் புத்திரர்களையும் ஷாஜாதா வென்றழைப்பது வழக்கம்.

அமினு சிரித்துக்கொண்டே பதிலளித்தாள், "அக்கா, கில்பி சிங்காதனத்தைவிட ஒரு பெண் என் கிழவனுடைய இதே குடிசையையும் இதே கைலுமா ரேழியும் கவலை யொழி விரும்பி அனுபவித்துக் கொண்டிருப்பாளேயானால் அவள்பொருட்டு கில்பி சிங்காதனம் கண்ணீர்த்துளி ஒன்று கூடச் சிந்தாது."

ஜானிகா அரைவாசி தனக்கும் அரைவாசி அமினுவுக்கு மாகச் சொன்னாள்: "உண்மைதான், நீ இப்படிச் சொல்ல நேர்ந்தது உன்னுடைய தப்பு அன்று. நீயோ அப் பொழுது வெறு சிறு குழந்தை! இருந்தாலும் நீயே ஒரு முறை யோசித்துப் பார், உன் தந்தை எல்லாரையும்விட உன்னிடத்தில் அதிக அன்பு பாராட்டினர், அதுமட்டுமோ உன்னைத் தண்ணீரில் தன் கைகளாலேயே தூக்கிப்போட் டார்; அப்படிப்பட்ட தந்தை கொடுத்த மரணத்தைவிட நீ வாழ்ந்து வரும் இவ்வாழ்க்கை அதிக அருமையானதென்று நீ எண்ணிவிடலாமா! என்றைக்கு உன்னால் பழிவாங்க முடிகிறதோ அன்றைக்குத்தான் உன் உயிர் வாழ்க்கைப் பய னுடைத்தாகும்."

அமினு மறுமொழி ஒன்றும் சொல்லாமல் தூரத்தில் பார்த்துக்கொண்டிருந்தாள். வெளியில் வீசும் இக்காற்றும், இம்மர நிழலும், அவளுடைய புது யௌவனமும், அவள் மனதில் உதித்து வந்த ஒருவித இன்ப உணர்ச்சியும் அவளைப் பரவசமாக்கிவிட்டன என்பது வெளிப்படையாகத் தெரிந்தது.

சில நிமிஷங்களுக்குப் பிறகு பெருமூச்செறிந்து கொண்டே, "அக்கா நீ இங்கு சற்றிரு. வீட்டில் வேலை பாக்கி இருக்கிறது, நான் போய்ச் சமைக்காவிட்டால் கிழவனுக்குச் சாப்பாடே கிடையாது," என்று சொல்லி விட்டுப் புறப்பட்டுப் போனாள்.

ரு

ஜாலிகா அம்மாவின் நிலைமையை பற்றிச் சிந்தித்துக் கொண்டு வெகு துயருற்றவளாய்ச் சும்மா உட்கார்ந்திருந் தாள். அச்சமயத்தில் யாரோ "தப்" என்று கீழே குதித்த சத்தம் ஒன்று திடீரென்று கேட்டது. ஒருவன் பின் புறமாக வந்து ஜாலிகாவின் கண்களை மூடினான்.

ஜாலிகா திடுக்கிட்டவளாய்: "யார் அது?" என்றாள்.

குரலைக்கேட்டதும் கண் மூடுவதை விட்டுவிட்டு முன் புறமாக வந்து நின்று நெஞ்சில் எவ்விதக் குறுகுறுப்பு மின்றி ஒரு சிறுவன் ஜாலிகாவை நோக்கி, "அட, நீ தின்னியில்லையா!" என்றான். ஜாலிகா என்னவோ தின்னியைப்போல நடிக்க முயன்றதாகவும், அதைத் தன் னுடைய அசாதாரண புத்தி தீக்ஷணத்தால் தான் கண்டு பிடித்து விட்டதாகவும் எண்ணினவனைப்போலத் தோன்றி னான் அவ்விளைஞன்.

ஜாலிகா தன் ஆடையை இழுத்துப் போர்த்துக் கொண்டு இறுமாப்புடன் எழுந்து நின்று இருவிழிகளினின் றும் தீப் பொறிகள் சொரிய: "யார் நீ?" என்றாள்.

—"உனக்கு என்னைத் தெரியாது, தின்னிக்குத் தெரி யும், அவள் எங்கே?" என்று சிறுவன் கேட்டான்.

சத்தத்தைக் கேட்டுத் தின்னி வெளியே வந்து பார்த்தாள். ஜானிகாவின் கோபாவேசமும் சிறுவனுடைய மனக்குழப்பமும், வியந்த முகமும் அவளுக்கு அடங்காத சிரிப்பை உண்டாக்கி விட்டன.

கிட்ட வந்து, "அக்கா, அவன் பேச்சை நீ சிறிதும் பொருட்படுத்தாதே. அவன் என்ன ஒரு மனிதனா? அவன் ஒரு காட்டு மான்போலே. உன்னிடத்தில் ஏதாவது சிறிது அமரியாதையாய் அவன் நடந்துகொண்டிருப்பானேயானால் நான் அவனை இப்பொழுதே கண்டிக்கிறேன். தாலியா, நீ என்ன செய்தாய்?" என்றாள் அமீனா.

சிறுவன் உடனே பதில் சொன்னான்: "அவளைத் தின்னியென்று எண்ணி அவள் கண்களை மூடினேன், ஆனால் அவள் தின்னியாக இருக்கவில்லை."

தின்னி அடக்கமொண்ணாத கோபத்தோடு: "நீ இன்னும் விடவில்லையா உன் விளையாட்டுத்தனத்தை? உனக்கு நாக்குத்தான் எவ்வளவு நீளம்? தின்னி கண்களை எப்போது நீ மூடி இருக்கிறாய்? உனக்குத்தான் என்ன சாகஸம்!" என்றாள்.

—"கண்களை மூடினதற்கு அதிக சாகஸம் ஒன்றும் வேண்டியதில்லை: அதோடு கூட முன் பழக்கம் வேறு இருக்கிறது. இருந்தாலும் தின்னி, உண்மையைச் சொல்லிவிடுகிறேன், இன்று நான் பயந்தே தான் போய் விட்டேன்," என்றான் சிறுவன்.

இப்படிச் சொல்லிவிட்டு ஜானிகாவை மறைவாக விரலால் சுட்டிக்காட்டிக் கொண்டே அமீனாவின் முகத்தைப் பார்த்துச் சத்தமின்றிச் சிரித்து நின்றான்.

—" இல்லை, நீ சுத்த முரட்டுப் பயல்! ஒரு அரசிளங் குமரி முன் நிற்க யோக்கியதை அற்றவன். இனி மரியாதை யோடு நடந்துகொள்ள உனக்குக் கற்பிக்க வேண்டியது அவசியம். இதோ பார் இப்படி ஸலாம் செய்," என்று சொல்லி அமீனா இளமை பூத்த வல்லி போன்ற தன் தேகத்தை வெகு பிரியகரமாக வளைத்து ஜாலக்காரமாக ஸலாம் செய்தாள். சிறுவனும் வெகு கஷ்டப்பட்டு அரை யும் குறையுமாக அவளைப்போலச் செய்தான்.

" இப்படிச் செய்துகொண்டு மூன்றடி பின்னுக்கு வா" என்றாள். சிறுவனும் பின் புறமாகவே நகர்ந்தான்.

" மறுபடி ஸலாம் செய்."

அவன் ஸலாம் மறுபடியும் செய்தான்.

இம்மாதிரிப் பின்புறமாய் நகர்வதும் ஸலாம் செய்வது மாகச் சிறுவனை அமீனா குடிசை வாயிலுக்கு அழைத்துவந்து " உள்ளே போ," என்றாள். சிறுவன் அப்படியே குடி சைக்குள் போனான்.

அமீனா வெளியிலிருந்து கதவைப் போட்டுக்கொண்டு " ஏதாவது வீட்டு வேலை செய் போ, அடுப்பு அவிந்து போகாமல் பார்த்துக்கொள்," என்று சொல்லிவிட்டு தன் அக்காவுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள்.

" அக்கா கோபித்துக் கொள்ளாதே, இவ்விடத்து மனிதர்கள் இம்மாதிரிதான் இருக்கிறார்கள். அவர்களோடு என்ன மாரடித்துக்கொண்டும் பயனில்லை," என்றாள்.

ஆனால் அமீனாவின் முகத்திலாவது, அவள் நடத்தையி லாவது அவர்களுடைய மாதிரிக்காக வருத்தப்படுவதாய் ஒரு குறியும் காணப்படவில்லை. இதற்கு விரோதமாக அவ் விடத்து மனிதர்களிடத்தில் அவளுக்கு வரம்பு கடந்த பக்ஷம் இருப்பதாய்க் காணப்பட்டது.

ஜாலீகா தனக்குள்ளிருந்த கோபத்தை வெளியிட்டு: "அமீனா, உன் விஷயத்தில் எனக்கு, உண்மையில், ஆச்சரிய முண்டாகிறது. யாரோ வெளிப்பயல் ஒருவன் வந்து உன் னைத் தொடவாவது! என்ன ஸாகஸமடீ, உனக்கு!"

அமீனாவும் அக்கா சொல்வதை ஒப்புக்கொண்டவள் போல: "ஆமாம், அக்கா, யாராவது ஒரு பாதுஷா மகனோ அல்லது நவாப்பு மகனோ இப்படி நடந்து கொண்டிருப் பானேயானால் அப்பொழுதே அவனை அவமானம் செய்து தூர விரட்டி யிருப்பேன்," என்றாள்.

இதைக் கேட்டு ஜாலீகாவுக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்தது—சிரித்துக்கொண்டே, "சத்தியமாகச் சொல்லடீ, பார்ப்போம், அமீனா, உனக்கு இவ்வுலகத்தில் அதிகப்பற்று இருக்கிறது என்று சொன்னாயே, அது இம் முரட்டுச் சிறு வன் பொருட்டுத் தானே?" என்று கேட்டாள்.

அமீனா சொன்னாள்: "உண்மையைச் சொல்லுகிறேன் கேள், அக்கா, அவன் எனக்கு அநேக விதத்தில் உபகார மாக இருக்கிறான். புஷ்பங்கள் கொய்தும், பழங்கள் பறித்தும் கொடுப்பான். வேட்டையில் கிடைத்ததைக் கொண்டு வருவான். ஏதாவது காரியத்திற்காக நான் கூப்

பிட்டால் ஓட்டமாய் ஓடி வருவான். பலமுறை அவனைக் கண்டிக்க முயன்றேன், அது பயன் படவில்லை. நான் சிவந்த கண்களுடன், தாளியா, உன் செய்கை எனக்குப் பிடிக்கவில்லை, என்று அதட்டிச் சொன்னால்— தாளியா என் முகத்தை வியப்புடன் பார்த்துக் கொண்டு புன்னகை பூத்து நிற்பான். இத் தேசத்தில் பரிகாஸம் செய்வது இப்படித்தான் போலும். அவனுக்கு அடி விழுந்தால் பின்னும் சந்தோஷம் அதிகம். அந்தப் பரீக்ஷையும் செய்து பார்த்தாயிற்று. இதோ நீயே பார், இப்பொழுது அவனையோ வீட்டில் அடைத்தேன்—அவனோ பேரானந்தத்தி லிருக்கிறான். கதவைத் திறந்து பார்த்தால் முகமும் கண்ணும் சிவக்கச் சிவக்க மனமுவந்து நெருப்பை ஊதிக் கொண்டிருப்பான். இப்படிப்பட்டவனை என்ன செய்யலாம் சொல்லு, அக்கா! என்னால் ஒன்றுமே செய்ய முடிய வில்லை.''

ஜூலீகா: "ஆனால் நான் செய்து பார்க்கிறேன், பொறு,'' என்றாள்.

அமீனா சிரித்துக்கொண்டே கெஞ்சினாள்: "உன் இரண்டு கால்களிலும் விழுகிறேன், அக்கா! நீ அவனோடு ஒன்றும் சொல்லவேண்டாம்.'' அமீனா இப்படிக் கெஞ்சிக் கேட்டுக்கொண்ட மாதிரியிலிருந்து அச்சிறுவனை அவள் அருமையான மான் போலே வளர்த்து வருவதாகவும், அதன் காட்டுச் சுபாவம் இன்னும் விட்டில்லைபோலவும்— அன்னியர்களைப் பார்த்தால் அது ஒரு வேளை ஓடி விடுமோ என்று அவள் அஞ்சுவது போலவும் காணப்பட்டது.

அச்சமயத்தில் செம்படவன் வந்து, "இன்று தாளியா வரவில்லையா, தின்னி?" என்று கேட்டான்.

—"ஆகா, வந்திருக்கிறான்."

—"அவன் எங்கே?"

—"வெகு உபத்திரவம் செய்தான், அதற்காக அவனை இந்த அறையில் அடைத்து வைத்திருக்கிறேன்."

கிழவன், சற்று ஆலோசித்து, "அவன் விஷமம் செய்தால் நீ பொறுத்துக்கொள், தின்னி. சிறுவயதில் எல்லாரும் அப்படித்தான் முரட்டுத்தனம் செய்வார்கள். அதிகமாக அவனைக் கண்டித்து விடாதே. தாளியா நேற்று ஒரு கழு (பொன் காசைப்) கொடுத்து என்னிடமிருந்து மூன்று மீன் வாங்கினான்," என்றான்.

—"நீ ஒன்றும் யோசிக்கவேண்டாம், தாத்தா, இன்று நான் அவனிடமிருந்து இரண்டு கழு வாங்கித் தருகிறேன். நீ அதற்காக ஒரு மீன் கூடக் கொடுக்க வேண்டாம்." என்றாள் அடீனா.

கிழவன், தான் வளர்த்த பெண்ணுக்கு இச்சிறு வயதிலேயே இவ்வளவு கெட்டிக்காரத்தனமும், இவ்வளவு அறிவும் இருப்பதைக் கண்டு மனம் மகிழ்ந்து அவள் தலையைக் கையால் தடவிக்கொடுத்துவிட்டுச் சென்றான்.

௪

என்ன ஆச்சரியம் இது! தாளியா வந்து போய்க் கொண்டிருப்பதில் ஜானகிகாவுக்கு யாதொரு கெடுதியும் இருப்பதாகத் தோன்றவில்லை! யோசித்துப் பார்த்தால் இதில் யாதொரு ஆச்சரியமுமிராது. ஏனெனில் நதிக்கு நீரோட்டம் ஒரு புறத்திலும், சரிந்த கரை மற்றொரு புறத்திலும் இருப்பதுபோலவே ஸ்திரீகளுக்கு மனப்போக்கு ஒரு புறமும், உலகப் பழிப்பின் அச்சம் மற்றொரு புறமுமாக இருக்கின்றன. ஆனால் நாகரீக வாழ்க்கைக்கு வெளியிலுள்ள அரக்கண நாட்டின் இம்மூலையில் உலகப் பழி என்பது ஏது?

இங்கு கேவலம் பருவகாலப்படி செடிகள் புஷ்பித்து வரும்; எதிரில் நிலா நதி மாரிகாலத்தில் வெள்ளமாய் ஓடுவதும், சரத் காலத்தில் தெளிவதும், கோடை காலத்தில் அருகுவதுமாக இருக்கும்; பக்ஷிகள் தான் இரைந்து கூவிக்கொண்டிருக்கும், ஆனால் அதில் சிறிது கூட பழிப் பேச்சுக்கு இடமிராது; தென்றல் அடிக்கடி அக்கரையிலுள்ள கிராமத்திலிருந்து மனிதக்கூட்டங்களின் பேரொலியைச் சுமந்து வருமேயன்றி செவியோடு செவியாய் அவர் சொல்லிக்கொள்ளும் பழிப் பேச்சுகளைக் கொண்டு வராது.

காலியாயிருக்கும் ஒரு வீட்டின்மேல் எப்படிக் காட்டுச்செடிகள் நாளடைவில் முளைத்து விடுமோ அப்படியேதான் இவ்விடத்திலும்; சில தினங்களுக்குள் பிரகிருதியின் மறைவான தாக்குதலால் உலக வாழ்க்கையில் மனிதர்கள் எழுப்பியுள்ள உறுதியான சுவர்கள்,

கண்ணுக்குத் தெரியாமலே விளையுண்டுபோம். காட்டுப்புறத்தி லும் சுற்றியுள்ள இயற்கை உலகொடு ஒன்றாகக் கலந்து விடுகின்றன. ஒரே தன்மையுள்ள ஸ்திரீ புருஷர் இருவர் ஒன்று கூடி இருப்பது மானிடர்களுக்கு எவ்வளவு அழகாகக் காணப்படுமோ அவ்வளவு அழகானது வேறொன்றுமில்லை. அவர்களுக்கு இவ்வளவு ரகசிய முள்ளதும், இவ்வளவு சுக முள்ளதும், இவ்வளவு ஆழ்ந்த வியப்புள்ளதுமான இக் காட்சிக் கருணையின் சித்திர ஜதையில் ஞானசீகாவின் குண லவமும் களைப்பாவமும் தாமாகவே தளரவே, புஷ்பித் திருக்கும் கைவு மர நிழலில் அபிறையும் தாளியாவும் ஒன்றுகூடி மனோகரமாய் விளையாடுவதைப் பார்த்து அவள் பேரானந்த மடைவாள்.

அவளுடைய இள நெஞ்சிலும் கூடத் திருப்தி பெரும் அவா ஒன்று ஒருவேளைத் தோன்றியிருக்கக்கூடும்; அதன் சுக துக்கங்களின் சலனங்களும் அவளுக்குள் உண்டா யிருக்கலாம். ஏனெனில் என்றைக்காவது ஒரு நாள் சிறு வன் வரத் தாமதமானாலும், அவனுக்காக அபிறை எதிர் பார்த்துக்கொண்டிருந்தாலும் ஞானசீகா அதிக பதைபதைப் புடன் இருப்பாள்: அவர்களிருவரும் சந்திக்கும்போது, ஒரு சித்திரக்காரன், தான் அப்பொழுதுதான் முடித்த ஒரு படத்தை எப்படிச் சற்று தூரம் ஒதுங்கி நின்று பார்ப் பானோ அப்படியே இவளும் அன்போடும் புன்சிரிப்போ டும் அவர்களைப் பார்ப்பாள்; வேறு சில சமயங்களில் வெறும் பாசாங்கை செய்து அவர்கள் திட்டிக்கொண் டால், அபிறையை வீட்டில் வைத்துவிட்டு, சிறுவன் அவ ளோடு அவளைச் சந்திக்க வரும்போது அவளைக் கடிப்பாள்.

ஏக சக்கிராதிபதியா யிருப்பதும் நடு வனத்திலிருப்பதும் ஒரே விதமானது தான். இரண்டிலும் சுதந்திரமுண்டு. இவ்விரண்டு அரசாட்சிகளிலும் தானே தனித் தலைவன். இரண்டிலும் மற்றொருவன் பேச்சை கேட்கவேண்டியதில்லை. இரண்டிற்குள்ளும் பிரகிருதிக்குச் சுபாவமான ஒரு பெருந்தன்மையும், நேர்மையும் இருக்கின்றன. உலக சம்பிரதாயங்களில் ஒரெழுத்து கூடத் தவராமல் யார் காலம் கழிக்கிறார்களோ அவர்களுடைய வாழ்க்கையே வேறு. அவர்கள் மேலானவர்களிடத்தில் அடிமைகள் போலவும் கீழானவர்களிடத்தில் பிரபுக்கள் போலவும் நடிப்பார்கள்; தமக்குள்ள நிலைமைப் போய்விட்டால் ஒன்றும் செய்யத் தெரியாதவர்களாய்க் கலங்கி நிற்பார்கள். காட்டுத் தன்மை நிறைந்த தாளியா ஏக சக்கிரவர்த்தினியாகிய பிரகிருதியின் கட்டுக்கடங்காத செல்வக்குழந்தை. அரசிளங்குமரிகளுக்கு முன்பு அவளுக்கு எவ்வித சங்கோசமுமில்லை, அரசிளங் குமரிகளும் அவளைச் சம பதவியுடையவளாகவே நடத்தினார்கள். சிரிப்பு, நேர்மை, வேடிக்கை, யாது நேரினும் அஞ்சாமை ஆகிய இவைகளோடு விரிந்த வாழ்க்கையை அனுபவித்து வரும் இவர்கள் நடத்தையில் தரித்திரத்தின் குறி எதுவுமே காணப்படவில்லை.

ஆனால் இப்படிப் பலவிதமாக விளையாடிவரும் காலத்தில் இடையிடையில் ஜூலிகாவின் நெஞ்சில் "ஐயையோ" என்ற கூக்குரல் கிளம்பும்—ஒரு சக்கிரவர்த்தி புத்திரியின் வாழ்க்கை இப்படியா முடிவது! என்று தனக்குள் சிந்திப்பாள்.

ஒருநாள் காலையில் தாளியா வந்தவுடனே அவன் கையைப் பிடித்துக்கொண்டு "தாளியா, இவ்விடத்திய அரசனை எனக்குக் காட்டுவாயா?" என்று கேட்டான்.

—காட்டுவேன், எதுக்குச் சொல்லு பார்ப்போம்?

—என்னிடம் கைவாள் ஒன்றிருக்கிறது. அதை அவன் மார்பில் புதைக்கவேண்டும்.

முதல் முதலில் தாளியா சிறிது ஆச்சரியமடைந்தாள். பிறகு ஜாலிகாவின் முகம் கொடுமையினால் கடுகடுத்திருப்பதைக் காணவே அவள் முகத்தில் சிரிப்பு பொங்கி வழிந்தது. ஏனெனில் இதுவரை இவ்வளவு விநோதமான பேச்சை அவள் கேட்டதேயில்லை!—இதைப் பரிகாசமாக எடுத்துக் கொண்டாலுங்கூட, ஒரு ராஜ புத்திரிக்கு இது எவ்வளவு பொருத்தமுள்ளது! ஒரு பேச்சில்லை, ஒரு வார்த்தையில்லை, முதன்முதலாம் சந்திக்கும்போதே உயிரோடிருக்கும் ஒரு அரசன மார்பைக் கைவாளால் துளைத்துவிட வேண்டுமாம். இப்படிப்பட்ட வெகு அக்கிரமமான விவகாரத்தில் அரசன் ஒன்றும் சொல்லமுடியாமல் திகைத்து நிற்கும் சித்திரம் அவள் மனதில் இடைவிடாது தோன்றவே வெகு கஷ்டப்பட்டு அவள் வயிற்றிலடங்கிக்கொண்டிருந்த நகைப்பு அடிக்கடி அவளையும் மீறி வெடித்துக் கொண்டு வெளிவரும்.

௫

இதற்கு மறுநாளே ரஹ்மத் ஷேக் ஜாலிகாவுக்கு ரகசியமாய் ஒரு கடிதம் எழுதினான். அரக்கனைத்துப் புது அரசன் செப்டாவன் குடிசையில் இரண்டு சகோதரிகளும்

இருப்பதைத் தெரிந்துகொண்டு விட்டதாகவும், ஒளிந்து அமீனாவைப் பார்த்ததில் அவள்மேல் அவன் மோகங் கொண்டதாகவும், விவாகத்திற்காகச் சீக்கிரத்திலேயே அவளை அரமனைக்கு அழைத்து வர ஏற்பாடுகள் நடந்து வருவதாகவும், பழி வாங்குவதற்கு இதைவிட சேர்த்தியான சந்தருப்பம் நேராது என்றும் தெரியவந்தது.

ஜாலிகா அப்போது அமீனாவின் கையை கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு, "ஈசன் கருத்து இதில் வெகு தெளிவாக விளங்குகிறது. அமீனா! உன் வாழ்க்கைக் கடமை முடிக்கத் தருணம் இம்முறை வாய்த்திருக்கிறது. இப்பொழுது நீ விளையாட்டுத்தனமாயிருப்பது அழகாகாது." என்றாள்.

தாளியாவும் அப்போது அங்கிருந்தான், அமீனா அவன் முகத்தை பார்த்தாள். அவன் உல்லாசமாகச் சிரித்துக் கொண்டே தானிருந்தான்.

அமீனா அவன் சிரிப்பைப் பார்த்து உயிர் நிலையில் அடிபட்டவள் போலச் சொன்னாள்: "தாளியா, நான் ராஜ மகிஷியாகப் போகிறேன், தெரியுமா!"

தாளியா சிரித்துக்கொண்டே "அதிக காலம் நீ தான் அப்படி இருக்கப் போகிறதில்லையே?" என்றான்.

அமீனா மனக்கலக்கமும் வியப்பும் கொண்டு "உண்மையாகவே இது ஒரு காட்டு மான், இதோடு மனிதர்களைப் போல நான் வியவகாரம் செய்தது பைத்தியக்காரத்தனம்," என்று தனக்குள் எண்ணிக் கொண்டாள்.

அமீனா, தாளியாவின் மனித உணர்ச்சியை எழுப்ப இன்னும் ஒரு முறை பார்க்கலாம் என்று எண்ணி,

"தாலியா, அரசனைக்கொன்ற பிறகு நான் திரும்பி வரப் போகிறேனா!" என்றாள்.

தாலியா அதன் கொடுமையை அப்பொழுது தான் அறிந்து கொண்டவன் போலத் தென்பட்டாலும் அமைதி யும் குலையாமல், "ஆனால் திரும்புவது உண்மையாகவே கடினம் தான்," என்றான்.

அரண்மனையின் அந்தப்புரம் முழுதும் ஒரே இருளால் மூடப்பட்டது போலாயிற்று.

ஜமிகாவின் புறமாகத் திரும்பி, பெரு மூச்செறிந்து கொண்டு "அக்கா, நான் தயாராக இருக்கிறேன்!"

என்று சொல்லிவிட்டு, தாலியாவை நோக்கி புண்பட்ட மனதுடன் பரிகாசம் செய்பவளைப்போல: "நான் ராணி யானதும் ராஜாவுக்கு விரோதமாய் சதியாலோசனையில் சேர்ந்ததற்காக உன்னை முதல் முதலில் தண்டிக்கச் செய்து விட்ட பிறகு தான் நான் செய்யவேண்டியதைச் செய்யப் போகிறேன்," என்றாள்.

தாலியா இதைக்கேட்டு இன்னும் அதிக உல்லாசத் தோடு இருந்தான்; ஏனெனில் எண்ணம் ஒன்று செயலாக மாறுவதற்குள் இடையில் எத்தனையோ விநோதங்கள் நடை பெறும்.

கா

குதிரையாட்களும், காலாட்களும், கொடிகளும், யானைகளும், வாத்தியங்களும், விளக்குகளும் செம்படவன் குடிசை வாயிலைப் பிளந்து தள்ளிவிடும் போலிருந்தன. அரமனையிலிருந்து இரண்டு பொற் பல்லக்குகள் வந்திருந்தன.

அமீனா ஜாலிகாவினிடமிருந்து கைவாள் ஒன்றைப் பெற்றுக்கொண்டு அதில் தந்தத்தால் செய்திருந்த வேலைத் திறத்தைச் சற்று நேரம் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள். பிறகு உடையை விலக்கி அதன் கூர்மையைத் தன் மார்பிலேயே ஒரு தடவைப் பரீக்ஷை பார்த்தாள். வாழ்க்கையாகிய மொட்டின் காம்புக்கு அருகில் கைவாளால் ஒரு முறை தொட்டுப் பார்த்து விட்டு, அதை உறையிலிட்டுத் தன் உடைக்குள் மறைத்து வைத்துக் கொண்டாள்.

இம்மரண யாத்திரைச் செய்வதற்கு முன் தாளியாவை ஒரு முறைச் சந்திக்க வேண்டும் என்பது அவளுடைய அந்தரங்க ஆசை. ஆனால் அவன் நேற்றுமுதல் தென்படவேயில்லை. விளையாட்டுத் தனமாய்ச் சிறித்துக்கொண்டிருக்கும் அந்தத் தாளியாவின் இதயத்தில் அன்பின் ஜ்வாலை சிறிதளவாவது இருக்குமோ இல்லையோ என்பது அவளுக்கு விளங்கவில்லை.

தன் குழந்தைப் பருவத்தைக் கழித்த இடங்களைப் பல்லக்கு ஏறுவதற்கு முன் அமீனா கண்ணீர் வழியாகப் பார்த்தாள்; அவள் வீட்டு மரமும், அவள் வீட்டு நதியும் அப்படியே தான் இருந்தன. செம்படவன் கையைப் பிடித்துக்கொண்டு விம்மி விம்மி அழும் குரலில் சொன்னாள்: "தாத்தா இப்பொழுது நான் புறப்படுகிறேன். இன்னி போய்விட்டால் உன் வீட்டு வேலைகளை யார் செய்வார்கள்?"

கிழவன் சிறு குழந்தையைப்போலே ஒரே அழுகை யாய் அழுதான்.

அமீனு அவனைப் பார்த்து: “தாத்தா, தாளியா மறுபடி இவ்விடம் வருவானாகில் அவனிடம் இம்மோதிரத்தைக் கொடு. நின்னி போகும் சமயத்தில் கொடுத்தாள்; என்று சொல்லு,” என்றாள்.

இதைச் சொல்லிவிட்டு அவசரமாய்ப் பல்லக்கில் ஏறி உட்கார்ந்தாள். பல்லக்கும் வெகு ஆடம்பரத்துடன் புறப்பட்டது. அமீனுவின் குடிசை, நதிக்கரை, தைலு மரத்தின் நிழல் எல்லாம் இருளடைந்து சந்தடியற்றுக் கிடந்தன.

காலக்கிரமத்தில் இரண்டு பல்லக்குகளும் தோரண வாயிலைக் கடந்து அந்தப்புரத்திற்கு வந்து சேர்ந்தன. இரு சகோதரிகளும் பல்லக்குகளைவிட்டு வெளியேறினார்கள்.

அமீனு முகத்தில் சிரிப்பு இல்லை, கண்களில் நீர்த்துளி களின் குறியுமில்லை. ஜமீலாவின் முகம் வெறுத் திருந்தது.

செய்யவேண்டிய கருமம் கொல்லையிலிருந்தவரை அவளுடைய உற்சாகம் தீவிரமாகவே இருந்தது—ஆனால் இப்போது அவள் துடிக்கும் நெஞ்சோடும் படபடைக்கும் அன்போடும் அமீனுவைக் கட்டித் தழுவினாள். “புது அன்பின் காம்பிலிருந்து மலர்ந்து வரும் இப்புஷ்பத்தைக் கொய்து என் ரத்த வெள்ளத்தில் மிதக்கவிடப் போகிறேன்!” என்று தனக்குள் எண்ணினாள்.

ஆனால் வேறு யோசனைக்கு அது காலமன்று. சேடிகள் வழிகாட்டிச் செல்ல, நூறாயிரம் விளக்குகள் குலையாது ஒளி வீசி நிற்க, அவைகளுக் கிடையே இவ்விருவரும் கன

விலே போல நடந்து சென்றார்கள். கடைசியாகப் படுக்கை யறையின் வாயிலுக்கருகில் ஒரு நிமிஷம் தாமதித்து, அமீனா ஜூலிகாவை பார்த்து, "அக்கா" என்றழைத்தாள்.

ஜூலிகா அமீனாவை இறுகக் கட்டிக் கொண்டு முத்தமிட்டாள்.

இருவரும் மெல்ல மெல்ல அறைக்குள் நுழைந்தார்கள்.

ராஜ உடைகளோடு அறையின் மத்தியில் மகமல் மெத்தையின்மேல் அரசன் உட்கார்ந்திருந்தான். அமீனா சங்கோசத்துடன் வாயிலுக் கருகிலேயே நின்று கொண்டிருந்தாள்.

ஜூலிகா முன்னே சென்று, அரசனுக்கு அருகில் போய்ப் பார்த்தாள். அரசன் அகங் களிப்புகொண்டு புன்முறுவலோடு வீற்றிருந்தான்.

ஜூலிகா படபடப்புடன் "தாளியா!" என்று கூவினாள். அமீனா மூர்ச்சித்து விழுந்தாள்.

தாளியா எழுந்திருந்து அடிபட்ட பக்ஷியைப்போலே அவளை இரண்டு கைகளிலும் எடுத்துக்கொண்டு படுக்கையில் விட்டான். அமீனா மூர்ச்சை தெளிந்ததும் தன் மார்பிலிருந்த கைவாளைச் சற்றே வெளியில் இழுத்து அக்காவின் முகத்தைப் பார்த்தாள். அக்காவும் தாளியாவின் முகத்தைப் பார்த்தாள், தாளியா ஒன்றும் சொல்லாமல் சிரித்த முகத்தோடு இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தான். கைவாளும் உறையிலிருந்து கொண்டே தன் முகத்தைச் சிறிது வெளியில் காட்டி இக்கூத்தைக் கண்டு கடகட வென்று சிரித்துக்கொண்டிருந்தது.

பொன் வேட்டை

௨

ஆனந்தநாத சக்கரவர்த்தியும் வைத்தியநாத சக்கரவர்த்தியும் தாயாதிகள். இருவருக்குள் வைத்தியநாதன் ஸ்திதி சற்று கேடுற்றிருந்தது. வைத்தியநாதன் தந்தையாகிய மகேச சந்திரனுக்கு உலக வியவகாரம் சிறிதும் தெரியாது. அவன் எல்லா விஷயங்களிலும் தமையன் சிவநாதனையே பொறுப்பாளியாகச் செய்திருந்தான். சிவநாதன் தம்பியினிடத்தில் அதிக அன்புப் பாராட்டி அதற்கு பதிலாக அவனுடைய உலக சம்பத்தை எல்லாம் தனதாக்கிக் கொண்டான். கேவலம் சோற்றிற்கு மாத்திரம் சில 'கும்பினி' பத்திரங்கள்* மிகுந்தன; மடம்போலக் கொக்களிக்கும் இவ்வுலக வாழ்க்கையில் இப்பத்திரங்களே தான் வைத்தியநாதனுக்குக் கிடைத்தன.

சிவநாதன் பெரு முயற்சியுடன் தன் மகன் ஆனந்தநாதனுக்கு ஒரு தனிகன் மகளை விவாகம் செய்துவைத்து அதன் மூலமாகத் தன் தனவிருத்திக்கு மற்றொரு வழி ஏற்படுத்திக் கொண்டான். மகேச சந்திரனோ ஏழு பெண்களுடைய ஒரு தரித்திர பிராமணன்பேரில் இரக்கங்கொண்டு சீதன

* ஆங்கில ஆட்சி இந்தியாவில் முதல் முதலில் ஒரு வியாபார சங்கமாகிய East India Company யால் நடைபெற்றபோது ஸர்க்கார் கடன்பத்திரங்களைக் 'கும்பினி' பத்திரங்கள் என்றழைப்பது வழக்கம்.

மாக ஒரு காசுகூட வாங்காமல் அவனுடைய முதல் குமாரியைத் தன் மகனுக்கு விவாகம் செய்துகொண்டான். அவனுடைய பெண்களையும் தன் வீட்டிற்கு அவன் அழைத்துச் சென்று விட்டதற்குக் காரணம் தனக்கு ஒரு பிள்ளைக்கு மேல் இல்லாததோடு அவ்வேழை பிராமணன் அப்படிச் செய்யும்படி அவனைக் கேட்டுக்கொள்ளவுமில்லை. ஆனால் விவாகத்தின் காரணமாகத் தன் சக்திக்கு மீறி அவனுக்குப் பல உதவி செய்தான்.

தந்தை இறந்ததும் வைத்தியநாதன் அந்தச் சொற்பப் பத்திரங்களை வைத்துக்கொண்டு வெகு திருப்தியுடனும் மனமகிழ்ச்சியுடனும் காலம் கழித்து வந்தான். தனக்கு ஒரு தொழில் வேண்டுமே என்பது அவன் மனதில் உதிக்கவே இல்லை. தன் வேலைகளுக்கிடையில் அவன் மரக்கிளைகளை வெட்டிவந்து உட்கார்ந்துகொண்டு வெகு அக்கறையோடு குச்சிகளைத் தயார் செய்து வைப்பான். ஊரிலுள்ள பையன்கள், வாலிபர்கள் எல்லோரும் இக்குச்சிகளுக்காக அவனிடம் வருவார்கள். அவனும் அவைகளை இலவசமாகவே கொடுத்து விடுவான். மேலும் சொல்லமுடியாத உற்சாகத்தோடு மீன் பிடிக்கும் தூண்டில், காற்றாடி முதலியவைகளைச் செய்வதிலேயே அவன் பெரும்பாலும் காலம் கழிப்பான். நன்றாகச் சில நேர்மை படித்த எதற்கு அதிக முயற்சியும் அதிக காலமும் வேண்டுமோ, எதற்கு உலக ரீதியில் அவ்வளவு முயற்சியும் காலமும் செலவிடுவது வீண் என்று கருதியதோ அப்படிப்பட்ட வேலை ஒன்று கிடைத்து விட்டால் அவன் உற்சாகத்திற்கு அளவே இல்லை.

அக்கிரகாரத்தின் சண்டைச் சச்சரவுகளும், வம்புப் பேச்சுகளும் புனிதமான பெரிய கோயில் மண்டபத்தின் புகைபோலக் கிளம்பிப் பரவிவரும் சமயத்தில் வைத்திய நாதன் கையில் ஒரு கத்தியும் பரங்கிக்காயுமாகக் காலை முதல் (மத்தியான போஜன வேளையும் நித்திரைவேளையும் தவிர) சாயங்காலம் வரையில் தன் வீட்டுத் தாழ்வாரத்தில் தனியாகக் காலம் கழிப்பதைப் பலமுறை காணலாம்.

ஷஷ்டி* தேவியின் அருளால் சத்துருக்கள் வாயில் மண்ணைப் போட்டுவிட்டு வைத்தியநாதன் இரண்டு ஆண் குழந்தைகளையும் ஒரு பெண் குழந்தையையும் பெற்றான்.

அவன் மனைவி மோக்ஷதா சுந்தரியின் மனவருத்தம் மாத்திரம் நாள்தோறும் வளர்ந்து கொண்டே வந்தது. ஆனந்தன் வீட்டில் விசேஷங்கள் எப்படி நடைபெறு கின்றனவோ அப்படி ஏன் வைத்தியநாதன் வீட்டிலும் நடைபெறக்கூடாது? அவ்வீட்டு வித்தியா வாசினியின் கைக்கட்டிகளும், காசி துப்பட்டாக்களும், வேடிக்கைப் பேச்சுகளும், பரிமாறுதல்களும், அதே அளவு விமரிசையோடு மோக்ஷதாவுக்கும் இல்லாமற்போனது பெரிய நியாயத் திற்கே விரோதமல்லவா! ஏனெனில் இருவர்களுடைய குடும்பமும் ஒன்றுதானே! தம்பியை வஞ்சித்துப் பெற்ற பொருளிலிருந்தல்லவா அவர்களுக்கு இவ்வளவு மேன்மை! இதை நினைக்க நினைக்க மோக்ஷதாவின் மனதில் தன்

* ஷஷ்டி என்பது வங்காளத்தில் ஒருதெய்வம். அதன் அனு கிரகத்தால் புத்திர சம்பத்து கிடைக்கும் என்று அதைப் பூஜிப்பார்கள். தமக்கு அதிக குழந்தைகள் பிறந்து விட்டால் தம் குலநாசத்தை விரும் பும் சத்துருக்கள் வாயில் மண்ணைப் போட்டது போலாகும்.

மாமனாரைக் குறித்தும், தன் மாமனாரின் ஒரே மகளைக் குறித்தும் அவமதிப்பும் இகழ்ச்சியும் பொங்கி வடியும். தன் வீட்டில் எதுவும் அவளுக்குத் திருப்திகரமாக இருக்க வில்லை. ஒவ்வொன்றும் அருவருப்பும் மானக்கேடும் உண் டாக்கக் கூடியதாக இருந்தது. படுக்கும் கட்டில் செத்த பிணத்தைத் தூக்கக்கூடத் தகுதியற்றது! ஏழு தலைமுறை போயும் உறவினரில்லாத அநாதையான வெளவால் குஞ்சும் இந்தப் பாழடைந்த வீட்டில் வாசம் செய்ய விரும்பாது! வீட்டுத் தட்டு முட்டுகளைப் பார்த்தால் எல்லாம் துறந்த சன்னியாசிகள்கூடக் கண்ணீர் விடுவார்கள்! ஒன்றைப் பத் தாக்கிச் சொல்லும் இப்பேச்சுகளை மறுத்துப்பேசப் புருஷர் களாகிய பயங்காளிகளுக்குச் சிறிதும் முடியாத காரியமாகை யால் வைத்தியநாதன் வெளித் தாழ்வாரத்தில் உட்கார்ந்து கொண்டு இருமடங்கு கவனத்தோடு குச்சுகளைச் சீவுவான்.

ஆனால் மௌன விரதம் தானாகவே கஷ்டத்தைப் போக்கிவிடாது. சில தினங்களில் கணவனைத் தன் சிறப வேலை செய்யவொட்டாமல் மோக்ஷதா அந்தப்புரத்திற்கு அழைத்து முகத்தை ஒரு புறமாகத் திருப்பிக்கொண்டு வெகு கம்பீர தொனியில், "பால்காரனோடு சொல்லிப் பாலை நிறுத்திவிடுங்கள்," என்பாள்.

வைத்தியநாதன் சிறிது நேரம் சும்மா இருந்து விட்டு, பயந்த குரலில், "பாலையா?—அதை நிறுத்திவிட்டு என்ன செய்கிறது?—குழந்தைகள் எதைக் குடிக்கும்?" என்று கேட்பான்.

"கஞ்சி," என்று பதிலளிப்பாள்.

வேறு சில நாட்களில் இதற்கு முற்றும் மாறான பேச்சுகள் நடைபெறும்—அவள் வைத்தியநாதனைக் கூப்

பிட்டுச் சொல்லுவாள்: "எனக்கு ஒன்றும் தெரியாது. செய்யவேண்டியதை எல்லாம் நீங்களே செய்யுங்கள்."

வைத்தியநாதன் சோர்ந்த முகத்தோடு, "செய்ய வேண்டியது என்ன இருக்கிறது?" என்று கேட்பான்.

"இப்பொழுதிருந்து வேண்டிய கடைச் செலவு வாங்கி வாருங்கள்," என்று சொல்லி அவள் ஒரு பட்டியல் கொடுப்பாள். அதிலுள்ளவைகளைக் கொண்டு ஒரு ராஜாங்கமே ஆடம்பரமாக நடத்திவிடலாம் போலிருக்கும்.

வைத்தியநாதன் சிறிது தைரியங்கொண்டு "இவ்வளவு எதற்கு?" என்று கேட்பானேயாகில், "ஆறும் குழந்தைகள் பட்டினி கிடந்து சாகட்டும், நானும் போய்விடுகிறேன், அப்பொழுது நீங்கள் தனியாக இருந்துகொண்டு வெகு சிக்கனமாகவே குடும்பம் நடத்தலாம்," என்று அவள் உடனே பதில் சொல்வாள்.

இனிக் கூச்சலின்றிக் காலம் தள்ள முடியாது என்பது வர வர வைத்தியநாதனுக்குத் தெளிவாகிவிட்டது. ஏதாவது உபாயம் ஒன்று செய்தே தீரவேண்டும். உத்தியோகமாவது வியாபாரமாவது செய்வது வைத்தியநாதனுக்கு இயலாத காரியம். ஆகையால் குபேரன் பொக்கிஷத்திற்குச் செல்லக் கூடிய சுருக்கு வழி ஒன்று கண்டுபிடிக்க வேண்டியிருந்தது.

ஒரு நாள் ராத்திரி படுக்கையில் படுத்துக்கொண்டு வழி யேதுமின்றித் தெய்வத்தை அவன் வேண்டினான்: "தாயே! ஜகன் மாதா! தீராத நோய் ஒன்றுக்கு ஒரு வித்தியாச வைத்தியத்தைக் கனவில் சொல்லிக் கொடுப்பாயாகில் அதைப்

பத்திரிகையில் விளம்பரப் படுத்தும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்.”

அன்றிரவு அவன் சொற்பனத்தில் தன் மனைவி தன் மேல் வெறுப்புகொண்டு “நான் விதவா விவாகம் செய்து கொள்ளப் போகிறேன்,” என்று சொல்லி ஒரே பிடிவாதமாயிருந்ததாகவும், பணமில்லாமல் அதற்கு வேண்டிய ஆபரணங்கள் எப்படிக் கிடைக்கும் என்று தான் கேட்க, விதவைகளுக்கு ஆபரணங்கள் அவசியமில்லை என்று அவள் பதில் சொல்லியதாகவும், இதற்கு ஏற்ற முடிவான மறுமொழி வேறொன்று இருப்பதாகவும், அது மனதிலிருந்து அப்பொழுது புத்திக்கு எட்டவில்லை என்றும் அவனுக்குத் தோன்றிற்று. இதற்குள் விழித்துக்கொண்டு விட்டான். பொழுதும் விடிந்திருந்தது. தன் மனைவி ஏன் விதவா விவாகம் செய்துக்கொள்ளக் கூடாதென்பது அவனுக்கு அப்பொழுது விளங்கிற்று; அதுபற்றி ஒருவேளை அவன் சிறிது துயரமு முற்றிருக்கலாம்.

காலைக் கடனை முடித்துக்கொண்டு தனியே உட்கார்ந்து காற்றாடி நூலுக்கு பிசின் தயார் செய்து வருகையில் ஒரு சன்னியாசி ‘ஜய முண்டாகுக’ என்று சொல்லிக்கொண்டு வாயிலில் வந்து நின்றான். அதே நிமிஷத்தில் ஐசுவரியத்தின் பளபளப்பான உருவம் வைத்தியநாதன் மனதில் மின்னல் போலத் தோன்றி மறைந்தது. சன்னியாசியை அவன் விசேஷ ஆதரவுடன் அழைத்து ஆகாரமிட்டான். எவ்வளவோ முயற்சி செய்த பிறகு, சன்னியாசிக்குப் பொன் செய்யத் தெரியும் என்பதும் அதை அவனுக்குச் சொல்லிக் கொடுக்கத் தடையில்லை என்பதும் தெரியவந்தது.

மனைவியும் வெகு உற்சாகத்தோடு எழுந்திருந்தாள். மஞ்சக் காமாலை நோய் கொண்டவர்கள் எப்படி எல்லாப் பொருள்களையும் மஞ்சளாகக் காண்கிறார்களோ, அப்படியே இவளும் பூமி முழுவதையும் அப்போது பொன் மயமாகக் கண்டாள். இவள் கற்பனையாகிய சித்திரக்காரனைக் கொண்டு படுக்கும் கட்டிலையும், மற்றத் தட்டுமுட்டுகளையும், வீட்டுச் சுவர்களையும் கூடப் பொன்னால் பூசிவிட்டாள். பிறகு இவைகளைக்காணத் தனக்குள்ளாகவே விந்தியவாசினியை அழைத்தாள்.

சன்னியாசியோ தினந்தோறும் இரண்டு சேர் பாலும் மூன்றரைச்சேர் போசனபாத்தும் சாப்பிட்டுக் கொண்டு வந்து வைத்தியநாதனுடைய கும்பினி பத்திரங்களைப் பக் கரைப்பது போலக் கரைத்து வெள்ளிமயமான பாலை எடுத்துச் செலவுசெய்து வந்தான்.

தூண்டில்களுக்கும், குச்சிகளுக்கும், காடுகளுக்குமாக வரும் சிறுவர்கள் மூடியிருக்கும் வைத்தியநாதன் வீட்டுக் கதவைத் தட்டித் தட்டிப் பார்த்தும் திறக்காததனால் போய் விடுவார்கள். வீட்டில் குழந்தைகளுக்கு வேளையில் சோறு கிடைக்காது, கீழே விழுந்து அவர்களுக்கு மண்டை வீங்கி விடும், அழுகுரல் ஆகாயத்தைப் பிளக்கும், புருஷனும் ஸ்திரீயும் கண்ணெடுத்துக் கூடப் பார்க்க மாட்டார்கள். அசைவற்று அக்கினி குண்டத்தின் முன் உட்கார்ந்து கொண்டு மூசையை இருவரும் இமை கொட்டாமல் பார்த்திருப்பார்கள், வாய்ப் பேச்சே கிடையாது. ஆசை நிறைந்து சலனமற்று நோக்கிக்கொண்டிருக்கும் அவர்கள் கண்களில் இடைவிடாது நெருப்பு ஜுவாலையின் பிரதிபிம்பம்

பட்டுக்கொண்டிருந்ததனால் கண்மணிகள் சிந்தாமணியின் ஸ்பரிசமுண்டானதுபோலப் பொன்மயமாகிவிட்டன. கண் பார்வையும் சாயங்கால சூர்யாஸ்தமன சமயத்தில் ஆகாய வெளியைப் போல நெருப்புக் கொழுந்தின் வர்ணத்தை பெற்றது.

இரண்டு கும்பினி பத்திரங்களைப் பொன்னுசையாகிய தீயில் எரித்துவிட்ட பிறகு ஒரு நாள் சன்னியாசி வேடிக்கலாக, "பொன்னுக்கு நாளை வர்ணம் ஏறும்," என்றான்.

அன்றிரவு அவர்கள் தூங்கவேயில்லை; ஸ்திரீயும் புருஷனுமாகச் சேர்ந்து பொன் நகரம் ஒன்று கட்டத் தொடங்கினார்கள். அந்த விஷயத்திலுங் கூட இருவருக்கும் சிறிது சிறிது அபிப்பிராய பேதமும் தர்க்கமும் உண்டாயினவென்றாலும், ஆனந்தப் பெருக்கினால் அவர்களுடைய விவாதம் வெகு நேரம் நீடிக்கவில்லை. ஒருவர் மற்றொருவருக்காகத் தம்தம் கொள்கையில் கொஞ்சம் கொஞ்சம் விட்டுக்கொடுக்கப் பின் வாங்கவில்லை, அன்றிரவு தம்பதிகளின் ஐகமத்தியம் அவ்வளவு நெருங்கியிருந்தது.

மறுநாள் சன்னியாசியைக் காணவே காணோம். நாற்புறத்திலிருந்தும் பொன் வர்ணம் மாயமாய்ப் போய்விட்டது. சூரிய கிரணம் கூட இருண்டதாகக் காணப்பட்டது. இதிலிருந்து படுக்கும் கட்டிலும் தட்டுமுட்டுகளும் வீட்டுச் சுவர்களும் மும்மடங்கு ஏழ்மைத் தனத்தையும் பாழடைந்த தன்மையையும் விளக்கிக்காட்டிக்கொண்டு நின்றன.

இது முதற்கொண்டு வைத்தியநாதன் வீட்டுக்காரியங்களில் ஏதாவது சாமானியமான அபிப்பிராயத்தை வெளி

விட்டாலும் மனைவி இனிமையாகச் சொல்லுபவளைப்போல: “உங்களுடைய புத்திசாலித்தனத்தை அதிகமாகக் காட்டி விடாதீர்கள், சிறிது காலம் சும்மா இருங்கள்,” என்பாள். வைத்தியநாதனும் இந்த ஒரே பேச்சில் அடங்கிவிடுவான்.

மோஹனா பிறகு நடந்துகொண்ட மாதிரியைப்பார்த்தால் காதல் நிலைபோலப் பொய்யான இந்த ஸம்ஸாரத்தில் ஒரு சிறிதுகூடத் தான் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை என்று எண்ணிவிட்டாள் என்பது தெளிவாயிற்று.

தந்திரசாலியான வைத்தியநாதன் மனைவியைச் சற்று சந்தோஷப்படுத்தப் பலவித உபாயங்களைத் தேடினான். ஒரு நாள் அவளுக்கு வெகுமானமாக ஒரு பொருளைக் கொடுக்கக் கருதி அதைச் சதுரமான பெட்டியொன்றில் மறைத்து வைத்துக்கொண்டு மனைவியிடம் வந்து சிரித்த முகத்துடன் வெகு சாமர்த்தியத்தோடு பலமுறை தலையை அசைத்து, “என்ன கொண்டு வந்திருக்கிறேன் சொல்லு பார்ப்போம்,” என்றான்.

அதிலுள்ளதை அறியவேண்டும் என்னும் ஆசையை வெளி யிடாமல் அவள், “நான் எப்படிச் சொல்வேன்! நான் ஜோசியனல்ல!” என்று உதாசீனமாய்ச் சொன்னாள்.

வைத்தியநாதன் அனாவசியமாய்ப் பொழுது போக்கி விட்டு முடிவில் மெதுவாகக் கயிற்றின் முடிச்சை அவிழ்த்தான். பிறகு வாயால் ஊதி காகிதத்தின்மேலிருந்த தூசிகளைப் போக்கினான். அதன் பின்பு வெகு ஸாவதானமாய் ஒவ்வொரு மடிப்பையும் பிரித்துக் காகிதப்பெட்டியைத் திறந்து சித்திர சாலையில் எழுதப்பட்ட தச மகா வித்தியா

[illegible] [illegible] [illegible] எரித்துக் [illegible] முன் கல் பாறையான இடத்தில் வைத்தான்.

[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] நின்று அவனுக்கு [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. "இதென்ன [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. இது [illegible] [illegible]." என்றது.

[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] செய்துகொண்டான்.

சற்றுப் பக்கத்திலிருந்த ஒவ்வொரு [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. எல்லோரும் அவன் [illegible] [illegible] என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவன் [illegible] [illegible] அதிக ஆசையுடையவனாக இருக்கவில்லை. ஆகையால் இதிலிருந்து அவன் மனத்துக்கு எவ்வித ஆறுதலும் உண்டாகவில்லை.

[illegible] [illegible] [illegible] அதிக [illegible] அவன் கேட்டிருக்கிறான். [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] உண்டாகி [illegible] இருந்தது: இதைக் கேட்டுப் பிறகு அவன் அதிக மனம்புழுங்கிக் கொள்ளவில்லை.

கடைசியாக, யாரோ ஒரு ஜோசியன் வந்து இந்த வருஷத்திற்குள்ளாகவே வைத்தியநாதன் பணப்புதையல் ஒன்றை அடையாமற் போவானாகில், அப்போதே தன் சாஸ்திரப் புத்தகங்களை எல்லாம் எரித்துச் சாம்பராக்கி விடுவதாகச் சொன்னான். ஜோசியனுடைய இக்கொடிய சபதத்தைக் கேட்ட பிறகு போக்ஷதாவின் மனதில் எள்ளளவு சந்தேகத்திற்கும் காரணமிருக்கவில்லை.

ஜோசியன் தக்க வெகுமதியோடு விடைபெற்றுச் சென்றான். ஆனால் வைத்தியநாதன் பாடு வெகு கஷ்டமாய் விட்டது. தனம் சம்பாதிப்பதற்குச் சாதாரணமாய்ப் பயிர்த்தொழில், உத்தியோகம், வியாபாரம், களவு, மோசம் ஆகிய வழக்கமான வழிகளிருக்கின்றன. ஆனால் பணப் புதையலை எடுக்க இப்படிப்பட்ட திட்டமான உபாயம் ஒன்றுமில்லை. இதன் பொருட்டு போக்ஷதா வைத்தியநாதனை எவ்வளவு உற்சாகப்படுத்தியும் எவ்வளவு பயமுறுத்தியும் அவனுக்கு எந்தப் பக்கத்திலும் ஒருவழியும் கிடைக்கவில்லை. எந்த இடத்தில் போய்த் தோண்டிப்பார்ப்பது, எந்தக் குளத்தைத் தூர் எடுப்பது, வீட்டில் எந்தச் சுவரை இடித்துப்பார்ப்பது என்பதைப்பற்றி, எவ்வளவு யோசித்தாலும் அவனுக்கு நிச்சயமாக ஒன்றுமே ஏற்படவில்லை.

போக்ஷதா மிகவும் வெறுப்புக்கொண்டு கணவனைப் பார்த்து: "ஒரு புருஷன் மண்டைக்குள் மூளைக்குப் பதிலாக இவ்வளவு சாணம் இருக்கும் என்று இதற்கு முன் நான் எண்ணினதே இல்லை. அங்கேமிங்கும் போய்த் தேடிப் பாருங்களேன்! ஆ என்று வாய்திறந்துகொண்டு சும்மா

உட்கார்ந்திருந்தால் ஆகாயத்திலிருந்து பணமழைப் பெய்யுமா என்ன ?" என்றாள்.

அது என்னமோ உண்மைதான். வைத்தியநாதனுடைய உள் தாற்பரியமும் அதுவே.

ஆனால் எந்தத் திக்கை நாடுவது, எதைக் கொண்டு தேடுவது என்பதைச் சொல்லிக் கொடுப்பார் யாருமில்லை! ஆகையால் தாழ்வாரத்திலுட்கார்ந்துகொண்டு மறுபடிக் குச்சுகளைச் சீவத் தொடங்கினான்.

இப்படி யிருக்கையில் ஐப்பசி மாதத்தில் துர்க்கா தேவியின் உற்சவம் * நெருங்கி வந்து கொண்டிருந்தது. சதுர்த்தியிலிருந்தே ஆற்றங்கரைத் துறைகளில் படகுகள் வர ஆரம்பித்தன. வெளியூர் சென்றிருந்தவர்கள் வீடு திரும்பினார்கள். கூடைகளில் மரவெள்ளிக்கிழங்கு, பூசணி, கொப்பரைத்தேங்காய் முதலியனவும், தகரப்பெட்டியில் குழந்தைகளுக்காக ஜோடு, குடை, வேஷ்டிகளும், பிரிய மனைவிமார்களுக்கு அத்தர், ஸோப்பு, புதிய கதைப் புத்தகங்கள், வாசனை எண்ணெய் முதலியவைகளையும் அவர்கள் எடுத்து வந்தார்கள்.

மேகமற்ற ஆகாயத்தில் சரத்கால சூரிய கிரணமானது உற்சவ தினத்தின் சிரிப்போ என்னும்படி எங்கும் பரவிக் கிடந்தது, வயல்களில் முதிர்ச்சி யடைந்துவரும் கதிர்கள் கரகரவென்ற சத்தத்தோடு அசைந்து கொண்டிருந்தன, மழையினால் அலம்பப் பெற்றுப் பளபளப்பாயிருக்கும் தளிர்கள் புதிதாயடிக்கும் குளிர்க்காற்றில் சலசலத்துக்

* நவராத்திரிப் பண்டிகை.

கொண்டிருந்தன—திரும்பி வந்த வழிப் போக்கர்களும் டாகா பட்டில் தைத்த பிறைச்சொக்காய்களைப் போட்டுக் கொண்டு கழுத்திலிருந்து தொங்கும் முறுக்கின உத்தரியத் தோடு மைதான வெளியில் வீடுநோக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள்.

அவர்களை வைத்தியநாதன் சும்மா உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருந்தான். அவன் இருதயத்தில் அடக்க முடியாத துக்கம் பெருகிற்று. உற்சவ குதூகலத்தோடு பலர் வந்து கூடும் ஆயிரக்கணக்கான வங்காள தேசத்து வீடுகளோடு, ஆனந்தமற்ற தன் வீட்டை ஒப்பிட்டுப் பார்த்துப் பெருமூச்செறிந்தான். "தெய்வமே என்னை ஏன் ஒரு தொழிலுமில்லாமல் சிருஷ்டித்தாய்!" என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

குழந்தைகள் பொழுது விடிந்ததும் எழுந்திருந்து பிரதிமை செய்வதைக் காணும் பொருட்டு ஆத்யநாதன் வீட்டு முன்கட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். சாப்பாட்டு வேளை வந்த போது வேலைக்காரி அவர்களைப் பலவந்தமாக இழுத்துக் கொண்டுவந்தாள். அப்பொழுது வைத்தியநாதன் சும்மா உட்கார்ந்துகொண்டு எங்கும் பரவியுள்ள இந்த உற்சவக் கொண்டாட்டத்தில் தான் பயனற்றுக்கிடப்பதை நினைத்துக் கொண்டிருந்தான். வேலைக்காரி கையிலிருந்து தன் இரு குழந்தைகளையும் விடுவித்து அவன் வெகு பிரியத்தோடு மடியில் வைத்துக்கொண்டு பெரியவனைப்பார்த்து, "என் அடா, அநூ, இந்த உற்சவ சமயத்தில் உனக்கு என்னவேண்டும் சொல்லு பார்ப்போம்" என்று கேட்டான்.

"கப்பல் ஒன்று எனக்குக் கொடு, அப்பா!" என்று அபிநாசன் சொன்னான்.

சின்னவனே அண்ணனுக்கு எந்த விஷயத்திலும் தான் சிறிதும் குறைந்துவிடக் கூடாதென்ற எண்ணங் கொண்டவனாய், "எனக்கும் ஒரு கப்பல் கொடு, அப்பா!" என்றான்.

தகப்பனுக்கு ஏற்ற பிள்ளைகள்! பயன்படாத சிற்ப வேலை கொண்ட பொருள் ஒன்று கிடைத்துவிட்டால் வேறு எதையும் வேண்டார்கள். தந்தையும் "அப்படியே ஆகட்டும்" என்றான்.

இச்சமயத்தில் நவராத்திரி விடுமுறைக்காக மோக்ஷதாவின் மாமன் காசியிலிருந்து விடு வந்திருந்தான். அவனுக்கு வக்கீல் தொழில். மோக்ஷதா அடிக்கடி அவன் வீட்டுக்குப் போவதும் வருவதுமாக இருந்தாள்.

கடைசியில் ஒருநாள் அவள் தன் கணவனை அழைத்து, "நீங்கள் காசிக்கு ஒருமுறை போகவேண்டி இருக்கிறது," என்றாள்.

உடனே வைத்தியநாதன் தனக்கு ஏதோ மரணகாலம் கிட்டிவிட்டதென்றும், ஜோசியன் அதை ஜாதகத்திலிருந்து எடுத்துக்காட்டவே ஸஹ தர்மிணியாகிய தன் மனைவி தனக்கு நற்கதி கிடைக்குமாறு நிச்சயத்தை செய்வாள் என்றும் எண்ணிவிட்டான்.

காசியில் ஏதோ ஒரு வீடு இருப்பதாயும் அதில் பணப்புதையல் கிடைக்கும் என்றவர் வருந்தி உளறியதாயும் பிறகு தான் அவன் கேள்விப்பட்டான்; அந்த வீட்டை விசாரித்து வாங்கி அதிலுள்ள பணத்தைத் தான் போய் எடுத்து வரவேண்டும் என்பதையும் அறிந்து கொண்டான்.

வைத்தியநாதன், "இதென்ன கெட்ட காலம், என்னால் காசிக்குப் போக முடியாது!" என்றான்.

அவன் வீட்டைவிட்டு எங்கும் எப்பொழுதுமே போனது கிடையாது. கிருகஸ்தன் ஒருவனை வீட்டை விட்டு வெளியே போகும்படிச் செய்ய வேண்டுமானால் அதற்கு வேண்டிய வழிகளை ஸ்திரீகள் "கற்காமலே நன்கறிவார்கள்," என்று பழைய சாஸ்திரக்காரர்கள் எழுதியிருக்கிறார்கள். மோசக்கார வாய்ப்பேச்சினாலேயே வீட்டிலுள்ளவர்கள் புருஷனை விரட்டிவிடுவார்கள், இருந்தாலும் அதனால் பிரயாசைக்காரனான வைத்தியநாதன் கண்களிலிருந்து நீர் தான் வடியுமேயன்றி, "காசிக்குப் போகிறேன்" என்ற வார்த்தை அவன் வாயில் வரவேயில்லை.

இரண்டு மூன்று நாட்கள் கழிந்தன. வைத்தியநாதன் உட்கார்ந்துகொண்டு மரத்தை அறுத்து இழைத்து ஒன்றோடொன்று சேர்த்து இரண்டு விளையாட்டுக் கப்பல்களைச் செய்தான். அவைகளில் பாய்மரத்தை நாட்டியதோடு துணியைக்கிழித்துப் பாய்களையும் கட்டினான்; சிவப்புச் சால்வையைக்கொண்டு கொடி ஒன்று பறக்க

விட்டான். சுக்கானையும் துடுப்புகளையும் அமைத்தான். சுக்கானைப் பிடிப்பதற்கும் ஏறிச் செல்லுவதற்கும் கூட அவன் பொம்மைகளைச் செய்து வைக்காமற் போகவில்லை. அதில் பெருமுயற்சியும் ஆச்சரியமான சாமர்த்தியமும் காட்டினான். அக்கப்பலைக் கண்டு ஆசை கொண்டாதபடி மனதை அடக்கிக்கொள்ளக் கூடிய சிறுவன் இன்றைக்கும் கிடைப்பதரிது. ஆகையால் ஸப்தமிக்கு முன் இரவில் இவ்விரண்டு கப்பல்களையும் குழந்தைகள் கையில் கொடுத்தபோது அவர்கள் ஆனந்தத்தால் கூத்தாடினார்கள். விளையாடுவதற்கு வெறுங் கப்பல் ஒன்றே போதுமானது! அதோடுகூட சுக்கான் என்ன, துடுப்பு என்ன, பாய்மரம் என்ன, பாய் என்ன, போதாததற்கு மாலுமி ஒன்று! இவையெல்லாம் அவ்வவற்றின் இடத்தில் வைக்கப்பட்டிருந்தபோது அவர்களுடைய பேராச்சரியத்துக்கு என்ன குறை!

குழந்தைகளின் சந்தோஷ ஆரவாரத்தைக் கேட்டு மோக்ஷதா அங்கு வந்து அவ் வேளைத் தந்தை நவராத்திரிக்காகக் கொடுத்த வெகுமதியைக் கண்டாள்.

கண்டதும் கோபமூண்டு அழுது கையால் தலையி லடித்துக்கொண்டு அவ் விரண்டு விளையாட்டுக் கப்பல்களையும் பிடுங்கி சாளரத்தின் வழியாக வெளியில் வீசி எறிந்தாள். "பொன் ஹாரத்தைக் காணோம், மகமல் உடையைக் காணோம், சரிகைத் தொப்பியைக் காணோம், வேறென்னவோ இரண்டு விளையாட்டு பொருள்களைக் கொடுத்து இந்தக் கதிகெட்டவன் தன் சொந்தக் குழந்தைகளையே

வாஞ்சித்து வருகிறான்! அவைகளுக்காக இரண்டு காசு கூடச் செலவிடவில்லை, தானே கையினால் செய்துவிட்டான்!"

சின்னவன் கெட்டியாக அழ ஆரம்பித்தான். "மடப் பயலே," என்று சொல்லி மோக்ஷதா அவனை வீசி ஒரு அறை அறைந்தாள்.

பெரியவன் தந்தையின் முகத்தைப் பார்த்துத் தன் சொந்த துக்கத்தைக்கூட மறந்து விட்டான். சிரிப்பவனைப்போலப் பாசாங்கு செய்துவிட்டு அவன், "அப்பா, நாளைப்பொழுது விடிந்ததும் நான் போய் அவைகளைப் பொறுக்கி எடுத்து வருகிறேன்," என்றான்.

இதற்கு மறுதினமே வைத்தியநாதன் காசிக்குப் போக சம்மதித்து விட்டான். ஆனால் பணம் வேண்டுமே! அவன் மனைவி தன் ஆபரணத்தை விற்றுப் பணம் சேர்த்துக் கொடுத்தாள். வைத்தியநாதன் பாட்டி காலத்து நகை அது, அவ்வளவும் கெட்டிப்பொன், இப்படிப்பட்ட உயர்ந்த நகை இந்நாட்களில் கிடைக்கவே கிடைக்காது.

மரணத்தின் பொருட்டே தான் செல்வதாக வைத்தியநாதன் எண்ணிவிட்டான். குழந்தைகளைத் தூக்கி மடியில் வைத்து முத்தமிட்டுவிட்டுக் கண்ணீர் சொரிந்துகொண்டே அவன் வீட்டை விட்டுப் புறப்பட்டான். அச்சமயத்தில் மோக்ஷதாவும் கூட அழுதாள்.

காசியில் வீட்டுக்கு உடையவன் வைத்தியநாதன் மனைவியின் மாமாவினுடைய கக்ஷிக்காரன். இது காரண

மாகவோ என்னவோ வீட்டை அதிக விலை கொடுத்து வாங்கவேண்டி யிருந்தது. வைத்தியநாதன் தனியாகவே வீட்டில் வசித்து வந்தான். நதிக்கரையின் மேலேயே வீடு. அஸ்திவாரத்தின் மேலே மோதிக்கொண்டேதான் நீர் பெருகும்.

அன்றிரவில் வைத்தியநாதன் உடம்பு வெலவெலத்துப் போய்விட்டது. யாருமில்லாத அந்த வீட்டில் விளக்கு ஒன்றைத் தலைமாட்டில் வைத்துவிட்டு உத்தரீயத்தை விரித்துப் போர்த்துக்கொண்டு அவன் படுத்தான்.

ஆனால் தூக்கம் சிறிதும் வரவில்லை. ஊர்ச் சந்தடியெல்லாம் அடங்கினதும் அந்தப் பேரிருளில் எங்கிருந்தோ ஜன்! ஜன்! என்ற சத்தம் ஒன்று கேட்டது. வைத்தியநாதன் திடுக்கிட்டுப்போய் எழுந்திருந்தான். சத்தம் மெதுவாக வந்தாலும் ஸ்பஷ்டமாக இருந்தது. பாதாளத்தில் பலிசக்கிரவர்த்தியின் பொக்கிஷத்தில் பொக்கிஷக்காரன் உட்கார்ந்து ரூபாய்களை எண்ணும் சத்தம் போலே இருந்தது.

வைத்தியநாதன் அச்சமுற்று அது இன்னதென்று அறியவும் பயந்தான். கூடவே பண ஆசையும் அவன் மனதைக் கவர்ந்தது. கை நடுக்கத்தோடே விளக்கை எடுத்துக்கொண்டு அறை அறையாகப் போய்ப் பார்த்தான். இந்த அறைக்குப் போனால் சத்தம் அந்த அறையிலிருந்து வருவதாகத் தோன்றும், அந்த அறைக்குப் போனால் இந்த அறையிலிருந்து வருவதுபோலிருக்கும். வைத்தியநாதன்

இரவெல்லாம் இந்த அறைக்கும் அந்த அறைக்கும் போவ திலேயே காலம் கழித்தான். சிலபொழுதில் பாதைக் குறிப் பிரகாரம் வரும் அடையாளம் பல்வேறு தடங்களோடு கலந்து அடையாளமேயில்லாதபடி மறைந்துவிடும்.

இரவின் இரண்டாவது மூன்றாவது ஜாமங்களில் உலகமே தூக்கத்தில் ஆழ்ந்திருக்கும்போது மறுபடி அதே சத்தம் கிளம்பும். வைத்தியநாதன் மனது வெகு சஞ்சலப்பட்டு விட்டது. எந்த திக்கில் போய்ப் பார்ப்பது என்று அவனுக்குத் தோன்றவில்லை. நடுப் பாலைவனத்தில் சளசளவென்று ஜலம் ஓடும் சத்தம்போலே கேட்கும், ஆனால் எந்த திக்கிலிருந்து அது வருகிறது என்று நிர்ண யிக்க முடியாது. ஒரு முறை தவறான வழியில் அடிவைத் துப் புறப்பட்டுவிட்டால் மறைந்திருக்கும் நீரூற்று எங்கு அடியோடு கிடைக்காமல் போய்விடுமோ என்ற பயம் மாத் திரம் இருக்கும். அப்போது தாகத்தால் பரிதவிக்கும் வழிப்போக்கன் அசைவற்று நின்றுகொண்டு தன் பிராண சக்தி முழுவதையும் சுரோத்திரேந்திரியத்தில் செலுத்தி வெகு கவனமாகச் சத்தம் கேட்டுக்கொண்டிருப்பான். நீர்வேட்கையும் மேலுக்குமேல் அதிகரித்துக்கொண்டே வரும். இதே நிலைமையிலேதான் இருந்தான் வைத்திய நாதனும்.

ஒன்றும் நிச்சயிக்க முடியாமலே பல தினங்கள் கழிந் தன. தூக்கமற்றுப் போயிருந்ததாலும் சரிவரச் சாப்பிடா திருந்ததாலும் சந்தோஷமாயிருந்த வைத்தியநாதன் முகத் தில் கவலையின் ஆழமான திரைகள் படிந்தன. குழி

விழுந்து பதைபதைத்திருந்த அவன் கண்களில் மத்தியானத்தில் பாலைவனத்து மணலிடை வீசும் ஒளி தான் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

ஒருநாள் நடுப்பகலில் கதவுகளை எல்லாம் போட்டுவிட்டு ஒரு மண்வெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு தரையை ஆங்காங்கு தட்டித் தட்டிப் பார்த்தான். ஒருபுறமாயிருந்த சிறு அறை யொன்றின் தரையைத் தட்டிப் பார்த்தபோது ஓட்டைச் சத்தம் கேட்டது.

அர்த்த ராத்திரியில் உலகமே உறங்கும் தருணத்தில் வைத்தியநாதன் தனியாக உட்கார்ந்துகொண்டு அந்த அறையின் தரையைத் தோண்டிக்கொண்டிருந்தான். இரவு முடிந்து வரும் சமயத்தில் தான் குழிவெட்டி முடிந்தது.

வைத்தியநாதன் குனிந்து பார்த்தான். கீழே ஒரு அறைபோல இருந்தது—ஆனால் அதே இரவில் தீர ஆலோசிக்காமல் அதில் கால் வைக்க அவன் துணியவில்லை. குழியின்மேல் தன் படுக்கையை விரித்து மூடிவிட்டு அதன் மேலே தானும் படுத்துக்கொண்டான். இப்பொழுது முன் கேட்ட சப்தம் வெகு தெளிவாகவந்தபடியால் சற்றுப் பயந்தவனாய் அவ்விடம் விட்டு எழுந்து வெளியே வந்தான்—ஆனால் ஒருகாவலுமின்றி வீட்டை விட்டுப்போக அவனுக்கு மனம் வரவில்லை. ஆசை ஒருபுறமும் பயம் ஒருபுறமுமாக இருந்துகொண்டு அவன் இருகரங்களையும் பற்றி இழுக்கலாயின. இரவும் முடிவு பெற்றது.

இன்று பகற்பொழுதிலும் கூடச் சத்தம் கேட்டுக் கொண்டேதான் இருந்தது. வேலையாளை அறைக்குள்ளே போகவிடாமல் வெளியிலேயே தன் ஆகாராதிகளை அவன் முடித்துக் கொண்டான். சாப்பாடு முடிந்ததும் அறைக்குள் நுழைந்து கதவுகளைச் சாவியிட்டுப் பூட்டிவிட்டுத் தரைப்பலகையின் பொருத்தை உசக்கிக் கொண்டே குழிவாயிலிருந்து பலகையை எடுத்தான். ஜலத்தின் சளசள சத்தமும் உலோகங்களின் கணகண சத்தமும் வெகு பரிஷ்காரமாய் கேட்டன.

பயந்து பயந்து குழிக்கு அருகில் மெதுவாய் வந்து எட்டிப்பார்த்தான், அதிக உயரமில்லாத சிறு அறை ஒன்றில் ஜலம் பெருகிக் கொண்டிருந்தது—இருட்டாக இருந்ததால் விசேஷமாய் ஒன்றும் தெரியவில்லை.

ஒரு நீண்ட கோலை விட்டுப்பார்த்ததில் ஜலம் முழங்காலுக்குமேல் இல்லை என்று தெரியவே ஒரு விளக்கும் தீக்குச்சிகளையும் எடுத்துக்கொண்டு ஆழமற்ற அவ்வறைக்குள் சுலபமாகவே அவன் குதித்து இறங்கினான். ஒரு முகூர்த்தத்தில் தன்னுடைய ஆசை எல்லாம் எங்கு வீணாய் விடுமோ என்ற சந்தேகத்தால் நெருப்புக்குச்சிகளைப் பற்றவைக்கும்போது கைகள் நடுங்கின. பலகுச்சிகளை வீணாக்கின பிறகு தான் விளக்கு ஏற்ற முடிந்தது.

கனத்த இரும்புச் சங்கிலி ஒன்று பெரியதோர் செப்புக்கலசத்திற்குக் கட்டியிருப்பதைக் கண்டான். ஜலம் அதிகமாகப் பெருகும்போதெல்லாம் சங்கிலி கலசத்தின் மேல் படும் சத்தம் கிளம்பும்.

வைத்தியநாதன் தட்டித் தடுமாறிக் கொண்டு அந்தக் கலசத்தின் அருகில் சென்று அதற்குள் பார்த்தான். கலசம் காலியாயிருந்தது.

அப்படி இருந்தும் தன் கண்களையும் கூட அவன் நம்பாமல் கலசத்தை இருகைகளாலும் தூக்கிக் குலுக்கிப் பார்த்தான். உள்ளே ஒன்றையும் காணோம். அதைக் கவிழ்த்தான். ஒன்றும் கீழே விழவில்லை. கலசத்தின் கழுத்து உடைந்திருந்தது. ஒருகாலத்தில் இந்த கலசத்தின் வாய் நன்றாக மூடப்பட்டிருக்க வேண்டும். யாரோ அதை உடைத்துத் திறந்திருக்கிறார்கள்.

பிறகு இரு கைகளையும் ஜலத்திற்குள் விட்டு வைத்திய நாதன் பைத்தியக்காரனைப்போலத் தடவித் தடவித் தேடினான். சேற்றுக்கிடையில் அவன் கையில் ஏதோ ஒன்று கிடைத்தது, எடுத்துப்பார்த்தான். அது ஒரு மண்டை ஓடு — [illegible] முழுக்கிறான் — உள்ளே ஒன்றையும் காணோம். அதைத் தூர எறிந்துவிட்டுப் பல முறை தேடினதில் மனித தேகத்தின் எலும்புகளைத் தவிர்த்து வேறு ஒன்றும் கிடைக்கவில்லை.

நதிப்புறமாக இருந்த சுவற்றின் பக்கம் சற்று இடிந்திருந்தது; இந்த வழியாகத் தான் நீர் உள்ளே வந்துகொண்டிருந்தது. எவன் ஜாதகத்தில் இப்புதையல் அகப்படும் என்று எழுதியிருந்ததோ அவன் இவ்வழியாகத்தான் வைத்தியநாதனுக்கு முன் அங்கு வந்திருக்கவேண்டும்.

கடைசியாக இனி ஆசைக்கு இடமில்லை என்று அறிந்து, “அம்மா” என்று சொல்லிக்கொண்டு நெஞ்சு

மலைக்குப்படியான ஒரு பெருமூச்செறிந்தான்—அதன் எதிரொலி பண்டைக்காலத்தில் ஆறாதவற்றையெல்லாம் பொன்னின் பெருமூச்சையெல்லாம் ஒன்றுகலந்து பயங்கரமான கர்ச்சியத்தோடு பாதாளத்திலிருந்து இடி முழக்கம்போலக் கிளம்பிற்று.

உடம்பெல்லாம் ஜலமும் சேறுமாக வைத்தியநாதன் மேலே ஏறிவந்தான்.

ஜலங்கள் நிறைந்த பெருத்த ஆரவாரத்தோடு விளங்கும் இப்பூமி அவனுக்கு முதலிலிருந்து கடைசிவரை வெறும் பொய்யாகவும், அந்தச் சங்கிலியில் கட்டுண்டு உடைந்துகிடந்த குடம்போலக் காலியாகவும் காணப்பட்டது.

அவனே இன்னும் மூட்டைக் கட்டவேண்டும், டிக்கெட்டு வாங்கவேண்டும், வண்டியேற வேண்டும், வீடுதிரும்ப வேண்டும், மனைவியோடு விதண்டாவாதம் செய்யவேண்டும், தினம் தோறும் வயிறுவளர்க்கவேண்டும். இதொன்றும் அவனுக்குப் பிடிக்கவில்லை. அதிலிருந்து விடுபட்டு மரணத்தைப்போலவும் ஒன்றும் உணராது விழுந்து ஜலத்தில் கரைந்துபோய் விடவேண்டும் என்று ஆசைப்பட்டான்.

இப்படியிருந்தும் அவன் தானாகவே மூட்டை கட்டினான், டிக்கெட்டு வாங்கினான், வண்டியுமேறினான்.

மாரிகாலத்தில் ஒரு நாள் சாயந்திரம் அவன் வீட்டு வாயிலண்டை வந்து சேர்ந்தான். ஐப்பசி மாதத்தில் சரத்ருதுவின் விடியற்காலங்களில் வாயிற்படியண்டை உட்கார்ந்து

கொண்டு வைத்தியநாதன் வெளியூர் சென்றிருந்த பலர் தம் வீடுகளுக்குத் திரும்புவதைக் கண்டிருக்கிறான். அப்படி வெளியூர் சென்று திரும்பும் சமயம் தனக்குக் கிடைக்காதா என்று அச்சமயங்களில் எண்ணிப் பெருமூச்சு விட்டதுண்டு—இன்றைய சாயங்காலத்திலிருந்த தன் நிலைமை அப்போது அவனுக்கு கனவிலும் கூட வந்ததில்லை.

வீட்டில் நுழைந்து முற்றத்தில் போட்டிருந்த விசுப் பலகையின் பேரில் பிரக்ஞை தப்பினவனைப் போல உட்கார்ந்து கொண்டான். உள்கட்டிற்குப் போகவில்லை. முதல் முதலில் வேலைக்காரி அவனைப்பார்த்துச் சந்தோஷத்தால் ஆரவாரம் செய்தாள். குழந்தைகளும் அவளை விட்டுவிட்டு ஓடிவந்தார்கள். வீட்டு எஜமானியும் கூப்பிட்டனுப்பினாள்.

வைத்தியநாதன் கோரமான கட்டிலிருந்து விடுபட்டதும் அவனுடைய பழைய நிலைமை அவனுக்கு ஞாபகம் வந்தது.

வாடின முகத்தில் ஒளியற்ற சிரிப்புடன் ஒரு குழந்தையை இடுப்பிலும் ஒரு குழந்தையைத் தோளிலுமாகத் தூக்கிக்கொண்டு அவன் உள் கட்டில் பிரவேசித்தான்.

அப்போது வீட்டில் விளக்கேற்றும் சமயம், இன்னும் இரவு ஆகவில்லை. மாரிகாலமாகையால் அன்று மாலை இரவுபோலச் சந்தடி யற்றிருந்தது.

வைத்தியநாதன் சற்றுநேரம் ஒன்றும் சொல்லாமல் சும்மா இருந்தான். பிறகு மெலிந்த குரலில் மனைவியைப் பார்த்து "சௌக்கியம் தானே?" என்றான்.

அவள் அதற்கு ஒரு பதிலும் சொல்லாது, "என்ன மாயிற்று?" என்று கேட்டாள்.

வைத்தியநாதன் மறுமொழியின்றி தலையில் அடித்துக்கொண்டான். மோக்ஷதாவின் முகம் கடுகடுத்தது.

இதிலிருந்து பெருந் துன்பம் விளையும் என்று அங்கிருந்த குறிகளால் அறிந்துகொண்டு குழந்தைகள் மெதுவாக எழுந்து போய்விட்டார்கள். அங்கிருந்து வேலைக்காரியண்டை போய், "முன்சொல்லிய அம்பட்டன் கதையைச் சொல்லு," என்று படுக்கையில் படுத்துக்கொண்டு அப்படியே தூங்கிவிட்டார்கள்.

இரவு நேரம் அதிகரித்துக்கொண்டே வந்தது. ஆனால் இருவரும் ஒருபேச்சுக்கூடப் பேசவில்லை. வீட்டில் பயங்கரமான சம்பவமொன்று நடைபெறும்போலே இருந்தது. மோக்ஷதாவின் இரு உதடுகளும் வயிரம்போல ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டிருந்தன.

சற்றுநேரமானபிறகும் கூட மோக்ஷதா ஒரு வார்த்தையும் சொல்லாமல் மெல்ல மெல்ல படுக்கை அறைக்குள் போய் உட்புறத்திலிருந்த கதவை மூடிக்கொண்டாள்.

வைத்தியநாதனும் வாய்திறவாமல் வெளியிலேயே நின்றுகொண்டிருந்தான். வழக்கம்போலே கிராமக் காவற்காரன் சத்தமிட்டுக்கொண்டு சென்றான். சோர்வடைந்த பூமிதேவியும் ஆழ்ந்த நித்திரையிலமர்ந்தாள்.

ஆப்தபந்துக்கள் முதற்கொண்டு அனந்த ஆகாசத்தி லுள்ள நக்ஷத்திரங்கள் வரை யாருமே இந்தத் துயிலற்று தனியாக நிற்கும் வைத்தியநாதனை விசாரிக்கவில்லை.

நள்ளிரவில், தான்கண்ட சொற்பனத்தாலோ அல்லது வேறெக்காரணத்தாலோ படுக்கையிலிருந்து எழுந்து வைத்தியநாதனுடைய மூத்த மகன் மெதுவாகத் தாழ்வாரத் திற்கு வந்து, “அப்பா,” என்று கூப்பிட்டான்.

அவன் அப்பா அப்போது அங்கிருக்கவில்லை. அடைத்திருந்த கதவுக்கு வெளியிலிருந்துகொண்டு இன் னும் உரத்த குரலில், “அப்பா,” என்று மறுபடியும் கூவி னான். ஆனால் பதில் ஒன்றுமே கிடைக்கவில்லை.

சற்று பயத்தோடு திரும்பிப் படுக்கையில் வந்து படுத் துக் கொண்டான்.

வழக்கம்போல வேலைக்காரி விடியற்காலத்தில் ஹுக் காவுக்குப் புகையிலைத் தயார்செய்துவிட்டு அவனைத் தேடி னாள். அவனை எங்கும் காணோம். பொழுது விடிந்ததும் அண்டை அயல் வீட்டுக்காரர்கள் வீடு திரும்பிய தம் நண் பனைக் கண்டுபோக வந்தார்கள். ஆனால் அவர்களுக்கு வைத்தியநாதன் கிடைக்கவே யில்லை.

புதையற் பணம்

க

அமாவாசைப் பாதிராத்திரி. வெகுகாலமாய்த் தன் குலதேவதையா யிருந்த ஜயகாளியைத் தாந்திரிக பத்தப்படி மிருத்யுஞ்ஜயன் பூஜை செய்துகொண் டிருந்தான். பூஜை முடித்துக்கொண்டு அவன் எழுந்தபோது பக்கத்திலிருந்த மாந்தோப்பில் விழித்து விட்டதற்கு அடையாளமாகக் காகம் ஒன்று கூவிற்று.

மிருத்யுஞ்ஜயன் திரும்பிப் பார்த்தான். தேவாலயத்தின் கதவு மூடியே இருந்தது. அவன் தேவியின் திருவடிகளில் தன் தலையை வைத்து ஒரு முறை நமஸ்கரித்துவிட்டு அவளை ஆசனத்திலிருந்து தூக்கி எடுத்து அவ்வாசனத்துக் கடியிலிருந்த ஒரு பலாமரப் பெட்டியைக் கையில் வாங்கிக் கொண்டு தன் பூணூலில் கட்டியிருந்த சாவியால் அதைத் திறந்தான். அதைத் திறந்த மாத்திரத்திலேயே அவன் திடுக்கிட்டுப்போய்க் கையால் தன் தலையை அழுத்திக் கொண்டான்.

மிருத்யுஞ்ஜயன் தோட்டத்தின் உட்புறத்தில் நாலு பக்கத்திலும் சுவர்கள் சூழ்ந்திருந்தன. அத்தோட்டத்தின் பெரிய பெரிய மரங்களின் நிழலால் இருண்டிருந்த ஒரு புறத்தில் தான் இருந்தது இச்சிறு கோயிலும். இதில்

ஜயகாளியின் விக்கிரகம் தவிர வேறொன்றும் இருக்கவில்லை. உள்ளே போக அதற்கு ஒரே வழிதான். மிருத்யுஞ்ஜயன் பெட்டியை எடுத்துப் பலமுறை குலுக்கிப் பார்த்தான். மிருத்யுஞ்ஜயன் திறக்குமுன் பெட்டி பூட்டியே இருந்தது. யாரும் அதை உடைத்திருக்கவில்லை. பிரதிமையைச் சுற்றி மிருத்யுஞ்ஜயன் பலமுறை கையால் தடவித் தடவிப்பார்த்தான். ஒன்றும் கிடைக்கவில்லை. பயித்தியக்காரனைப்போல கோயில் கதவுகளைப் படீர் என்று திறந்து போட்டான்—அப்பொழுது வைகறையின் ஒளி புஷ்பம் மலருவதைப் போல மலர்ந்து கொண்டு வந்தது. கோயிலின் நாற்புறத்திலும் வீணுசையால் தேடித்தேடித் திரிந்தான்.

பொழுது விடிந்து நன்றாக வெளிச்சமாய் விட்ட போது அவன் வெளி மண்டபத்தில் வந்து உட்கார்ந்து தலையில் கைவைத்துக்கொண்டு ஆழ்ந்த யோசனையிலிருந்தான். இரவெல்லாம் தூங்காமல் இருந்தபடியால் தேகம் சோர்வடைந்திருக்க அவன் சற்று அயர்ந்தபோது, "ஜய முண்டாகுக," என்ற சத்தம் கேட்டதும் திடுக்கிட்டு எழுந்தான்.

எதிரில் ஜடாதாரியான சன்னியாசி ஒருவன் நின்றான். மிருத்யுஞ்ஜயன் பூரண பக்தியோடு அவனுக்கு நமஸ்காரம் செய்தான். சன்னியாசி அவன் தலைமேல் கையைவைத்து ஆசீர்வாதம்செய்து—"அப்பா, நீ ஏன் மனதிற்குள்ளேயே வீணாக சோகப்பட்டுக்கொண் டிருக்கிறாய்?" என்று கேட்டான்.

இதைக்கேட்டு மிருத்யுஞ்ஜயன் ஆச்சரியத்தோடு,—"தாங்கள் எல்லாம் அறிந்தவர், இல்லாவிட்டால் என்

சோகம் தங்களுக்கு எப்படித் தெரியவரும்? நானே யாருக்கும் ஒன்றுமே சொல்லவில்லை," என்றான்.

சன்னியாசி—"மகனே, நான் சொல்வதைக்கேள், நீ இழந்துவிட்டதைப் பற்றிச் சந்தோஷப்படு, சோகப் பட வேண்டாம்."

மிருத்யுஞ்ஜயன் அவருடைய இருபாதங்களையும் சேர்த்துப் பிடித்துக்கொண்டு—"அப்படியானால் தங்களுக்கு எல்லாமே தெரிந்திருக்கிறது. அது எப்படி திருட்டுப் போயிற்று. அதை நான் எங்குபோய் மறுபடி அடைவேன் என்பதைச் சொன்னாலொழிய நான் தங்கள் பாதங்களை விடமாட்டேன்," என்றான்.

சன்னியாசி—"உனக்கு நான் கெடுதியை விரும்புவேனானால் அப்பொழுதுதான் அதைச் சொல்வேன். ஆனால் பகவதி உன்மேல் தயை வைத்து எதை உன்னை இழக்கும்படி செய்தாளோ அதற்காக நீ சோகப்படவேண்டாம்," என்றான்.

மிருத்யுஞ்ஜயன் சன்னியாசியின் அனுக்கிரகத்தைப் பெறுவதற்காக நாள்முழுவதும் பலவித உபசாரணைகளோடு அவனுக்குப் பணிவிடை செய்துவந்தான். மறுநாள் விடியற் காலத்தில் சொந்த மாட்டுக்கொட்டிலிருந்து லோட்டா நிறையப் பாலைக் கறந்து நுரையோடு எடுத்துக்கொண்டு வந்து பார்த்தான். சன்னியாசியைக் காணோம்.

உ

மிருத்யுஞ்ஜயன் சிறு குழந்தையாயிருந்த போது அவன் பாட்டன் ஹரிஹரன் ஒருநாள் இதே வெளிமண்ட

மத்தியில் உட்கார்ந்து ஜபங்கள் செய்துகொண்டிருந்தான். அச்சமயத்தில் அங்கொரு சன்னியாசி, "நாராயண் ஹரி" என்று சொல்லிக்கொண்டு எதிரில் வந்து நின்றான். அவனைச் சிறிதுநாள் தன் வீட்டில் வைத்துக்கொண்டு தானால் அவனுக்கு விதிப்படிச் செய்யவேண்டியவைகளை எல்லாம் செய்து சந்தோஷப் படுத்தினான்.

மறுநாள் காலையில் சன்னியாசி—"மகனே, உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டபோது தாரிணீசரண் சொன்னான்: "ஐயா, தாங்கள் சந்தோஷம் கொண்டிருப்பது உண்மையானால் எங்கள் நிலைமையை ஒருமுறை கேட்டருளவேண்டும். முற்காலத்தில் இந்த கிராமத்தில் நாங்கள் எல்லாரையும்விடச் செல்வமுள்ளவர்களாக இருந்தோம். என்னுடைய முப்பாட்டனார் காலத்திலிருந்து குலீனர்* குலத்திலே அழைத்து வந்து தன் பெண் ஒருத்தியை விவாகம் செய்துகொடுத்தார். அவருடைய பெண் வயிற்றில் வந்த வம்சத்தார் எங்களவர்களிலேயே மோசஞ்செய்துவிட்டுத் தனதானத்தில் இந்த கிராமத்தில் பெரிய தனிகர்களாக இருக்கிறார்கள். எங்களுடைய நிலைமை நன்றாக இல்லை. ஆகையால் அவர்களுடைய அகங்காரத்தைச் சகித்து வந்தோம். ஆனால் இனிச் சகிக்க முடியாது. எல்லா செய்தாலும்படி எங்கள் குடும்ப மேன்மைக்குமேல் அந்த ஒரு உபாயத்தைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அதே மாதிரி ஆசீர்வாதமும் செய்யவேண்டும்."

---

* வங்காளத்தில் உயர்ந்த பிராமண வகுப்பாருக்குக் குலீன் என்று பெயர்.

சன்னியாசி சிறிது புன்சிரிப்புடன், "அப்பா, சிறு நிலைமையிலேயே சுகமாயிரு. பெரிய பதவிக்காக ஏங்குவதில் நன்மையைக் காணோம்," என்றான்.

ஹரிஹரன் அப்போதும் விடவில்லை. குடும்பம் உயர் பதவி பெறுவதற்காக என்ன நேர்ந்தாலும் அதை அனுபவிக்க அவன் தயாராக இருந்தான்.

அப்போது சன்னியாசித் துணியில் சுற்றியிருந்த பழைய காலத்துப் பழுப்புக் காகிதம் ஒன்றைத் தன் மடியி லிருந்து வெளியில் எடுத்தான். அது நீண்டு ஜாதகப் பலன்கள் எழுதியுள்ள பெரிய சுருளைப்போலே இருந்தது. தரையின்மேல் அதை சன்னியாசி விரித்து வைத்தான். அதில் பல்வித சக்கரங்களும், சங்கேதக் குறிகளும் வரை யப்பட்டிருந்ததை ஹரிஹரன் பார்த்தான். எல்லாவற்றிற் கும் அடியில் நீண்ட செய்யுள் ஒன்று எழுதியிருந்தது. அதன் ஆரம்பம் பின்வருமாறு:

இதனைச் சொல்லு மூடா,
நா கழிந்த நாதா
பின்னால் சேரு நா
குளம் நாடி வா.
புளி ஆலின் மடியில்
செல்வாய் நேரே தெற்கில்.
ஈசானி மூலே ஈசுவரி
இடத்தைச் சொன்னேன் போக்கிலி,

முதலியன.

—"ஐயா, இதில் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை யே!" என்றான் ஹரிஹரன்.

சன்னியாசி—“இதை நீ வைத்துக்கொண்டு தேவியைப் பூஜைசெய். அவள் அருளால் உன் வமிசத்தில் யாராவது ஒருவன் இதில் எழுதியுள்ள செல்வத்தைப் பெறுவான். இச்செல்வத்திற்கு உலகத்தில் இணையே இல்லை,” என்றான்.

“ஐயா, ஏதாவது கொஞ்சம் சொல்லிக் கொடுக்கலாகாதா?” என்று ஹரிஹரன் கெஞ்சிக் கேட்டான்.

சன்னியாசி—“இல்லை அது முடியாது. நீயே உபாசனையின் மூலமாக அதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.”

இத்தருணத்தில் ஹரிஹரன் தம்பி சங்கரன் அங்கு வந்து சேர்ந்தான். அவனைக் கண்டதும் ஹரிஹரன் பரபரப்புடன் காகிதத்தை மறைக்க முயன்றான். சன்னியாசி புன்சிரிப்புடன், “உயர் பதவிக்குப் போகும் வழியிலுள்ள துக்கம் இப்போதே ஆரம்பித்துவிட்டதே! ஆனால் இதை நீ மறைக்கவேண்டிய அவசியமில்லை, ஏனெனில் இதன் ரகசியம் கேவலம் ஒருவனுக்குத்தான் விளங்கப் போகிறது. ஆயிரம்பேர் இதற்காக முயன்றாலும் ஒரு பயனையும் பெறமாட்டார்கள்! உங்களுக்குள் யார் அதை அடைவான் என்பது கூட தெரிந்துகொள்ள முடியாது. ஆகையால் எல்லோர் முன்பாகவும் நீ இதைத் திறந்து வைத்திருக்கலாம்” என்றான்.

சன்னியாசி புறப்பட்டுப் போய்விட்டான். ஆனால் ஹரிஹரனால் இக்காகிதத்தை மறைத்து வைத்துக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. இதனால் வேறு யாராவது லாபமடைந்து விட்டால் என்செய்வது என்றும், தம்பி

சங்கரன் இதனால் கிடைக்கக்கூடிய பொருளைப் பெற்று விடுவானோ என்றும் பயந்து இக்காகிதத்தைப் பலா மரப் பெட்டி ஒன்றில் வைத்துப் பூட்டி தன் குலதெய்வமாகிய மயகாளியின் ஆசனத்துக்கடியில் மறைத்து வைத்தான். ஒவ்வொரு அமாவாசையிலும் நள்ளிரவில் தேவிபூஜை செய்துவிட்டு அவளருளால் காகிதத்தில் எழுதியுள்ளதின் அர்த்தம் தனக்கு விளங்குகிறதா என்று அறிய அதை ஒரு முறை திறந்து பார்ப்பான்.

சில தினங்களுக்குப் பிறகு சங்கரன், "அண்ணா, அக் காகிதத்தை நான் ஒரு தடவை நன்றாகப் பார்க்கவேண்டும் கொடுக்கமாட்டாயா?" என்று கெஞ்சிக் கேட்டான்.

ஹரிஹரன், "போடா பயித்தியம்! அந்தக் காகிதம் எங்கிருக்கிறது! அந்த மோசக்காரச் சன்னியாசி கண்டதைக் கிறுக்கிவிட்டு என்னை ஏமாற்றிவிட்டுப் போனான்—நான் அதை அப்பொழுதே நெருப்பிலிட்டுக் கொளுத்தி விட்டேன்," என்றான்.

சங்கரன் சும்மா இருந்துவிட்டான். திடீரென்று ஒருநாள் அவனை வீட்டில் காணோம். அன்றையிலிருந்து அவன் செய்தி ஒன்றுமே தெரியவில்லை.

ஹரிஹரனுடைய வியவகாரங்கள் யாவும் கெட்டு வந்தன—புதையல் ஐசுவரியத்தைப் பற்றின எண்ணம் அவனை ஒரு நிமிஷம் கூட விட்டகலவில்லை.

மரணகாலம் கிட்டினபோது தன் மூத்த மகன் சியாமபாதனை அழைத்துத் தான் சன்னியாசியிடம் பெற்ற இக் காகிதத்தைக் கொடுத்து விட்டு இறந்தான்.

இக்காகிதம் கிடைக்கவே சியாமபாதன் உத்தியோகத்தை விட்டு விட்டான். ஜயகாளியின் பூஜையில் ஒரு மனப்பட்டவனும் இக்காகிதத்திலிருப்பதைப் படித்துப் படித்து ஆராய்ந்து கொண்டு தன் வியவகாரங்கள் போன வழி தெரியாமல் காலங்கழித்து வந்தான்.

மிருத்யுஞ்ஜயன் சியாமபாதனுடைய மூத்த மகன். தந்தை காலஞ்சென்றதும் சன்னியாசி கொடுத்த அக்காகிதத்திற்கு அவன் அதிகாரியானான். அவன் நிலைமையும் வரவரக் க்ஷீணிக்கவே பின்னும் அதிக ஆக்கிரகத்தோடு தன் முழு கவனத்தையும் அக்காகித விஷயத்தில் அவன் செலுத்தி வந்தான். இப்படியிருக்கையில் சென்ற அமாவாசை இரவு பூஜை முடிந்ததும் காகிதத்தைக் காணவில்லை. சன்னியாசியும் எங்கேயோ அந்தர்தானமாய் விட்டான்.

இச் சன்னியாசியை நான் விடப்போகிறதில்லை. எவ்வித முயற்சிகளைச் செய்தாவது அவனை அடைவேன் என்று சொல்லி மிருத்யுஞ்ஜயன் வீட்டை விட்டுப் புறப்பட்டு அவனைத் தேடிக்கொண்டு ஒரு வருஷகாலம் வழிகளில் ஆங்காங்கு தங்கிச் சென்றான்.

ரு

கிராமத்தின் பெயர் தாராகுளம். அங்கு மிருத்யுஞ்ஜயன் ஒரு பலசரக்குக் கடையில் உட்கார்ந்து ஹுக்கா பிடித்துக்கொண்டு எதை எல்லாம் பற்றியோ ஆலோசித்துக்கொண்டிருந்தான். சற்று தூரத்தில் மைதானத்தின் ஓரமாக யாரோ சன்னியாசி ஒருவன் சென்றான். முதல் முதலில் மிருத்யுஞ்ஜயன் கவனம் அதில் செல்லவில்லை.

சற்று நேரத்திற்கெல்லாம், எதிரில் சென்றவன் அதே சன்னியாசி தானென்று அவனுக்குத் தோன்றிற்று. பரபரப்புடன் ஹுக்காவை வைத்துவிட்டுக் கடைக்காரன் திடுக்கிடும்படி ஒரே ஓட்டமாய்க் கடையிலிருந்து அவன் வெளியே ஓடினான். ஆனால் சன்னியாசியைக் காண முடியவில்லை.

அப்பொழுது மாலையிருள் பரவிக்கொண்டு வந்தது. முன்பின் தெரியாத ஊரில் சன்னியாசியை எங்கு தேடிச் செல்வது என்பது அவனுக்கு விளங்கவில்லை. கடைக்குத் திரும்பிவந்து, "இதோ, எதிரில் தெரிகிறதே ஒரு அடர்ந்த வனம், அதில் என்ன இருக்கிறது?" என்று கடைக்காரனைக் கேட்டான்.

கடைக்காரன் சொன்னான்: இந்த வனம் முன் ஒரு காலத்தில் ஒரு நகரமாக இருந்தது. ஆனால் அகஸ்திய முனியின் சாபத்தால் அங்கிருந்த அரசனும் பிரஜைகளும் கொள்ளை நோயால் பிடிக்கப்பட்டு இறந்தார்கள். அங்கு போய்த் தேடினால் தனமும் ரத்தினங்களும் இன்றைக்கும் கிடைக்கின்றனவென்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். ஆனால் பட்டப்பகலில்கூட இவ்வனத்தில் யாரும் நுழைந்து செல்வதில்லை. அப்படி யாராவது போனால் அவர்கள் மறுபடி திரும்பி வருவதில்லை.

மிருத்யுஞ்ஜயன் மனம் பதைபதைத்தது. இரவு முழுதும் பலசரக்குக் கடையில் பாயின்மேல் படுத்துக் கொசுக் கடியினால் உடம்பெல்லாம் கையாலடித்துக்கொண்டு இந்த வனத்தைப் பற்றியும், சன்னியாசியைப் பற்றியும், திருட்டுப்போன அந்தக் காகிதத்தைப் பற்றியும் எண்ணினா

வண்ணமாக இருந்தான். பலமுறை படித்திருந்தபடியால் அக்காகிதத்திலுள்ளவை மிருத்யுஞ்ஜயனுக்கு மனப்பாடமாயிருந்தன—மேலும் தூக்கம் வராத இத்தருணத்தில் அவை அவன் மண்டைக்குள் சுழன்றுகொண்டிருந்தன—

இதனைச் சொல்லு மூடா,
ரா கழிந்த ராதா
பின்னால் சேரு ரா
குளம் நாடி வா.

தலை வெகு உஷ்ணமாயிருந்தது—என்ன செய்தும் இந்தச் சிக்கானத் தொடக்கு மனதை விட்டகலவில்லை. கடைசியாக விடியுமுன் அவன் சற்று அயர்ந்திருந்தபோது கனவில் இந்நான்கு வரிகளின் பொருள் வெகு சுலபமாகவே விளங்கலாயிற்று. "ரா கழிந்த ராதா" அதாவது "ராதா" என்பதில் "ரா" என்ற எழுத்தைக் கழித்துவிட்டால் "தா" மிஞ்சுகிறது—"பின்னால் சேரு ரா" அதாவது மிஞ்சியுள்ள "தா" வுக்குப் பின்னால் "ரா" என்பதைச் சேரு, அது "தாரா" ஆகிறது—"குளம் நாடி வா", என்பதை முன் புள்ளதோடு சேர்த்துப் படித்தால் "தாராகுளம் நாடி வா"....இப்பொழுது வந்திருக்கும் இடத்தின் பெயரும் "தாராகுளம்" அல்லவா!

கனவிலிருந்து மிருத்யுஞ்ஜயன் குதித்துக்கொண்டு எழுந்திருந்தான்.

௬

நாள்முழுதும் வனத்தில் திரிந்து திரிந்து பொழுது போனதும் வெகு கஷ்டப்பட்டு வழி தேடிக்கொண்டு ஆகார

யின்றி சாகக்கிடப்பவனைப் போல மிருத்யுஞ்ஜயன் கிராமத்திற்குத் திரும்பி வந்தான்.

மறுநாள் அங்கவஸ்திரத்தில் அவல் கட்டிக்கொண்டு இன்னொரு முறை அவ்வனத்தில் புகுந்து சுற்றிக்கொண்டிருந்தான். பிற்பகலில் ஒரு குளக்கரைக்கு வந்து சேர்ந்தான். குளத்திற்கு மத்தியில் சுத்தமான ஜலம், கரைக்குக் கரை நாற்புறத்திலும் தாமரைகளும் அல்லிக்காடுகளுமாக இருந்தன. துறைகளில் கட்டியிருந்த கற்படிகள் இடிந்து பாழாய்க் கிடந்தன. அங்கு தண்ணீரில் அவலை நனைத்துச் சாப்பிட்டுவிட்டு குளத்தின் நாற்புறங்களையும் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தான்.

குளத்தின் மேற்குக் கரைப்புறமாக நின்று மிருத்யுஞ்ஜயன் எதிரே வேடிக்கையாய்ப் பார்த்துக்கொண்டிருந்தான். புளியமரத்தைச் சுற்றிக்கொண்டு ஆலமரம் ஒன்று வளர்ந்திருந்ததைக் கண்டான்.

புளி ஆலின் மடியில்
செல்வாய் நேரே தெற்கில்.


என்பது அவனுக்கு உடனே மனதில் தோன்றிற்று.

தெற்கே சற்றுதூரம் போனதும் அங்கு அடர்ந்திருந்த புதர்களில் சிக்கிக்கொண்டான். அங்குள்ள பிரம்புச்செடிகளை விலக்கிக்கொண்டு முன்னே செல்ல அவனுக் கூடவில்லை. எப்படி இருந்தாலும் இம்மரத்தின் குறிப்பை விட்டுவிடுவதில்லை என்று தீர்மானித்துக் கொண்டான்.

மறுபடி அம்மரத்தை நோக்கி வர முயலும்போது மரங்களுக்கிடையில் கிட்டத்தில் ஒரு கோயிலின் ஸ்தூபி

காணப்பட்டது. அதே திக்கை நோக்கி மிருத்யுஞ்ஜயன் சென்றபோது பாழடைந்த ஒரு கோயிலுக்கு வந்து சேர்ந்தான். பக்கத்தில் ஒரு அக்கினி குண்டமும் கொள்ளிக் கட்டைகளும் சாம்பலும் இருந்தன. உடைந்த கதவுகளின் வழியாக மிருத்யுஞ்ஜயன் கோவிலுக்குள் வெகு ஜாக்கிரதையாய் எட்டிப்பார்த்தான். அங்கு ஒருவரையும் காணோம், விக்கிரகம் ஒன்றுகூட இல்லை. ஒரு கம்பளமும் கமண்டலுவும் காஷாய உத்தரீயமும் தான் இருந்தன.

அச்சமயத்தில் பொழுதுபோய் விட்டிருந்தது: கிராமமோ வெகுதூரம்: இருளின் வனத்தில் வழி தேடிக்கொண்டு போக யாரால் முடியும்? ஆகையால் மனிதனிருக்கும் குறிப்புகளை இவ்வாலயத்தில் மிருத்யுஞ்ஜயன் கண்டதும் சந்தோஷமடைந்தான். கோவில் மதிலிலிருந்து பிரமாண்டமான கல்லொன்று உடைந்து வாயிலுக்கருகில் விழுந்து கிடந்தது: அக்கல்லின்மேல் உட்கார்ந்துகொண்டு யோசித்துக்கொண்டிருக்கையில் மிருத்யுஞ்ஜயன் கல்லின் மேற்புறத்தில் ஏதோ சில எழுத்துக்களிருப்பதாகக் கண்டான். தனித்து பார்த்தான். அதில் சக்கரம் ஒன்று வெட்டப்பட்டிருந்தது. அதற்குள் சில எழுத்துக்கள் தெளிவாகவும் சில தேய்ந்துமிருந்தன.



மிருத்யுஞ்ஜயனுக்கு இந்தச் சக்கரம் மனப்பாடமாக இருந்தது. கணக்கில்லாத அமாவாசை ராத்திரிகளில்

பூஜை அறையில் தூபத்தின் நறுமணம் கமழும்போது நெய்விளக்கின் ஒளியில் பண்டைக்காலத்துப் பழுப்பேறின காகிதத்தில் வரைந்திருந்த இந்த சக்கரத்தை அவன் கண்டிருக்கிறான். "அதிலுள்ள ரகசியத்தைத் தனக்குப் புலப்படுத்த வேண்டுமென்று," அதன்மேல் தணிந்து உற்று நோக்கிக்கொண்டு எவ்வளவோ முறை ஜகதம்பிகையைப் பிரார்த்தித்திருக்கின்றான்! அவன் கோரிக்கை நிறைவேறும் காலம் வெகு நெருக்கத்தில் இருந்தபடியால் அவன் தேகமெல்லாம் ஒருவித நடுக்கமுற்றது. கரைக்கிட்ட வந்து மூழ்கிப்போகும் படகைப்போல எங்கு ஆகிவிடுமோ. பிழையொன்று நேர்ந்துவிட்டால் எல்லாம் எங்கு அடியோடு போய்விடுமோ, அந்தச் சன்னியாசி தனக்கு முன் வந்து அந்நாளை எல்லாம் எங்கே எடுத்துப்போய் விடுவானோ என்ற சந்தேகங்கள் அவன் நெஞ்சைப் பிளந்து கொண்டிருந்தன! இப்பொழுது என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. தான் இப்பொழுது அந்தத் தலத்தின் மேலேயே ஒருவேளை உட்கார்ந்திருக்கலாமோ என்னவோ என்றும் அவன் எண்ணினான். அவனால் எதையும் தெளிவாக அறிந்து கொள்ள முடியவில்லை.

அப்படியே உட்கார்ந்துகொண்டு காளியின் தாரகத்தை ஜபம் செய்யலானான்: மாலை இருள் முற்றிக் கடாந்தகாரமாகிவிட்டது; அக்காட்டுவெளியில் சில வண்டுகள் சப்திக்கலாயின.

௫

அச்சமயத்தில் சற்றுதூரத்திலே அடர்ந்த செடிகளுக்கிடையில் நெருப்பின் ஜுவாலை ஒன்று தெரிந்தது. மிருத்

யுஞ்ஜயன் கல்லாசனத்தை விட்டெழுந்து அந்த ஜுவா லையை நோக்கிப்போனான்.

வெகு கஷ்டப்பட்டுச் சற்றுதூரம் சென்று ஒரு அரச மரத்தின் மறைவிலிருந்து பார்த்தான். அவன் பார்த்த சன்னியாசியே நெருப்பின் வெளிச்சத்தில் ஒரு பழுப்பு காகிதத்தை விரித்து வைத்துக்கொண்டு வெகு கவனத் தோடு கரியால் ஏதேதோ கணக்குகள் போட்டுக்கொண் டிருந்தான்.

மிருத்யுஞ்ஜயன் வீட்டில் பரம்பரையாய் இருந்துவந்த அதே காகிதம் தான் அது! அட மோசக்கார சன்னியாசி! அட திருடா! இதற்காகத்தானா துக்கப்படவேண்டாம என்று மிருத்யுஞ்ஜயனுக்குப் போதித்தாய்? பேஷ்!

சன்னியாசி ஒருமுறை கணக்குப்போட்டு முடிந்ததும் அளவுகோல் ஒன்றை எடுத்துக்கொண்டு பூமியை அளப் பான்,—சற்று தூரம் அளந்ததும் அது சரிப்படாமல் தலையை அசைத்துக்கொண்டு மறுபடி வந்து கணக்குப் போட ஆரம்பிப்பான்.

இரவு முடியும்வரை இம்மாதிரி செய்துவிட்டு, காட்டு மரங்களின் உச்சியிலுள்ள இளந்தளிர்களை வைகறைக்காற்று சல சல வென்று அசைக்க ஆரம்பித்தபோது சன்னியாசி காகிதத்தைச் சுருட்டிக்கொண்டு புறப்பட்டான்.

மிருத்யுஞ்சயனுக்கு இன்னது செய்வதென்று தெரிய வில்லை. ஆனால் இது மாத்திரம் அவனுக்குத் தெளிவாகப் புலப்பட்டு விட்டது, அதாவது சன்னியாசியின் உதவி யின்றி அக்காகிதத்திலுள்ள இரகசியத்தை அறியத் தன்னால்

முடியாது என்பதே. பேராசைகொண்ட அச்சன்னியாசி மிருத்யுஞ்சயனுக்குச் சகாயம் செய்யமாட்டான் என்பதும் நிச்சயம். ஆகையால் மறைவாகச் சன்னியாசியைக் கண்காணித்து வருவதைவிட வேறு வழியில்லை. பகலில் கிராமத்துக்குப் போகாவிட்டால் சோறு கிடைக்காது; ஆனபடியால் கடைசியாக அதிகாலையில் ஒருமுறையாவது கிராமத்திற்குப்போயே தீரவேண்டும்.

இருள் நீங்கிவரும் தருணத்தில் அவன் இருந்த இடத்தை விட்டு நகர்ந்து சன்னியாசி கனைக்குப்போட்டுக்கொண்டிருந்த இடத்திற்கு வந்து வெகு கவனமாய் உற்றுப்பார்த்தான், அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. நாற்புறத்திலும் சுற்றிப்பார்த்தான், அடர்ந்த காடுகளைத் தவிர வேறு எவ்வித குறிப்பையும் காணோம்.

பொழுது நன்றாக விடிந்ததும் மிருத்யுஞ்சயன் வெகு ஜாக்கிரதையாக நாற்புறத்திலும் உற்றுப் பார்த்துக்கொண்டு கிராமத்தை நோக்கிச் சென்றான். ஒருவேளை தன்னைச் சன்னியாசி கண்டுவிடுவானோ என்ற பயம் அவனுக்கு இருந்தது.

அவன் தங்கியிருந்த கடைக்கருகில் ஒரு காயஸ்த* சுமங்கிலி ஒரு விரதத்தை முடித்துப் பிராம்மண போஜனம் செய்வித்தாள். அந்த இடத்தில் போய் மிருத்யுஞ்ஜயன் தன் ஆகாரத்தை முடித்துக்கொண்டான். சில தினங்களாகச் சரியான ஆகாரமில்லாததனால் அன்றைக்கு அவன் சாப்பாடு சற்றுப் பலமாகவே இருந்தது. அப்படி

* தமிழ் நாட்டு வெள்ளாழர்களையும் வன்னியர்களையும் போலே காயஸ்தர் வட தேசத்தில் ஒரு பிரபல ஜாதியார்.

நன்றாகச் சாப்பிட்ட பிறகு ஹுக்கா பிடித்துவிட்டுக் கடையில் விரித்திருந்த பாயின்மேல் சற்றுப்படுத்தான். சென்ற இரவெல்லாம் விழித்திருந்தபடியால் மிருத்யுஞ்சயனுக்கு நல்ல தூக்கம் வந்து விட்டது.

இன்று உணவைச் சீக்கிரம் முடித்துக்கொண்டு பொழுதுடனேயே புறப்பட்டுவிட வேண்டுமென்று அவன் எண்ணிக்கொண்டிருந்தான். அதெல்லாம் அடியோடு மாறிவிட்டது. அவன் தூங்கி எழுந்தபோது சூரியன் அஸ்தமித்து விட்டிருந்தான். அப்படியிருந்தும் மிருத்யுஞ்ஜயன் சிறிதும் பின்வாங்கவில்லை. அந்த இருட்டிலேயே அவன் காட்டிற்குள் நுழைந்து சென்றான்.

பார்த்திருக்கையிலேயே இருளடர்ந்து விட்டது. மரங்களின் கீழில் ஒன்றுமே தெரியவில்லை. சில இடங்களில் புதர்களுக்கிடையில் வழி அடைந்து கிடக்கும். தான் எந்தப்புறம் திரும்பினானோ, எங்கு சென்றானோ அது ஒன்றும் அவனுக்கே விளங்கவில்லை. காட்டின் ஒருபுறத்தில் ஒரே இடத்தில் தான் இரவெல்லாம் அவன் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான் என்பது அவனுக்கு இரவு முடிந்ததும் தெரிந்தது

காக்கையின் கூட்டம் கா! கா! என்று கத்திக்கொண்டு கிராமத்தை நோக்கிப் பறந்து சென்றது. அவைகள் தன்னை சீச்சீ! என்று இகழ்ந்துவிட்டு போவதுபோல அவனுக்குப் பட்டது.

௬

கணக்குகள் அடிக்கடி பிசகிப்போகும். அவைகளை பல முறை திருத்திக்கொண்டு கடைசியாகச் சன்னியாசி தாங்

கத்துக்கு வழிகண்டுபிடித்து விட்டான். அவன் தீவட்டி ஒன்று எடுத்துக்கொண்டு சுரங்கத்திற்குள் நுழைந்தான். கீழே தரையின்மேல் பாசி படர்ந்திருந்தது. சில இடங்களில் ஜலமும் சொட்டிக்கொண்டிருந்தது. இடிந்து கிடந்த கல்லுகள் ஒன்றோடொன்று சேர்ந்து கோபுரம் போலக் குவிந்து கிடந்தன. கால் வழுக்கும் இப்பாதையில் சிறிது தூரம் சென்றதும் அது அடைபட்டிருப்பதைச் சன்னியாசி கண்டான். குறுக்கே ஒரு சுவர் நிற்கவே மேற்கொண்டு அவனுக்கு வழி தெரியவில்லை. இரும்புத்தடி ஒன்றைக்கொண்டு சுவர் முழுவதும் பலமாகத் தட்டித் தட்டிப்பார்த்தான். ஓட்டைச் சத்தம் எங்குமே கேட்கவில்லை. ஒரு சிறு தொளைகூட எங்கும் காணோம்—இப்பாதை இதோடுதான் முடிந்துவிட்டது என்பதற்குச் சந்தேகமே இல்லை.

மறுபடி அதே புஸ்தகத்தை விரித்து, தலைமேல் கை வைத்துக்கொண்டு உட்கார்ந்து யோசிக்கலானான். அன்றிரவு முழுதும் இப்படியே கழிந்தது.

அடுத்த நாள் மறுபடி கணக்குப்போட்டுக்கொண்டு சுரங்கத்தில் பிரவேசித்தான், ரகசியமானதொரு சங்கேத முறைப்படி குறித்த இடத்திலிருந்து ஒரு கல்லைப் பிடுங்கினான். அங்கொரு கிளை வழி போயிற்று. அதைத் தொடர்ந்து போகப்போக மறுபடி ஓரிடத்தில் வழி அடைபட்டிருந்தது.

கடைசியாக ஐந்தாம் இரவில் சுரங்கத்திற்குள் பிரவேசித்து—“ இன்று எனக்கு வழி கிடைத்துவிட்டது. இனி

ஒரு தவறும் நேராது,” என்று சன்னியாசி சொல்லிக் கொண்டான்.

வழியோ வெகு சிக்கலாயிருந்தது ; கிளை வழிகளுக்கும் கொடி வழிகளுக்கும் முடிவே இல்லை—சில இடங்களில் படுத்துக்கொண்டு தான் நகர்ந்து போகமுடியும், வழி அவ்வளவு குறுகினதா யிருந்தது. வெகு கஷ்டத்தோடு தீவட்டியை எடுத்துக்கொண்டு சன்னியாசி ஒரு வட்டமான அறை போலிருந்த ஓரிடத்திற்கு வந்து சேர்ந்தான். அவ்வறைக்கு மத்தியில் பெரியதோர் கிணறு. விளக்கு வெளிச்சத்தில் அதன் அடிப்பக்கம் தெரியவில்லை. அறையின் மச்சிலிருந்து கனத்த இரும்புச் சங்கிலி யொன்று கிணற்றில் தொங்கிக்கொண்டிருந்தது. சன்னியாசி தன் முழு பலத்தையும் கொண்டு இச்சங்கிலியைச் சற்று அசைத்த மாத்திரத்தில் ‘கணீர்’ என்று ஒரு சத்தம் கிணற்றின் ஆழத்திலிருந்து கிளம்பி அறை முழுவதையும் எதிரொலியால் நிறப்பிவிட்டது. சன்னியாசி உச்ச சுவரத்தில் “கிடைத்து விட்டது !” என்று கத்தினான்.

அப்படிக் கத்தின நிமிஷத்திலேயே அறையின் உடைந்த சுவரிலிருந்து ஒரு கல் உருண்டு விழுந்தது. அதோடுகூட ஏதோ ஒரு உயிருள்ள பொருளும் ‘தப்’ என்று விழுந்து ‘கீச்’ என்று கத்திற்று. எதிர்பாராத இச்சத்தத்தைக்கேட்டுச் சன்னியாசி திடுக்கிட்டு எழுந்த போது கையிலிருந்த தீவட்டி விழுந்து அவிந்து போயிற்று.

எ

“நீ யார் ?” என்று கேட்டான் சன்னியாசி. ஒரு பதிலும் கிடைக்கவில்லை. அவன் இருட்டில் தடவிப்பார்த்

தான். மனித தேகம் ஒன்று கையில் பட்டது. அதை அசைத்து, "நீ யார்?" என்றான்.

ஒரு பதிலுமில்லை. அந்த மனிதன் ஸ்மரணை தப்பியிருந்தான்.

சன்னியாசி சக்கிமுக்கிக் கல்லைத் தட்டி, கஷ்டப்பட்டு தீவட்டியை மறுபடி ஏற்றினான். இதற்குள் அம்மனிதனுக்கும் ஸ்மரணை வரவே அவன் எழுந்திருக்க முயன்று நோவு தாளாமல் கதறினான்.

"இதென்ன மிருத்யுஞ்சயனா நீ! உனக்கு இந்த யோசனை எப்படி வந்தது?" என்றான் சன்னியாசி.

"ஐயா மன்னிக்கவேண்டும். பகவானே என்னைத் தண்டித்துவிட்டார். கல் எறிந்து உன்னைக் கொல்லப் போனேன், என்றால் சமாளித்து நிற்க முடியவில்லை—கால் நழுவி விடவே நானும் கல்லோடு விழுந்துவிட்டேன். என் கால் உண்மையாகவே முறிந்துபோய் விட்டது" என்றான் மிருத்யுஞ்ஜயன்.

"என்னைக் கொல்வதனால் உனக்கென்ன லாபம்?" என்று சன்னியாசி கேட்டான்.

"லாபத்தைப்பற்றி நீயா கேட்கிறாய்! என் பூஜையறையிலிருந்து இக்கடிதத்தைத் திருடி வந்து இச்சுரங்கத்தில் அலைந்து திரியும் நீயா? நீ திருடன்! நீ வஞ்சகன்! என் பாட்டனிடம் இதே கடிதத்தைக் கொடுத்த சன்னியாசி எங்கள் வமிசத்தில் ஒருவனுக்குத்தான் இதில் உள்ள சங்கேதம் அர்த்தமாகும் என்று சொல்லியிருந்தார். புதைந்து கிடக்கும்

இவ்வைசுவரியம் எங்கள் குடும்பத்தையே சேர்ந்தது. ஆகை யால் சென்ற சில நாட்களாக உணவின்றி, தூக்கமின்றி, நிழலைப்போல உன்னை நான் பின்தொடர்ந்து கொண்டிருக் கிறேன். "கிடைத்து விட்டது" என்று நீ கூவின பிறகு என்னால் பொறுக்க முடியவில்லை. நானும் உன் பின்னாலேயே வந்து இச்சுவற்றின் பொந்திற்குள் ஒளித்திருந்தேன். அங் கிருந்து ஒரு கல்லைப் பிடுங்கி உன்னைக்கொல்லப் போனேன்— ஆனால் தேகமோ பலவீனமா யிருந்தது, தரையும் அதிக வழு வழுப்பு—ஆகையால் தான் விழுந்து விட்டேன். இப் பொழுது நீ என்னை அடித்துக் கொன்றுவிடு. அதுதான் உத் தமம்—நான் பூதமாக வந்து இந்த தனத்தைக் காத்து நிற் பேன்—நீ இதை எவ்விதத்திலும் கொண்டுபோக முடியாது— அது நிச்சயம்! இதை எடுக்க முயலுவாயானால், நான் பிரா மணன், உன்னைச் சபித்து விட்டு இதே கிணற்றுக்குள் குதித்துப் பிராணனை விடுவேன். இந்த தனம், உன் மட்டில் பிராம்மண ரக்தம் போலவும் பசு ரக்தம் போலவும் தொடக் கூடாததாய்ப் போய்விடும்—இதைக்கொண்டு நீ என்றைக் கும் சுகம் அனுபவிக்க முடியாது. என் தந்தையும் பாட்டனா ரும் இந்தத் தனத்தின் பேரிலேயே முழு மனதையும் வைத்து இறந்தார்கள்—இதே தனத்தைப் பற்றி எண்ணி எண்ணித் தான் நானும் தரித்திரனாகி விட்டேன்—இதே தனத்தைத் தேடுவதற்காக வீட்டில் மனைவிமக்களை அநாதைகளாக விட்டு விட்டு ஊண் உரக்கமின்றி அவலக்ஷணம் பிடித்த பயித்தியக் காரனைப் போல இங்கு மங்கும் அலைந்து திரிந்தேன்—என் கண் முன்பாக இத்தனத்தை நீ எடுக்க ஒரு நாளும் முடி யாது!" என்று மிருத்யுஞ்ஜயன் வெகு ஆத்திரத்தோடு சொன்னான்.

அ

"அப்படியானால் மிருத்யுஞ்ஜயா, இதைக் கேளு! கதை முழுவதையும் உனக்குச் சொல்லி விடுகிறேன்!" என்றான் சன்னியாசி.

"உன் பாட்டனாருக்குத் தம்பி ஒருவன் இருந்தது உனக்குத் தெரியுமல்லவா, அவன் பெயர் சங்கரன் தானே?"

—"ஆமாம், ஆனால் கண்ணுக்கு அகப்படாதபடி எங்கோ அவன் தான் வெளியே போய் விட்டானே!" என்றான் மிருத்யுஞ்ஜயன்.

—"நான் தான் அந்த சங்கரன்," என்று சன்னியாசி சொன்னதும் மிருத்யுஞ்ஜயன் தான் கொண்ட ஆசையெல்லாம் வீணாயிற்றே என்று பெருமூச்செறிந்தான். எந்த வமிசத்தின் தனி உரிமையைக் கொண்டு இந்தப் புதையற்பணம் தன்னைச் சேரவேண்டுமென்று எண்ணியிருந்தானோ அந்த வமிசத்திலிருந்தே தாயாதி ஒருவன் வந்து அவ்வெண்ணத்தைப் பாழாக்கி விட்டான்.

சன்னியாசி சொல்லுகிறான்: "அண்ணா துறவியிடம் காகிதத்தைப் பெற்ற சமயத்திலிருந்து அதை, வேண்டுமென்றே, எனக்குக்காட்டாமல் மறைத்து வைத்தார். அவர் மறைக்க மறைக்க என் அவாவும் மேல்மேல் வளர்ந்தது. அவர் காளி தேவியின் ஆசனத்திற்கடியில் ஒரு பெட்டியில் இக்காகிதத்தை ஒளித்து வைத்தது எனக்குத் தெரிந்துவிட்டது. பெட்டிக்கு மாறுசாவி ஒன்று தயாரித்து நாள்தோறும் சிறிது சிறிதாகக் காகிதத்தில் எழுதியிருந்த யாவற்றையும் பெயர்த்து எழுதிக்கொண்டு விட்டேன். எழுதி முடிக்க அன்

றே இப்பணத்தைத் தேடிக்கொண்டு வீட்டைவிட்டுப் புறப் பட்டேன். என் வீட்டிலும் கூட ஒரு ஸ்திரீயும் கைக்குழந் தை ஒன்றும் அப்போது அநாதைகளாக இருந்தார்கள். அவர்களில் யாருமே இப்பொழுது உயிரோடில்லை.

"எங்கெந்த தேசங்களில் எல்லாம் போய்த் திரிந்தேன் என்பதை விரித்துச் சொல்வதில் பயனில்லை. சன்னியாசி கொடுத்த இக்காகிதத்திலுள்ளதை யாராவது ஒரு சன்னியாசி எனக்கு நிச்சயமாய்ச் சொல்லிக்கொடுக்கக்கூடும் என்று எண்ணிப் பல சன்னியாசிகளை நாடி உபசரித்தேன். பல வஞ்சக சன்னியாசிகள் இக்காகிதம் என்னிடத்தி லிருப்பதை அறிந்து அதைத் திருட முயன்றார்கள். இப்படி எவ்வளவோ வருஷங்கள் கழிந்தன. என் மனதில் ஒரு நிமிஷமாவது சுகம் கிடையாது, சாந்தி கிடையாது.

"கடைசியாக பூர்வ புண்ணிய பலத்தால் குமாயூன் மலையில் சுவரூபானந்த சுவாமியின் திருவடி சம்பந்தம் கிடைத் தது. அவர் என்னைப் பார்த்து, 'அப்பா, ஆசையைத் தூரத் தள்ளு, அப்போழுதுதான் எங்கும் பரந்துள்ள குன்றாச் செல்வம் உன்னைத் தானகவே வந்தடையும்,' என்றார்.

"அவர் தான் என் மனதிலுள்ள தாகத்தைப் போக்கினார். அவருடைய அருளால் வான ஒளியும் பூமியின் பசுமையும் எனக்கு ஒரு ராஜ சம்பத்தைப் போலே விளங்கின. குளிர்ந்த மாலைப் பொழுதில் ஒரு நாள் மலைமேல் பரம ஹம்ஸ சுவாமியின் அக்னி குண்டத்தில் நெருப்புப் பிரகாசித்துக்கொண் டிருந் தது— அந்த நெருப்பில் என் காகிதத்தை அர்பணம் செய்து விட்டேன். அதைக்கண்டு சுவாமி சற்றுப் புன்னகை கொண்

டார்." அப்புன்னகையின் அர்த்தம் அப்பொழுது எனக்கு விளங்கவில்லை. இப்பொழுது தான் விளங்கிற்று. அவர் நிச்சயமாய் இதைத்தான் தனக்குள் சொல்லிக்கொண்டிருப்பார், காகிதத்தைச் சாம்பாாக்கி விடுவது சுலபம்தான். ஆனால் மனதிலுள்ள சம்ஸ்காரம் இவ்வளவு சுலபமாகச் சாம்பாாய்விடாது!

"காகிதத்தின் அடையாளம் சிறிதுமில்லாமல் போனதும் நாற்புறத்திலும் சுற்றியிருந்த ஒரு நாகபாசத்திலிருந்து பரிபூரணமாய் விடுபட்டவனைப்போல ஆனேன். முக்தியின் அபூர்வமான ஆனந்தம் என் மனதில் நிறையலாயிற்று. இனி எனக்கு ஒரு பயமுமில்லை என்று எண்ணிக்கொண்டேன்—உலகத்தில் எதிலும் எனக்கு ஆசையற்றுப் போயிருந்தது.

"இதற்குச் சில காலத்திற்கெல்லாம் எப்படியோ பரமஹம்ஸ சுவாமி யிடத்திலிருந்து நான் பிரிந்து விட்டேன். அவரை நான் எங்கெங்கு தேடியும் அவர் கிடைக்கவில்லை.

"அப்பொழுது நானும் சன்னியாசம் எடுத்துக்கொண்டு பற்றற்றவனாய்த் திரிய ஆரம்பித்தேன். பல வருஷங்கள் கழிந்தன—அந்தக் காகிதத்தின் பேச்சைக்கூட அநேகமாய் மறந்துவிட்டிருந்தேன்.

"இப்படி யிருக்கையில் ஒரு நாள் இந்தத் தாராகுளத்தின் வனத்தில் நுழைந்து அங்குள்ள ஒரு பாழடைந்த கோயிலில் தங்கினேன். இரண்டொரு நாள் தங்கினதும் கோயிற் சுவரில் இடத்துக்கிடம் பலவித அடையாளங்கள் வரையப்பட்டிருப்பதைக் கண்டேன். இவ்வடையாளங்கள் யாவும் எனக்கு முன்னமேயே தெரிந்தவை.

"எதைத் தேடிக்கொண்டு ஒரு சமயத்தில் வெகு நாட்கள் அலைந்து திரிந்தேனே அது இப்பொழுது கிட்டிவிட்டது

என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் இருக்கவில்லை. இனி இங்கு தங்கலாகாது, இவ்வனத்தைவிட்டுப் போய்விடவேண்டு மென்று எண்ணிக்கொண்டேன்.

"ஆனால் நான் அதை விட்டுப் போகவில்லை. என்ன இருக்கிறது என்று பார்ப்பதில் கெடுதி என்ன! என்று எண்ணலானேன். வீணான இவ்வெண்ணத்தை ஒரே அடியாய்த் தொலைத்து விட்டிருப்பேனே யாகில் வெகு நன்மையாயிருக்கும். அவ்வடையாளங்களை வைத்துக்கொண்டு பல வழிகளில் யோசித்தேன்; பயன்படவில்லை. அந்தக் காகிதத்தை ஏனோ கொளுத்திவிட்டேன்! என்று அடிக்கடி மனதில் தோன்றும். அதை வைத்திருந் திருப்பேனே யாகில் என்ன தீங்கு விளைந்து விட்டிருக்கும்? என்றும் கூட எண்ணினேன்.

"அப்பொழுது ஒருமுறை நான் பிறந்த கிராமத்திற்குப் போனேன். நம் முன்னோர்களின் வீடு வெகு பாழடைந்திருந்தது. நானோ சன்னியாசி, எனக்குப் பொன்னாலும் வைரங்களாலும் ஒரு பிரயோஜனமும் இல்லை, ஆனால் இவ்வேழைகள் கிருகஸ்தர்க ளாயிற்றே, அப்புதையற் பணத்தை இவர்கள் பொருட்டு எடுத்துக் கொடுத்தால் அதில் என்ன தப்பிதம் என்று நானே சொல்லிக்கொண்டேன்.

"அந்தக் காகிதம் இருக்குமிடம் எனக்குத் தெரியும். அதை எடுத்துக்கொள்வது எனக்கு ஒரு பெரிய காரியமாக இருக்கவில்லை.

"அதன் பிறகு ஒரு வருஷகாலம் இக்காகிதத்தை வைத்துக்கொண்டு நிர்ஜனமான இக்காட்டில் கணக்குகளைப் போட்

டுத் தேடிக்கொண்டிருந்தேன். மனதில் வேறொரு எண்ணமும் இருக்கவில்லை. அடிக்கடி தடைபடத் தடைபட என் ஆக்கிரகம் மேலுக்கு மேல் வளர்ந்தது—பேய் பிடித்தவனைப் போல இரவும்பகலும் இந்த ஒரே முயற்சியில் ஆழ்ந்து கிடந்தேன்.

"இதற்கிடையில் நீ என்னை எப்பொழுது பின் தொடர ஆரம்பித்தாயோ அது எனக்குத் தெரியாது. நான் சகஜ நிலைமையில் இருந்திருக்கும் பட்சத்தில் உன்னால் ஒருபோதும் என்னிடத்திலிருந்து மறைந்து கொண்டிருக்க முடியாது; ஆனால் நான் தன்மயம் ஆகிவிட்டிருந்தேன். வெளி விஷயம் எதுவும் என் கண்ணில் படவில்லை.

"நான் தேடிவந்த பொருளுக்கு வழி இன்று இம்மட்டுந்தான் கிடைத்திருக்கிறது. இவ்விடத்தில் இருக்கிற தனத் தவ்வளவு பூமியிலுள்ள எந்த ராஜ ராஜேசுவரன் பொக்கிஷங்களிலும் கிடையாது. இன்னும் ஒரே ஒரு ரகசியம் இருக்கிறது. அதை தெரிந்துகொண்டு விட்டால் இவ்வளவு தனத்தையும் பெற்றுவிடலாம்.

"அந்த ரகசியம் வெகு கஷ்டமானது. ஆனால் அதை நான் மனதிற்குள்ளேயே பகுத்தறிந்து வைத்திருக்கிறேன். ஆகையால் தான் "கிடைத்துவிட்டது" என்று மனக் களிப்பின் மிகுதியால் கெட்டியாகச் சொல்லிக்கொண்டேன். நான் இஷ்டப்பட்டால் இன்னும் ஒரு நாழிகைக்குள் பொன்னும் மாணிக்கமும் நிறைந்த அந்தப் பொக்கிஷ அறையில் போய் நின்றுவிடுவேன்!"

இப்படிச் சங்கரன் சொல்லி முடித்ததும் மிருத்யுஞ்ஜயன் அவன் கால்களைப் பிடித்துக்கொண்டு, "நீரோ சன்னியாசி. பணத்தால் உமக்கு ஒரு பிரயோஜனமும் இல்லை—என்னை அந்த பொக்கிஷ அறைக்குள் அழைத்துச் செல்ல வேண்டும்! என்னை ஏமாற்றிவிட வேண்டாம்," என்று வேண்டிக்கொண்டான்.

சங்கரன், "இன்று என்னுடைய கடைசித் தளைகளும் முறிந்து போயின! நீ எந்தக் கல்லால் என்னை அடித்துக் கொல்ல முயன்றாயோ அந்தக்கல்லின் அடி என் தேகத்தில் படவில்லை, ஆனால் அது என்னைச்சுற்றி யிருந்த மோகவலையைத்தாக்கி அதை கிழித்துவிட்டது. பண ஆசையின் கொலை பாதக ரூபத்தை இன்று நான் கண்டுவிட்டேன்! என் குரு பரமஹம்ஸ தேவரின் பொருள் செறிந்த சாந்தமான புன்சிரிப்பு இவ்வளவு காலத்திற்குப் பிறகு எனக்குள் ஒளி குன்றாத ஒரு மங்கள தீபத்தை ஏற்றி விட்டது," என்றான்.

மிருத்யுஞ்ஜயன் சங்கரன் கால்களைப் பிடித்துக் கொண்டு, "நீர் முக்த புருஷன், நான் முக்தனன்று, நான் முக்திக்கு ஆசைப்படவில்லை, என்னை இத் தன விஷயத்தில் ஏமாற்றி விடவேண்டாம்," என்று கெஞ்சினான்.

சன்னியாசி, "மகனே! அப்படியானால் உன் காகிதத்தை நீயே எடுத்துக்கொள்! தனத்தைத் தேடி உன்னால் அடைய முடியுமானால் நீயே பெற்றுக்கொள்," என்று சொல்லி அக் காகிதத்தையும் ஒரு தடியையும் மிருத்யுஞ்ஜயனருகில் வைத்துவிட்டு அவன் புறப்படப் போனான்.

—"என்மேல் தயை வைக்க வேண்டும் என்னை விட்டு விட்டு போய்விட வேண்டாம்—எனக்கு அந்தத் தனத்தைக் காட்டும்," என்று மிருத்யுஞ்ஜயன் கதறினான்.

பதில் ஒன்றும் கிடைக்கவில்லை.

அப்போது மிருத்யுஞ்ஜயன் தடியை ஊன்றிக்கொண்டு கையால் தடவித் தடவிச் சுரங்கத்தின் வெளியே போக முயன்றான். ஆனால் வழி வெகு சிக்கலாக இருந்தது, இராவணன் கோட்டையைப்போல எப்படிப் போனாலும் வழி தடைப்பட்டிருந்தது. கடைசியில் சுற்றிச்சுற்றி ஓய்ந்துபோய் ஓரிடத்தில் படுத்துக்கொண்டான். தூக்கமும் வெகு சீக்கிரத்திலேயே வந்துவிட்டது.

அவன் தூக்கத்திலிருந்து விழித்தபோது இரவா, பகலா, என்ன நாழிகை என்பதை அறிய ஒரு வழியையும் காணோம். பசி அதிகமாக இருந்தபடியால் அங்கவஸ்திரத்திலிருந்து அவன் அவல் கொஞ்சம் எடுத்துச் சாப்பிட்டான். ஆகாரம் முடிந்ததும் கையால் தடவிக்கொண்டுச் சுரங்கத்திலிருந்து வெளியேற வழி தேடலானான். ஒவ்வோரிடத்திலும் வழி தடைபடவே அவன் சும்மா உட்கார்ந்து கொண்டு கீச்சிட்டுக் கூவினான்: "ஓகோ! சன்னியாசி! எங்கே இருக்கிறீர்?"

இக்கூச்சலின் எதிரொலி சுரங்கத்தின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் பலமுறைகேட்டது. கிட்டத்திலிருந்தே பதில் வந்தது, "நான் உன்னருகிலேயே இருக்கிறேன்—உனக்கு என்ன வேண்டும் சொல்!"

மிருத்யுஞ்ஜயன் வருந்தின குரலில், "பணம் எங்கே இருக்கிறது? அதை எனக்கு தயவுசெய்து காட்டிக் கொடும்," என்றான்.

அதற்கு மறுமொழி ஒன்றும் கிடைக்கவில்லை, மிருத்யுஞ்ஜயன் மறுபடி மறுபடி கூவினான், பதிலே கிடைக்கவில்லை.

நாழிகை ஜாமம் என்று வகுக்கப்படாத இப்பூமி நடுவின் நீண்ட இருளில் மிருத்யுஞ்ஜயன் மறுபடி ஒருமுறை தூங்கலானான். திரும்பவும் அதே இருளில் கண் விழித்தெழுந்து உச்ச சுவரத்தில் கத்தினான்—"ஐயோ! எங்கே இருக்கிறீர்?"

கிட்டத்திலிருந்தே பதில் கிடைத்தது—"இங்கேயே தான் இருக்கிறேன், என்ன வேண்டும்?"

—"எனக்கு வேறொன்றும் வேண்டாம்—என்னை இச் சுரங்கத்திலிருந்து வெளியே அழைத்துச் செல்லும்," என்றான் மிருத்யுஞ்ஜயன்.

—"உனக்குப் பணம் வேண்டாமா?" என்று சன்னியாசி கேட்டான்.

மிருத்யுஞ்ஜயன்: "இல்லை, வேண்டாம்."

அப்போது சக்கிமுக்கிக் கல்லின் சத்தம் கேட்டது, சிறிது நேரத்திற்கெல்லாம் விளக்கு ஒன்று பிரகாசமாய் எரிந்தது. "அப்படியானால் வா, மிருத்யுஞ்ஜயா, இச் சுரங்கத்தை விட்டு வெளியே போவோம்," என்றான் சன்னியாசி.

மிருத்யுஞ்சயன் பரிதாபகரமான குரலில், "இவ்வளவு செய்ததும் வெறும் வியர்த்தமாய்ப் போகிறதே? இவ்வளவு கஷ்டத்தின் பிறகும் தனத்தை நான் பெறலாகாதா?" என்று கெஞ்சிக்கேட்டான்.

உடனே திவட்டி அவிந்துபோயிற்று. "ஐயையோ என்ன கொடுமை," என்று சொல்லிக்கொண்டே மிருத்யுஞ்ஜயன் உட்கார்ந்து யோசிக்கலானான். இன்ன வேளை என்று சொல்லமுடியாது. இருட்டிற்கோ முடிவே இல்லை. தன்னுடைய முழு சரீர பலத்தையும் மனோ பலத்தையும் கொண்டு அக்கொடிய இருளை இடித்துப் பொடியாக்கி விடவேண்டுமென்று மிருத்யுஞ்ஜயன் ஆசைப்பட்டான்.—வெளிச்சத்திற்காகவும், வானத்திற்காகவும் விதம் விதமாய் சித்திரிக்கப்பெற்ற உலக வனப்பிற்காகவும் அவன் மனம் பதைபதைத்தது. "ஓகோ! சன்னியாசி, ஓ கொடிய சன்னியாசி! எனக்குப் பணம் வேண்டாம், என்னைக் காப்பாற்றிவிடும்."

—"பணம் வேண்டாமா! ஆனால், என் கையைப் பிடித்துக்கொண்டு என் கூட வா," என்றான் சன்னியாசி.

இம்முறை விளக்கு ஏற்றவில்லை. ஒரு கையில் தடியையும் ஒரு கையில் சன்னியாசியின் உத்தரீயத்தையும் பிடித்துக் கொண்டு மிருத்யுஞ்சயன் மெல்ல மெல்ல நடந்தான். வெகு நேரம் சுற்றித் தடுமாறி இங்குமங்கும் போய்க் கடைசியாக ஓரிடம் வந்ததும் சன்னியாசி, "நில்" என்றான்.

மிருத்யுஞ்ஜயன் நின்றான். சற்று நேரத்திற்கெல்லாம் துருவேறின இரும்பு கதவுகளைத் திறந்த சத்தம் கேட்டது.

சன்னியாசி மிருத்யுஞ்ஜயன் கையைப் பிடித்துக்கொண்டு, "வா" என்றான்.

மிருத்யுஞ்ஜயன் முன்புறமாகச் சென்று ஒரு அறைக்குள் நுழைந்தான். அப்போது சக்கிமுக்கிக் கல்லின் சத்தம் கேட்டது. சற்று நேரத்திற்கெல்லாம் திவட்டி கொளுத்தப்பட்ட போது மிருத்யுஞ்ஜயன் ஒரு ஆச்சரியமான காட்சியைக் கண்டான். அறையின் மேற்புறத்திலும் சுற்றுப்புறத்திலும் கனத்த பொன் தகடுகள் போட்டிருந்தன. அவைகளின் ஒளியானது சூரிய ஒளியின் கதிர்களைப் பூமியின் கர்ப்ப கோசத்தில் வரிசை வரிசையாக அடைத்து வைத்திருந்ததைப்போல இருந்தது. மிருத்யுஞ்ஜயனுடைய இரு விழிகளும் பளபளவென்று ஜொலித்தன.—"இவ்வளவு பொன்னும் என்னுடையது, என்ன செய்தாலும் நான் இதை விட்டுப் போக மாட்டேன்," என்று அவன் பைத்தியக்காரனைப் போலச் சொல்லிக் கொண்டான்.

சன்னியாசி: நல்லது, நீ இதை விட்டுப் போகவேண்டாம், இதோ திவட்டி இருக்கிறது, இதோ பொரிமாவும் அவலும் பானை நிரம்பத் தண்ணீரும் கூட வைத்து விட்டுப் போகிறேன்."

மிருத்யுஞ்ஜயன் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே சன்னியாசி வெளியே போய்ச் சுவர்ண பொக்கிஷத்தின் இரும்புக் கதவுகளைப் பூட்டிக் கொண்டான்.

மிருத்யுஞ்ஜயன் அங்கிருந்த பொற்கட்டிகளைப் பல முறையும் தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கொண்டு அறையைச் சுற்றிச்சுற்றி வருவான். சிறு சிறு பொன் துணுக்கு

களை எடுத்துக் கரையில் வீசி எறிவான், சிலவற்றை மடி யில் எடுத்து வைத்துக்கொள்வான். ஒரு துண்டை மற் றொரு துண்டின்மேல் தட்டிச் சத்தம் செய்வான். தேகம் முழுதும் அவைகளால் தடவிக்கொள்வான். கடைசியாக ஓய்ந்துபோய் சில பொன் தகடுகளைப் பரப்பி அவைகளின் மேல் படுத்துத் தூங்கிவிட்டான்.

விழித்தெழுந்தபோது நாற்புறத்திலும் பொன் பளிச் பளிச் என்று மின்னிக் கொண்டிருந்தது. பொன்னைத் தவிர வேறொன்றும் கிடையவே கிடையாது.

பூமியின் மேலிருந்தால் இப்பொழுது காலைப்பொழு தாக இருக்கும்—எல்லா ஜீவ ஜந்துக்களும் ஆனந்தமாய் விழித் தெழு மல்லவா என்று மிருத்யுஞ்ஜயன் எண்ண லானான்.

அவன் வீட்டுக் குளத்தங்கரைத் தோட்டத்திலிருந்து வீசும் காலைக்காற்று இனிமையான ஒருவித வாசனையோடு அவன் மூக்கில் வந்து படுவதாக அவனுக்குத் தோன் றிற்று. வாத்துகள் சத்தமிட்டுக் கொண்டு அசைந்து அசைந்து காலை வெயிலில் குளத்தின் ஜலத்தில் இறங்கு வதும், வீட்டு வேலைக்காரி பாமா முந்தானையை இடுப்பில் கட்டிக் கொண்டு வலது தோளின்பேரில் பித்தளைத் தட்டு களையும் வெண்கலக் கிண்ணங்களையும் அடுக்காக எடுத்துக் கொண்டு குளத்தங்கரைக்கு வந்து சேர்வதும் அவன் கண் களில் வெகு நன்றாகத் தெரிவது போலிருந்தது.

மிருத்யுஞ்ஜயன் கதவைத்தட்டி உரக்கக் கூப்பிட்டான் "ஓஹோ! சன்னியாசிப் பெருமானே! எங்கே இருக் கிறீர்?".

கதவு திறந்தது, "என்ன வேண்டும்?" என்றான் சன்னியாசி.

மிருத்யுஞ்ஜயன் :—" நான் வெளியே போக வேண்டும் —கூட இரண்டொரு பொன் தகடுகளை எடுத்துக்கொண்டு போகலாகாதா?"

சன்னியாசி அவனுக்குப் பதில் ஒன்றுமே சொல்லாமல் புதிய திவட்டி ஒன்றைக் கொளுத்தினான்—கமண்டலு நிறையத் தண்ணீரும், உத்தரியத்திலிருந்து கொஞ்சம் அவலும் தரைமேல் வைத்துவிட்டு வெளியே போய்விட்டான், கதவும் மூடப்பட்டது.

மிருத்யுஞ்சயன் இலேசான பொன் தகடுகளை எடுத்து முறுக்கித் துண்டு துண்டாக உடைத்து அறையின் நாற்புறத்திலும் மண்கட்டிகளைப் போல வீசி எறிவான். சில துண்டுகளைப் பல்லால் கடித்துக் கோடுகள் அமையும்படிச் செய்வான். சில சமயம் பொன் தகட்டை மண்ணில் போட்டுக் காலால் மிதிப்பான். பூமிமேல் என்னைப்போல் பொன்னை இப்படி வீசி எறியக்கூடிய சக்ரவர்த்தி யாராவது உண்டா? என்று தனக்குள் எண்ணிக் கொள்வான். மிருத்யுஞ்ஜயனுக்குப் பெருங்கோபம் வந்து விடும். குவிந்து கிடக்கும் இப்பொன் ராசியைப் பொடி பொடியாக்கித் தூசியைப் போலக் காற்றில் பறக்க விடவேண்டும் என்று எண்ணுவான்—பணத்தாசை பிடித்துத் திரியும் பூலோக ராஜ மகாராஜாக்களை யெல்லாம் அற்பப் பேதைகள் என்று சொல்லித் தனக்குள்ளேயே இகழ்வான்.

இப்படிக் கெல்லாம் எண்ணிக் கொண்டே சிறிது நேரம் கழிந்ததும் பொன் தகடுகளை ஒன்றோடொன்று

சேர்த்து அவைகளின் மேல் படுத்துத் தூங்கிவிட்டான். தூக்கம் நீங்கி எழுந்ததும் அதே பொற்குவியல்கள் தான் நாற்புறத்திலும் கிடக்கக் கண்டான். அப்போது அவன் கதவைத்தட்டிக் கூவி, "ஓகோ! சன்னியாசி எனக்கு இப் பொன் வேண்டாம்!" என்று கதறினன்.

ஆனல் கதவு திறக்கவில்லை. கூவிக் கூவி மிருத்யுஞ் ஜயனுக்குத் தொண்டை உடைந்து போயிற்று, கதவு என் னவோ திறக்கவில்லை. ஒவ்வொன்முகப் பொன் துண்டு களைக் கதவின் மேல் வீசி எறிந்தான், அதனல் ஒரு பய னையும் காணுமை. மிருத்யுஞ்ஜயனுக்கு நெஞ்சடைத்தது—ஒரு வேளை சன்னியாசி இனி வரமாட்டாரோ! இப் பொற் சிறையில் தனித்து தனியாக நிமிஷத்துக்கு நிமிஷம் துக்கப் பட்டுக் கொண்டேதான் வேண்டியிருக்குமோ! என் றஞ்சினன்.

பொற் குவியல்களைப் பார்க்கும்போதெல்லாம் அவன் மனதில் பலவித எண்ணங்கள் தோன்றலாயின. நாற்புறத்தி லும் குவிந்து கிடந்த இப் பொன் ராசிகள் சப்தமின்றி பயங் கரமான கொடியதொரு புன்சிரிப்பு சிரிப்பது போலிருந்தது —அவைகளுக்குள் சலனமில்லை, மாறுதலில்லை. மிருத்யுஞ் ஜயன் மனதில் படபடப்பும் கவலையும் தோன்றும், அக் குவியல்களில் அப்படிப்பட்டதொன்றையும் காணும். வேதனை என்பதே அவைகளுக்குத் தெரியாது, இப்பொற் பிண்டங்கள் சூரிய ஒளிக்காக ஆசைப்படுவதில்லை, வான வெளிக்காகப் பறப்பதில்லை; அவைகள் காற்றை விரும்புவ தில்லை, பிராண சக்தியை வேண்டுவதில்லை, முக்தியை அவாவுவதில்லை. இவைகள் இந்நீண்ட இருளில் வெகு

காலமாய்த் தம் குறுகின ஒளியோடும் தம் இறுகின தன்மையோடுமே விழுந்து கிடக்கின்றன!

"பூமியின்மீது இச்சமயம் பசுக்கள் வீடு திரும்பும் மாலைப்பொழுது அல்லவா? ஆஹா அம்மாலைப் பொழுதே பொன் ஆயிற்றே! இங்கிருக்கும் பொன்னே ஒரு கணப்பொழுதுக்குக் கண்களை மயக்கிவிட்டு, துக்கத்தோடு இருளில் போய் மறைந்து விடுகிறது! அதோ வீட்டின் முற்றத்தில் ஒரு தனி நக்ஷத்திரம் காணப்படுகிறது. மாட்டுக்கொட்டிலில் விளக்கேற்றிவிட்டு மருமகள் வீட்டு மாடத்தில் விளக்கை வைக்கிறாள். கோயிலில் தீபாராதனையின் மணியோசைக் கேட்கிறது," என்று சொல்லிக் கொண்டு அவன் விசன முறுவான்.

கிராமத்திலும் வீட்டிலும் நடந்தேறும் மிக அற்ப மான விஷயங்களும் கூட இன்று மிருத்யுஞ்ஜயனுடைய கற்பனையாகிற கண்களில் மேன்மையான ஒளியுடன் ஜொலித்தன. வீட்டின் முன்புறத்தில் சாயங்காலம் வரையில் படுத்துறங்கும் சோம்பேறி நாய் அவன் நினைவிற்கு வந்த போது அவன் அதை மறுபடியும் காண்பதற்கில்லையே என்று வருந்துவான். தாராகுள கிராமத்தில் அவன் எந்தக் கடையில் சிலதினங்கள் தங்கினனே அந்தக் கடைக்காரன் இந்த ராத்திரி வேளையில் விளக்குகளை அவித்துவிட்டுக் கடை கட்டிக்கொண்டு மெல்ல மெல்ல கிராமத்தில் தன் வீட்டுக்குப் போய் போஜனம் செய்துகொண்டிருப்பானல்லவா என்ற எண்ணம் அவன் மனதில் தோன்றவே, கடைக்காரன் எவ்வளவு பாக்கியசாலி! என்று எண்ணினன். இன்றைக்கு என்ன கிழமையோ தெரியவில்லையே!

ஞாயிற்றுக்கிழமையா யிருக்கும் பக்ஷத்தில் இச்சமயத்தில் ஜனங்கள் சந்தையிலிருந்து தம் தம் நண்பர்களோடு வீடு திரும்புவார்கள், தம்மோடுகூட வந்து கும்பலில் பிரிந்து விட்டவர்களை உரக்கப் பெயர்சொல்லிக் கூப்பிட்டுக்கொண் டிருப்பார்கள். கூட்டம் கூட்டமாகப் படகுகள் நதியைக் கடந்து கொண்டிருக்கும். குடியானவர்கள் தலையில் மூட் டையோடு கையில் ஓரிரண்டு மீன்களைத் தொங்கவிட்டுக் கொண்டு இராக்காலத்தில் வானம் நிறைந்த நக்ஷத்தி ரங்களின் மங்கலான ஒளியில், மைதான ஓரமாய்ச் செல்லும் பாதைகளின் மேலும், வயல்களின் வரப்புகளின்மேலும், குப்பங்களில் உலர்ந்த மூங்கில் இலைகளும் சருகுகளும் உதிர்ந்துகிடக்கும் முற்றங்களின் மேலும் நடந்துபோய் தத்தம் கிராமங்களை அடைவார்கள்.

பூமியின்மேல் நடைபெற்றுவரும் விசித்திரமான, மகத்தான, என்றும் மாறி மாறிப்பெருகுகிற இவ்வுலக வாழ்க்கையின் பிரவாகத்தில் அற்பமான தன் எளிய வாழ்க் கையையும் கொண்டுவந்து கலக்கும்படி, நூறு மண் அடிக் குகளைத் தொளைத்துக்கொண்டு ஜன சமூகத்தின் குரல் தன்னை அழைப்பதுபோல மிருத்யுஞ்ஜயனுக்குத் தோன் றிற்று. அந்த வாழ்க்கையும், அந்த வானமும், அந்த ஒளி யும் பூமியிலுள்ள எல்லா மாணிக்கங்களையும் விட எவ்வள வோ விலையுயர்ந்த தென்பது அவனுக்குத் தெரியவந்தது. "ஒருக்ஷண காலமாவது அப்பசுமை வாய்ந்த தாய் நாட் டின் தூசி நிறைந்த மடியிலிருந்துக்கொண்டு, எங்கும் பரந்த ஒளியுள்ள நீலாம்பரத்தின் கீழ் புற்பூண்டுகளின் வாசனையோடு வீசும் அக்காற்றை நான் சாகுந் தருணத்தி

லாவது என் மார்பு நிறைய ஒருமுறை சுவாசிப்பேனே யாகில் அப்பொழுது தான் என் உயிர்வாழ்க்கைப் பய னுடையதாகும்,'' என்று அவன் எண்ணி எண்ணித் தனக் குள் கலங்கினன்.

அச்சமயத்தில் கதவு திறந்தது. சன்னியாசி அறையில் நுழைந்து, "மிருத்யுஞ்ஜயா, உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டான்.

"எனக்கு வேறொன்றும் வேண்டாம்—இச்சுரங்கம், இவ்விருள், இந்த வழியற்ற இராவணன் கோட்டை, இப் பொற் சிறை ஆகிய இவைகளிலிருந்து என்னை வெளியே அழைத்துப் போகவேண்டும்! எனக்கு ஒளி வேண்டும், ஆகாயம் வேண்டும், விடுதலை வேண்டும்!'' என்று மிருத் யுஞ்ஜயன் கெஞ்சினன்.

"இப்பொன் பொக்கிஷத்தைவிட எவ்வளவோ விலை யுயர்ந்த இரத்தின பொக்கிஷம் ஒன்று இருக்கிறது. அதற் குள் ஒருமுறை போய் பார்க்கிறாயா?'' என்று சன்னியாசி கேட்டான்.

—"வேண்டாம், வேண்டவே வேண்டாம்."

—"ஒரு முறை வேடிக்கையாய்ப் பார்த்து வரலாம் என்ற ஆசைகூட உனக்கு இல்லையா?''

—"இல்லை அதைக் கண்ணெடுத்துப் பார்க்கக்கூட எனக்கு இச்சையில்லை. நான் கோவணாண்டியாய் பிச்சை எடுத்துத் திரிய வேண்டி வந்தாலும் சரி, இனி இங்கு ஒரு க்ஷணங்கூடத் தங்க எனக்குப் பிடிக்கவில்லை.''

சன்னியாசி :—"நல்லது, ஆனால் வா."

மிருத்யுஞ்ஜயனை கையைப் பிடித்துக் கொண்டு சன்னியாசி அவனை அந்த ஆழமான கிணற்றுக்கருகில் அழைத்து வந்தான். அவன் கையில் அந்தக் காகிதத்தைக் கொடுத்து "இதைக் கொண்டு நீ என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டான்.

மிருத்யுஞ்ஜயன் அக்காகிதத்தைத் துண்டு துண்டாகக் கிழித்துக் கிணற்றுக்குள் போட்டு விட்டான்.

பிராயச் சித்தம்.

க

சுவர்க்கலோகத்திற்கும் மனித உலகத்திற்கும் இடையில் வரையறையற்ற அராஜகமான ஸ்தானம் ஒன்று, அதில் தான் திரிசங்குராஜா மிதந்து சஞ்சரித்துக் கொண்டிருக்கிறான். அங்கு ஆகாயப் புஷ்பங்கள் எப்பொழுதும் பூத்துக் கொண்டே இருக்கும். ஆகாயக் கோட்டைகளால் சூழப் பெற்ற அம்மகா தேசத்தின் பெயர் "நேர்ந்தாலும் நேரக் கூடும்." பெரிய பெரிய செயல்களைச் செய்து அமரத்துவத்தை அடைகிறவர்கள் மகா பாக்கிய சாலிகள். அப்படிக்கின்றி தமக்குள்ள சாமானிய சக்திகளைக் கொண்டு சாதாரண மனிதர்களுக்கிடையில் நாள் தோறும் குடும்பங்களில் சாதாரணமாய் நடக்கவேண்டியவைகளில் யார் யார் உதவி புரிந்துவருகிறார்களோ அவர்களும்கூட பாக்கியசாலிகளே. ஆனால் துரதிருஷ்டத்தினால் இவ் விருதிறத்தாரின் நிலைமைகளுக்கு இடையில் யார் அகஸ்மாத்தாய் விழுந்து விடுகிறார்களோ அவர்களுக்கு ஒரு வழியும் கிடைப்பதில்லை. அவர்களால் ஏதாவது ஒரு நன்மை நேர்ந்தாலும் நேரக் கூடும். ஆனால் நேரக்கூடும் என்னும் இக்காரணத்தாலேயே அவர்கள் மூலமாக ஒரு சிறிய காரியம் நடைபெறுவது கூட அசாத்தியமாகி விடுகிறது.

நம்முடைய அனாதபந்து அந்நிய தேசத்தில் தான் உலாவி வந்தான். அவன் விதியினால் வஞ்சிக்கப்பட்ட ஒரு சிறுவன். முயன்றால் எதையும் அவன் சாதித்து விடுவான் என்பது எல்லாருடைய நம்பிக்கையும். எதாவது ஒன்றுக்கு அவன் ஒருபோதும் முயன்றதும் கிடையாது, எதையும் அவன் ஒருபோதும் சாதித்ததும் கிடையாது; ஆகையினாலேயே அவனைப்பற்றி யாவரும் கொண்டிருந்த அபிப்பிராயமும் மாறுபடாமலே இருந்துவந்தது. அவன் பரீக்ஷையில் முதல்வனாகத் தேறுவான் என்று எல்லாரும் சொன்னார்கள். அவனோ ஒரு பரீக்ஷைக்கும் போகவே இல்லை. அவனுக்கு எந்த உத்தியோகம் கிடைத்தாலும் அதில் மேலான பதவிக்கு அவன் கஷ்டமின்றி வந்துவிடுவான் என்று யாவரும் எண்ணினார்கள். அவன் எந்த உத்தியோகத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை. சாமானிய மனிதர்களைக் கண்டால் அவனுக்கு இகழ்ச்சி அதிகம்; அதற்குக் காரணம், அவர்கள் வெறு சாமானியர்கள் என்பதே. கெட்டிக்காரர்களிடத்தில் கூட அவனுக்கு மதிப்பில்லை. காரணம், மனமிருந்தால் அவர்களைக் காட்டிலும் தான் கெட்டிக்காரனாய்விட முடியும் என்பதே.

அநாதபந்துவினுடைய கீர்த்தி, செல்வாக்கு, சுகம், சம்பத்து முதலிய எல்லாச் சௌபாக்கியங்களும் காலதேசங்களோடு சம்பந்தப் படாத அசம்பவங்கள் நிறைந்த பொக்கிஷங்களில் தான் குடி கொண்டிருந்தன. இந்நிஜ உலகத்தில் பிரம்ம தேவன் அவனுக்குக் கேவலம் ஒரு பணக்கார மாமனையும், நல்லொழுக்கமுள்ள ஒரு மனைவியையுமே தான் கொடுத்திருந்தான்! மனையாளின் பெயர் விந்திய வாஸினி.

அனுதபந்துவுக்கு அவள் பெயர் அவ்வளவு ரஸமானதாகப் படவில்லை. ரூபத்திலும் குணத்திலும் கூட அவளைத் தன் தகுதிக்கு ஏற்றவள் என்று அவன் எண்ணவில்லை. ஆனால் விந்தியவாஸினி தன் புருஷன் விஷயத்தில் பாராட்டிவந்த பெருமைக்கு அளவே யில்லை. மற்றெல்லா ஸ்திரீகளின் கணவர்களையும் விடத் தன் புருஷன் எல்லா விஷயங்களிலும் மேம்பட்டவன் என்பதில் அவளுக்குச் சிறிதும் சந்தேகம் இருக்கவில்லை. அவளுடைய புருஷனும் தன்னைப் பற்றின மட்டில் அப்படியே தான் எண்ணிக் கொண்டிருந்தான். அவனைச் சூழ்ந்திருந்தவர்களின் நம்பிக்கையும் அந்த எண்ணத்திற்கு அனுகூலமாகவே இருந்தது.

தன் கணவனிடத்தில் தான் வைத்திருந்த மதிப்பிற்கு ஒரு குறையும் ஏற்படக்கூடாதென்று விந்தியவாஸினி வெகு கவனமாயிருந்தாள். இக்கௌரவப் பதவியிலேயே தன் கணவனை வைத்து நிரந்தரமாய்ப் பூஜை செய்துகொண்டு காலம் கழிக்க வேண்டுமானால் அவள் அவனைத் தன் இருதயத்தில் வானளாவிக் குலைவின்றி நிற்கும் பக்தி மலையின் சிகரத்தில் பிரதிஷ்டை செய்து மூடர்கள் நிறைந்த இம்மானிட உலகின் பார்வைக்கு எட்டாதபடி காக்கவேண்டும். ஆனால் இம்மண் உலகில் வெறும் பக்தியினால் மாத்திரம் ஒன்றை எப்பொழுதுமே உயர்த்தி வைத்திருக்க முடியாது; மேலும் அனுதபந்துவும் அவ்வளவு சிறப்பு வாய்ந்தவனன்று என்று எண்ணினவர்களுக்குக் குறைவுமில்லை. இது காரணமாக விந்தியவாஸினியும் பலமுறை துயரப் படவேண்டி வந்தது.

கலாசாலையில் படித்து வந்தவரையில் அநாதபந்து மாமனார் வீட்டிலேயே வாசம் செய்து வந்தான். பரீக்ஷை

நடந்தபோது அவன் பரிக்ஷைக்குப் போகவில்லை. அதற்கு மறு வருஷம் அவன் கலாசாலைக்கும் போகாது நின்று விட்டான்.

இதன் பொருட்டு விந்தியவாஸினிக்குச் சாமானிய மனிதர்கள் கண் முன்பு கூடத் தலை காட்ட வெட்கமாயிருந்தது. ஒரு நாள் ராத்திரி அவள் அநாதபந்துவோடு, “பரிக்ஷைக்குப் போவதே உசிதம் அல்லவா?” என்றாள்.

அநாதபந்து இகழ்ச்சி நிறைந்த சிரிப்போடு, “பரிக்ஷைக்குப்போய் விட்டால் நாலு கைகள் உண்டாய் விடுமா என்ன? ஒன்றுக்கும் உதவாத நம் கேதாரன் கூட அல்லவோ அப்பரிக்ஷையில் தேறிவிட்டான்,” என்றான்.

விந்தியவாஸினிக்கு மனது சற்றுச் சமாதானமடைந்தது. ஊரிலுள்ள குதிரை கழுதைகளும் போய் தேறும் இப் பரிக்ஷைக்குப் போவதனால் அநாதபந்துவுக்கு என்ன கௌரவம் அதிகமாய் விடப்போகிறது என்று அவளும் கூட எண்ணலானாள்.

பாலிய தோழியாகிய அண்டை விட்டுக் கமலா சந்தோஷ சமாசாரம் ஒன்றைச் சொல்ல அங்கு வந்தாள். அவள் தம்பி ரமேசன் இம்முறை பரிக்ஷையில் தேறி உபகாரச் சம்பளமும் பெற்று விட்டான். விந்தியவாஸினிக்கு இதைக் கேட்ட போது காரணமின்றிக் கோபம் வந்தது. கமலாவின் சந்தோஷம் முற்றும் பரிசுத்தமானது தான் என்று அவளுக்குப் படவில்லை. அதில் தன் கணவனைப் பற்றியதொரு இலேசான மறைபொருள் இருப்பதாக அவள் எண்ணினாள். ஆகையால் தன் தோழியின் மனக்

களிப்பில் தானும் கூடிக் களிக்காமல் அவள் கடுகடுத்துக் கொண்டு சண்டை செய்யும் தொனியில், எப்.ஏ. பரீக்ஷையை ஒரு பரீக்ஷையாகக் கணக்கிடுவதே. இல்லை, சீமையில் எந்தக் கலாசாலையிலும் பி.ஏ. பரீக்ஷைக்குக் கீழான பரீக்ஷையே கிடையாது என்றும் சொன்னாள். இந்த விஷயங்களை எல்லாம் விந்தி தன் கணவனிடத்திலிருந்து அறிந்து கொண்டிருந்தாள் என்பதைச் சொல்வது அநாவசியம்.

சந்தோஷ சமாசாரத்தைச் சொல்ல வந்த கமலா தன் பிராண சகியிடத்தில் இவ்விதமான சுடு சொற்களைக் கேட்டதும் முதலில் சற்று வியப்புற்றாள். ஆனால் அவளும் மனுஷிதானே, ஒரு நிமிஷத்தில் விந்திய வாஸினியின் மனப் பான்மையை உணர்ந்து விட்டாள். தன் சகோதரனை அவமானப் படுத்தியதைச் சகியாமல், நாக்கு நுனியில் ஒரு துளி விஷத்தோடு, "நாங்கள் சீமைக்குப் போனதுமில்லை, துரைகளைக் கலியாணம் செய்து கொண்டதுமில்லை, அம்மா; இவ்வளவு சமாசாரம் எங்களுக்கு எங்கிருந்து கிடைக்கும்? பேதைப் பெண்களாகிய எங்களுக்குத் தெரிந்ததெல்லாம் இது தான்: வங்காளிப் பிள்ளைகளைக் கலா சாலையில் எப்.ஏ. பரீக்ஷைக்கு அனுப்புகிறார்கள்; அதிலும் கூட எல்லாரும் போய் தேறி விடுகிறதில்லை," என்று கொஞ்சங்கூடப் படபடப்பின்றி இனிய தோழமையோடு சொல்லுகிறவளைப் போலச் சொல்லி விட்டுக் கமலா புறப்பட்டுப் போனாள். சண்டைக்கு இழுக்கப் பிரியப்படாத விந்தியா பதிலொன்றும் சொல்லாமல் தன்னறைக்குள் போய் அழலானாள்.

சிறிது நாட்களுக்குள் வேறொரு சம்பவம் நடந்தது. வெகு தூரத்திலிருந்து பணக்காரனான ஒரு பந்து குடும்ப சகிதம் கல்கத்தாவுக்கு வந்து விந்தியவாஸினியின் தந்தை வீட்டில் தங்கினான். விருந்தாளிகளின் பொருட்டு அவள் தந்தையாகிய ராஜகுமார பாபுவின் வீட்டில் யாவும் வெகு ஆடம்பரத்துடன் நடந்தேறின. அவர்களுக்கு விசேஷமான மரியாதை காட்டுவதற்காக, முன் கட்டில் தன் வசமிருந்த கச்சேரி அறையை அவர்களுக்கு விட்டுவிட்டு, மாப்பிள்ளை மாமனாரின் அறையில் வந்து சில நாட்கள் தங்க வேண்டிய தாயிற்று.

இதனால் அநாதபந்து தனக்குப் பெரிய அவமானம் ஏற்பட்டு விட்டதாக எண்ணிக் கோபத்தால் பொங்கி வடிந்தான். முதலில் தன் மனைவியிடம் போய் அவள் தந்தையைக் கண்டபடி திட்டிவிட்டு, அவளை இதற்காகச் சும்மா விடுவதில்லை என்று சொல்லி அவன் அவளை அழும்படி செய்தான். பிறகு உணவு மறுத்தல் முதலியது போன்ற இன்னும் பல உபாயங்களைக் கொண்டு தன்னுடைய கோபத்தைப் படிப்படியாய் வெளியிட்டான், இதைக் கண்டதும் விந்தியவாஸினிக்கு வெகு வெட்கமாய் விட்டது, அவள் இயற்கையாகவே மானி; இப்படிப்பட்ட சந்தருப்பங்களில் சுவாபிமானத்தால் கோபத்தை வெளி யிடுவது தனக்கே வெட்கக்கேடன்றி வேறில்லை என்பதை உணர்ந்தாள். கணவனுடைய கைகால்களைப் பிடித்து அழுது அழுது கெஞ்சிக் கேட்டுக்கொண்டு வெகு கஷ்டப்பட்டு அவனைச் சாந்தப் படுத்தினாள்.

விந்தியா நல்ல விவேகமுடையவள், ஆகையால் தன் தாய் தந்தையர்களின் மீது அவள் எவ்வித தோஷமும் கூற வில்லை — இது ஒரு அற்ப விஷயம் என்றும், ஸர்வ சாதாரணமாய் நடக்கக்கூடியது தான் என்றும் அவளுக்குத் தெரியும். ஆனால் இதுவும் இவளுக்குப் புலப் படாமற் போகவில்லை, தன் கணவன் மாமனார் வீட்டிலேயே இருந்து வருவதனால் மாப்பிள்ளை மரியாதை குறைந்து கொண்டே வருகிறது என்பதும்.

அன்றுமுதல் அவள், "என்னை உன் வீட்டுக்கு அழைத்துப்போ, நான் இங்கிருக்கமாட்டேன்," என்று தன் கணவனைத் தொந்தரை செய்து வந்தாள்.

அநாதபந்துவிடத்தில் வேண்டியமட்டும் அகங்காரம் இருந்ததேயன்றி தன்மதிப்பு சிறிதுமிருக்கவில்லை. தன் தாய் தந்தையர்களிருக்கும் ஏழ்மையான நிலைமைக்குத் திரும்பிபோக அவனுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. ஆனால் அவன் மனைவி சற்றுப் பிடிவாதமாய், "நீ போகாவிட்டால் நானே தனியாகப்போய் விடுகிறேன்," என்றாள்.

கல்கத்தாவுக்கு வெளியில் சற்று தூரத்திலிருக்கும் ஒரு பட்டிகாட்டிலுள்ள மண் சுவரும் கூரைவீடுமான தன் தாய் வீட்டிற்குத் தன் மனைவியை அழைத்துச் செல்ல வேண்டிய ஏற்பாடுகளை அரை மனதோடு அநாதபந்து செய்தான். புறப்படும் சமயத்தில் ராஜகுமார பாபுவும் அவர் மனைவியும், இன்னும் சிறிது காலம் தம் வீட்டில் தங்கி இருந்து போகும்படி தம் மகளைப் பலவிதமாய் வேண்டினார்கள். பெண் தலை குனிந்துகொண்டு கம்பீரமாய்

வாய் திறவாமலிருந்து விட்டாள். இப்படி அவள் மௌனம் சாதித்ததிலிருந்து—"இல்லை அது முடியாது" என்று அவள் மனதில் கொண்டிருந்த எண்ணம் அவர்களுக்குத் தெளிவாய் விட்டது.

இம்மாதிரி திடீரென்று அவள் புறப்படத் தீர்மானித்துக் கொண்டதற்குக் காரணம், ஒருவேளை தம்மை யறியாமலே அவள் மனம் புண்படும்படி ஏதாவது தாம் செய்திருக்கலாமோ என்ற சந்தேகம் அவர்களுக் குண்டாயிற்று. ராஜகுமார பாபு துயருற்ற முகத்தோடு, "அம்மா, நாங்கள் தெரியாமல் ஏதாவது செய்துவிட்டதனால் உனக்கு மன வருத்தம் உண்டாயிருக்கிறதோ?" என்று கேட்டார்.

விந்தியவாசினி தன் பிதாவின் முகத்தை இரக்கத்தோடு பார்த்துச் சோகமுற்று: "அப்படி ஒருநாளுமில்லை. இந்த அகத்தில் வெகு சுகமாகவும் வெகு ஆதரவுடனும் தான் என் நாட்கள் கழிந்தன," என்று சொல்லிக் கண்ணீர் சொரிந்தாள். ஆனால் தான் கொண்ட எண்ணத்தை மாத்திரம் அவள் விடவில்லை.

தாய் தந்தையர்கள் பெருமூச்செறிந்து கொண்டு, எவ்வளவு அன்போடும் ஆதரவோடும் வளர்த்தாலும் விவாகமாய்விட்டாலே ஒரு பெண் வேறாகி விடுகிறாள், என்று தமக்குள் எண்ணிக் கொண்டார்கள்.

கடைசியாகக் கண்ணும் கண்ணீருமாய் எல்லாரிடமும் விடை பெற்றுக் கொண்டு தான் பிறந்தது முதல் நேசித்து வந்த தந்தை வீட்டையும் சுற்றத்தாரையும் தோழிமார்களையும் விட்டுவிட்டு விந்தியவாசினி பல்லக்கில் ஏறிச் சென்றாள்.

உ

கல்கத்தாவிலுள்ள ஒரு பணக்காரன் வீட்டுக்கும் கிரா மத்திலுள்ள ஒரு கிருகஸ்தன் வீட்டுக்கும் எவ்வளவோ வித்தியாசம். ஆனால் விந்தியவாஸினி தன் நடத்தையா லாவது தன் செய்கையாலாவது தன் நிலைமையில் அரு வருப்பு கொண்டதாக ஒருநாள்கூடக் காட்டவில்லை; வீட்டு வேலைகளில் மனமுவந்து மாமியாருக்கு உதவி புரிந்து வந் தாள். புக்ககத்தாரின் தரித்திர நிலைமையை அறிந்து அவள் தந்தை தன் செலவிலேயே ஒரு வேலைக்காரியை அவளோடு அனுப்பி யிருந்தார். தன் மாமியார் வீட்டு ஏழைத்தனத் தைக் கண்டு பெரிய மனுஷாள் வீட்டு வேலைக்காரி ஒவ் வொரு நிமிஷமும் முகம் கோணல் செய்வாள் என்றச் சந் தேகம் உண்டாகவே விந்தியவாஸினிக்கு அவளை அங்கு வைத்திருக்கச் சகிக்கவில்லை; கணவன் வீட்டுக்கு வந்த வுடனே வேலைக்காரிக்குச் செலவு கொடுத்தனுப்பி விட்டாள்.

மாமியார் அன்பினால் விந்தியாவைக் கஷ்டமான வேலை கள் செய்ய வொட்டாமல் தடுக்க முயன்றாள். ஆனால் விந்தியா சோம்பலாவது சோர்வாவது அடையாமல் சிரித்த முகத்தோடு காரியங்களை எல்லாம் செய்து கொண்டு மாமி யாரின் இருதயத்தைக் கவர்ந்தாள். கிராமத்திலுள்ள ஸ்திரீ களும் அவளுடைய குணத்தைக் கண்டு பெருமகிழ்ச்சி கொண்டார்கள்.

இவ்வளவெல்லாம் செய்துவந்ததின் பயன் முற்றும் சந்தோஷ கரமானதாக இருக்கவில்லை. ஏனெனில் முதற்

பாட புஸ்தகங்களில் பண்டித பாஷையில் எழுதியுள்ள நீதி யுபதேசங்களைப் போலன்று உலக தர்மம். விளையாட்டு குணமுள்ள கொடிய பேய் ஒன்று குறுக்கே வந்து நீதி சூத்திரங்களை எல்லாம் திரித்துச் சடையாக முறுக்கிவிடுகிறது. ஆகையால் தான் நற்செய்கைகள் உடனுக்குடனே சுத்தமான நன்மைகளைப் பயப்பதில்லை. இருந்தாற்போலிருந்து நடுவில் ஒரு குழப்பம் உண்டாகி விடுகிறது.

அநாதபந்துவுக்கு இரண்டு சிறு தம்பிகளும் ஒரு அண்ணனும் இருந்தார்கள். அண்ணன் அயலூரில் உத்தியோகம் செய்து ஏதோ ஒரு ஐம்பது ரூபாய் சம்பாதித்து வந்தான். அத்தொகையைக் கொண்டுதான் தன் சம்சாரச் செலவுகளும் தம்பிகளுக்குப் படிப்பும் நடக்கவேண்டும்.

இந்நாட்களில் மாதம் ஐம்பது ரூபாயினுல் ஒரு சம்சாரத்தில் செல்வம் பெருகிவிடாது என்பது சொல்லாமலே விளங்கும். ஆனுல் அண்ணு மனைவி சியாமசங்கரி தற்பெருமையால் இறுமாப்படைவதற்கு அத்தொகை போதுமானதாயிருந்தது. வருஷம் முழுதும் கணவன் உழைத்துச் சம்பாதிப்பதனுல் அவன் மனைவியாகிய தனக்கு வருஷம் முற்றும் வேலை செய்யாமலிருக்க அதிகாரமுண்டு என்று அவள் எண்ணினுள். வீட்டுவேலை எதையுமே அவள் செய்யமாட்டாள். அதோடு அவள் நடந்துகொண்ட மாதிரியில், சம்பாதிக்கும் சக்தியுடையவனுக்கு தான் வாழ்க்கைப்பட்ட காரணத்தாலேயே அக்குடும்பத்தார் தனக்குக் கடமை பட்டிருக்கிருர்கள் என்று அவள் எண்ணினதாகக் காணப்பட்டது.

விந்தியவாஸினி மாமியார் வீட்டுக்கு வந்து கிருக லக்ஷ்மியைப்போலே இராப்பகல் வீட்டு வேலைகளைச் செய்து வந்தது சியாமசங்கரியின் குறுகிய மனதில் குறு குறுத்துக் கொண்டே இருந்தது. இதன் மூலகாரணத்தை அறிவது கஷ்டம். சிறிய மருமகள் பணக்கார வீட்டுப் பெண்ணுயிருந்தும் குடும்பத்திலுள்ள இழிவான வேலை களைச் செய்வது அண்டை அயலார் மெச்சும் பொருட்டோ அல்லது பெரிய மருமகளாகிய தன்னை அவர்கள் இகழட்டும் என்று தானே அப்படிச் செய்கிறுள் அவள், என்று சியாமசங்கரி எண்ணியிருக்கக்கூடும். எது எப்படியிருந் தாலும் சரி, ஐம்பது ரூபாய் சம்பளக்காரன் மனைவி பணக் கார வீட்டுப் பெண்ணுகிய தன் ஓரகத்தியைக் கூட வைத் துக்கொண்டு குடும்பம் நடத்த சகிக்க வில்லை. ஏனெனில் அவள் இவளுடைய வணக்கத்திலும் கூட சகிக்க முடியாத அகங்காரக் குறிகளிருப்பதாக எண்ணினுள்.

இதற்கிடையில் அந்தக் குக்கிராமத்துக்கு வந்ததும் அநாதபந்து ஒரு புஸ்தகாலயம் (லைப்பிரெரி) ஸ்தாபித்தான். ஒரு பத்து இருபது மாணவர்களைச் சேர்த்து ஒரு சபை ஏற்படுத்தி தான் அதற்கு அக்கிராசனதிபதியாக இருந்து பத்திரிகைகளுக்குத் தந்திகள் அனுப்பி வந்தான். ஏதேதோ இங்கிலீஷ் பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்து வந்து கிராமவாசிகள் தன்னைக்கண்டு வியப்புறும்படி செய்தான். ஆனால் தரித்திரதசையிலுள்ள அவனுடைய குடும்பத்திற்கு அதனுல் ஒரு காலணு கூடக் கிடைக்கவில்லை. இதற்கு பதிலாகப் பல வீண் செலவுகள் ஏற்பட்டன.

ஏதாவது ஒரு உத்தியோகம் செய்துகொள்ளும்படி விந்தியவாஸினி அவனை விடாது தொந்தரை செய்து வந்தாள். அதற்கு அவன் காது கொடுக்கவேயில்லை. மனைவியோடு, தனக்குத் தகுந்த உத்தியோகங்கள் சில இருக்கின்றன. ஆனால் பக்ஷபாதம் பார்க்கும் இங்கிலீஷ் அரசாங்கம் அவைகள் ஒவ்வொன்றிற்கும் இங்கிலீஷ்காரர்களையே கொண்டு வந்து விடுகிறது; வங்காளி ஒருவன் ஆயிரம் மடங்கு தகுதியுள்ளவனாக இருப்பினும் அவனுக்கு அவைகளில் ஆசை வைக்க இடமே தருவதில்லை, என்று அவன் சொல்வான்.

இகழ்ச்சி நிறைந்த விஷச் சொற்களை சியாமசங்கரி தன் மைத்துனனைப் பற்றியும் தன் ஓரகத்தியைப்பற்றியும் அவர்கள் எதிரிலும் பின்புறத்திலும் இடைவிடாது பிரயோகித்து வந்தாள். தங்கள் தரித்திர தசையைப்பற்றி வெகு கர்வத்தோடு பெருமை பாராட்டிக்கொண்டு, “நாங்களோ ஏழைகள்; பெரிய மனுஷாள் வீட்டுப் பெண்ணையும், பெரிய மனுஷாள் வீட்டுமாப்பிள்ளையையும் நாங்கள் எப்படி போஷணை செய்யமுடியும்? அவர்கள் வீட்டில் எல்லாம் சீராக நடக்கும், அங்கொரு கஷ்டமும் அவர்களுக்கு இராது — இங்கு வெறும் பருப்பும் சோறும் தின்று விட்டு அவர்கள் ஏன் இவ்வளவு கஷ்டப்படவேண்டும்?” என்பாள்.

மாமியாருக்குப் பெரிய மருமகளிடத்தில் பயம் அதிகம். ஆகையால் பலவீனர்களுக்காகப் பரிந்து பேச அவள் துணியவில்லை. சிறிய மருமகளோ, ஐம்பது ரூபாய் சம்பளத்தின் பருப்புஞ் சோற்றையும் அதற்குரிய ஓரகத்தியின்

காரமான கடுஞ்சொற்களையும் ஏற்றுக்கொண்டு ஓசைப்படா மல் ஜீரணம் செய்து கொண்டுவந்தாள்.

இதற்குள் அண்ணன் விடுமுறைக்காகச் சில நாள்க ளுக்கு வீடு வந்தபோது அவன் மனைவி அவனோடு கோப மூட்டக்கூடிய ஆத்திரமான பல பேச்சுகளைச் சொன்னாள். கடைசியாகத் தூக்கம் பிடிக்காதபடி அவள் தொந்தரை ஒவ்வொரு இரவும் மேலிட்டு வரவே அவன் அநாதபந்து வைக் கூப்பிட்டு, சாந்தமாக சிநேகிதன் போல, "நீ ஒரு உத்தியோகம் தேடிக்கொள்ளு. நான் ஒருவனாகவே எப்படி சம்சாரத்தை நடத்துவேன்?" என்றான்.

அநாதபந்து காலில் மிதிப்பட்ட பாம்பைப் போலே சீறிக்கொண்டு, "இரண்டு வேளை இரண்டு பிடி சாப்பிட முடியாத மட்டை அரிசிச் சோறு போடுவதற்காக இவ்வளவு கொடிய பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டு என்னால் சகித் திருக்கமுடியாது," என்று சொல்லிவிட்டு உடனே மனை வியை அழைத்துக்கொண்டு தன் மாமனார் வீட்டுக்குப் போவதாகச் சொன்னான்.

ஆனால் மனைவி அதற்குச் சிறிதும் சம்மதிக்கவில்லை. அண்ணன் சோற்றுக்கும் அண்ணியின் வசைச் சொற்களு க்கும், குடும்ப ரீதியில், தம்பிக்குச் சர்வ அதிகாரமுமுண்டு, ஆனால் மாமனார் வீட்டுக்குப்போவது வெகு அவமான கா மானது. விந்திய வாஸினி தன் மாமனார் வீட்டில் ஏழை யைப்போலே தலைகுனிந்து வசித்து வந்தாலும் தன் தந்தை வீட்டில் மரியாதையைக் காப்பாற்றிக்கொண்டு தலை தூக்கி நிற்கவேண்டுமென்று விரும்பினாள்.

இச்சமயத்தில் கிராமத்தில் 'என்ட்ரென்ஸ்' பள்ளிக் கூடத்தில் மூன்றாம் உபாத்தியாயரின் இடம் காலியாக இருந்தது. அநாதபந்துவின் தமையனார் விந்தியாவும் அந்த வேலைக்குப் போகும்படி அவனை வெகு தொந்தரை செய்தார்கள். அதிலும் கூட அவர்கள் சொன்ன விதப் பேச்சு அவனுக்கு விரோதமாகப் பட்டது. தன் சொந்த அண்ணனும் தன் உயிர்த்தம பத்னியும்கூட இப்படிப்பட்ட ஒரு அற்ப உத்தியோகத்தைத் தனக்குத் தகுதியானதென்று எண்ணிவிட்டார்களே என்று அடக்கவொண்ணாத வருத்தம் அவனுக்கு உண்டாயிற்று. சம்சார சம்பந்தமான விஷயங்களெல்லாம் அவனுக்கு முன்னே இருந்ததைப் பார்க்கிலும் சாது படமாக விரக்தி அதிகமாய் விட்டது.

அப்போது அண்ணன் அவனுடைய கையைப் பிடித்துக்கொண்டு தேற்றி பலவித நல்ல வார்த்தைகளால் அவனை சாந்தப்படுத்தினன். அவனுக்கு இனி என்ன சொல்லியும் காரியமில்லை, அவன் இப்பொழுது எப்படியாவது வீட்டில் இருந்தால் அதுவே க்ஷேமகரம் என்று எல்லாரும் நினைத்தார்கள்.

விடுமுறை முடிந்ததும் அண்ணன் உத்தியோக ஸ்தலத்திற்குப் போய்விட்டான். சியாமசுந்தரி தன் ஆக்ரோஷம் வீணாய்ப்போனதைக்கண்டு முகத்தை சுளித்துக் கோணலான சக்ராயுதம் போலச்செய்து முறுமுறுத்துக் கொண்டிருந்தாள். அநாதபந்து விந்திய வாஸினியிடம் வந்து, தற்காலத்தில் சீமைக்குப்போகாவிட்டால் உயர்ந்த உத்தியோகம் கிடைப்பதரிது, 'நான் சீமைக்குப்போக எண்ணியிருக்

கிறேன், நீ உன் தந்தையிடத்திலிருந்து ஏதாவது சாக்குச் சொல்லி கொஞ்சம் பணம் வாங்கு என்று சொன்னான்.

முதலில் சீமைக்குப் போகும் பேச்சைக் கேட்டதே விந்தியாவின் தலையில் இடி விழுந்தாற்போலாயிற்று; பிறகு தந்தையிடமிருந்து என்ன சொல்லிப் பிச்சை கேட்பது என்பது அவளுக்கு விளங்கவில்லை. அதை நினைக்கும்போதெல்லாம் அவள் லஜ்ஜைப்பட்டு சாவாள்.

மாமனாரிடத்தில் நேரில் பணம் கேட்கிறதற்குத் தான் அநாதபந்துவின் அகங்காரம் குறுக்கிட்டதே யொழிய தந்தையிடமிருந்து பெண் ஒருத்தி நயத்திலோ பயத்திலோ பணம் ஏன் வாங்கக்கூடாது என்பது அவனுக்கு விளங்க வில்லை. இது காரணமாக அநாதன் பலவிதமாய் தன் கோபத்தைக்காட்டி ஏற்கனவே நொந்திருக்கும் விந்திய வாஸினியைக் கண்ணீர் சொரியும்படிச் செய்து வந்தான்.

இப்படி குடும்பத்தில் கஷ்டப் பட்டுக்கொண்டும் மனம் நொந்துகொண்டும் சில நாட்கள் கழிந்தன.

கடைசியாகச் சரத் காலத்தில் நவராத்திரி பண்டிகை நெருங்கிவிட்டது. பெண்ணையும் மருமகனையும் வெகு மரியாதையோடு அழைத்துவர ராஜ குமார பாபு வெகு ஆடம்பரத்தோடு பல்லக்குகளையும் குதிரைகளையும் அனுப்பினார். ஒரு வருஷத்திற்குப் பிறகு பெண் தன் புருஷனோடு வீட்டுக்கு வந்திருக்கிறாளே என்று முன்பு அநாதபந்து பொறாமைப் படும்படி பணக்கார பந்துவுக்குக் காட்டிய ஆதரவை விட பலமடங்கு அதிக ஆதரவோடு மாப்பிள்ளையை வீட்டில் நடத்தினார்கள். விந்தியவாஸினியோ வெகு காலத்திற்குப்

பிறகு தாய்வீட்டு ஆன்ன சுதந்தரத்தால் முக்காடிடாமல் தன் சுற்றத்தாரோடும் சகிகளோடும் கூடி பாடிக்கொண்டு உற்சவக் கொண்டாட்டத்தில் இராப்பகல் மூழ்கி யிருந்தாள்.

இன்றைக்கு ஷஷ்டி, நாளைக்கு ஸப்தமி, அன்று பூஜை ஆரம்பிக்கும். வீட்டின் சம்பிரமத்திற்கும் கோலாகலத்திற்கும் எல்லையே இல்லை. தாரபந்துக்களும் நெருங்கிய பந்துக்களும் ஞாதிகளும் பரிஜனங்களும் மாடியில் ஒவ்வொரு அறையிலும் நிறைந்திருந்தார்கள்.

அன்றிரவு விந்திய வாஸினி மிகவும் அயர்ந்துபோயிருந்தபடியால் மெய்ம்மறந்து தூங்கிவிட்டாள். முன் தடவையில் அவளுக்குக் கொடுத்திருந்த படுக்கையறை இதன்று; இம்முறை விசேஷ ஆதரவு காட்டுவதற்காக மாமியார் மருமகளுக்குத் தன் அறையையே விட்டுக் கொடுத்திருந்தாள். அநாதபந்து எப்பொழுது படுக்க வந்தான் என்பதுகூட விந்தியாவுக்குத் தெரியாது. அவள் அவ்வளவு ஆழ்ந்த நித்திரையிலிருந்தாள்.

நன்றாகப்பொழுது விடிந்ததும் வாத்தியங்கள் ஒலிக்கலாயின. ஆனால் அயர்ந்திருந்த விந்தியவாஸினி துயில் நீங்கவில்லை. தோழிகளாகிய கமலாவும் புஷ்பாவும் விந்தியாவின் படுக்கை அறைவாயிலண்டை வெகுநேரமாய் காத்திருந்தும் பயன் படாமற்போய்விடவே வெளியிலிருந்துகொண்டே உச்ச சுரத்தில் பரிகாசம் செய்து சிரித்துக் கொண்டிருந்தார்கள்; அப்பொழுது விந்தியா தடபுடலாய் எழுந்திருந்து பார்த்தாள்; அவள் கணவன் எப்பொழுது எழுந்து சென்றானே அதுகூட அவளுக்குத் தெரியாது. வெட்கத்தோடு

படுக்கையை விட்டு எழுந்து குனிந்து பார்த்தாள்; தாயின் இரும்புப் பெட்டி திறந்திருந்தது, அதற்குள் இருந்த தன் தந்தையின் பணப்பெட்டியைக் காணோம்.

முதல் நாள் சாயங்காலம் தாயின் கொத்துசாவி கெட்டுப்போயிற்றென்று வீடெல்லாம் குழப்பமாயிருந்தது அப்போது அவளுக்கு ஞாபகம் வந்தது. அந்த கொத்து சாவியைத் திருடிக்கொண்டு, எவனோ ஒரு திருடன்தான் இக்காரியம் செய்திருக்கிறான் என்பதில் சிறிதும் சந்தேக மில்லை. அப்போது மனதில் திடீரென்று ஒரு சந்தேகம் பிறந்தது; அதே திருடன் ஒரு வேளை தன் கணவனையும் அடித்துக் காயப்படுத்தி யிருப்பானோ என்று தோன்றிற்று; மார்பு படபட வென்று அடித்தது; உடலெல்லாம் நடுங் கிற்று; படுக்கைக்கு அடியில் தேடினபோது கட்டிக் காலுக்கருகில் தன் தாயின் கொத்துசாவிக்குக் கீழ் ஒரு கடிதம் மடித்து வைக்கப்பட்டிருந்ததை அவள் கண்டாள்.

கடிதம் அவளுடைய கணவன் கையெழுத்திலிருந்தது. திறந்து படித்துப் பார்த்தாள். யாரோ ஒரு பந்துவின் சகாயத்தால் அவள் கணவன் சீமைக்குப் போகக் கப்பற் செலவு பெற்றதாகவும், அங்கு தற்பொழுது செலவுக்கு எந்த வழியில் தேடியும் ஒன்றும் கிடைக்காததினால் மாம னார் பணத்தை அபகரித்துக் கொண்டு தாழ்வாரத்தைக் கடந்து ஏணி மூலமாய் உள் தோட்டத்தில் இறங்கி சுவரைத் தாண்டி அவன் ஓடிவிட்டதாகவும் அவளுக்குத் தெரிய வந் தது. இன்று விடியற்காலத்திலேயே கப்பல் புறப்பட்டு விட்டது.

கடிதத்தை படித்ததும் விந்தியவாஸினியின் ரத்தம் பனிக்கட்டிபோல உறைந்துவிட்டது. கட்டில் காலைப் பிடித்துக்கொண்டு அவள் அப்படியே உட்கார்ந்துவிட்டாள். நிச்சப்தமான நள்ளிருளில் கேட்கும் சில் வண்டுகளின் ஒலியைப் போன்றதொரு சத்தம் அவள் தேகத்துக்குள்ளிருந்து கிளம்பி அவள் காதைத் தொளைத்து வந்தது. இதோ கூட முன் கட்டிலிருந்தும் அண்டை வீடுகளிலிருந்தும் தொலைவிலிருந்த மாளிகைகளிலிருந்தும் பலவித நாதசுரங்கள் பல்வேறு ராகங்களை வாசித்தன. வங்கதேசம் முழுதும் அச்சமயத்தில் ஆனந்தத்தால் மதிமயங்கி இருந்தது.

சரத்கால உதயக் களிப்பினால் ரஞ்ஜிக்கப்பெற்ற சூரிய கிரணம் வேடிக்கையாக இப்படுக்கையறைக்குள் நுழைந்தது. இவ்வளவு நாழிகை ஆகியும் கூட உற்சவ தினத்தன்று கதவை மூடியிருந்ததைக் கண்ட புவனாவும் கமலாவும் கேலியாகச் சிரித்துக்கொண்டு தும் தும் என்று கதவைக் கையினால் தட்டினார்கள். அப்பொழுது கூட ஒரு பதிலும் கிடைக்காமற் போகவே சற்று பயந்து "விந்தீ," "விந்தீ," என்று உரக்கக் கூப்பிட்டார்கள்.

விந்தியவாஸினி உடைந்த குரலில், "நான் வருகிறேன் நீங்கள் இப்பொழுது போங்கள்!" என்றாள்.

அவர்கள் தங்கள் தோழிக்கு உடம்பு அசௌக்கியமோ என்னவோ என்று சந்தேகப்பட்டு அம்மாவை அழைத்து வந்தார்கள். அம்மா வந்து "விந்து, உனக்கு என்ன அம்மா உடம்பு, இப்போது கதவை ஏன் சாத்திக்கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டாள்.

விந்தியா பொங்கி வரும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "அப்பாவைக் கொஞ்சம் கையோடு அழைத்து வா," என்றாள்.

தாய் மிகவும் பயந்துபோய் உடனே ராஜகுமார பாபுவை அழைத்துக் கொண்டு கதவண்டை வந்து சேர்ந்தாள். விந்தியா கதவைத்திறந்து அவர்களை உள்ளே அழைத்துக் கொண்டு மறுபடி படரென்று சாத்தித் தாளிட்டு விட்டாள்.

பிறகு விந்தியா தரையில் புறண்டு தந்தையின் காலைப் பிடித்துக்கொண்டாள். பலமுறை மார்பிலடித்துக் கொண்டு அழுதுகொண்டே, "அப்பா, என்னை மன்னிக்க வேண்டும், நான் உம்முடைய பெட்டியிலிருந்த பணத்தைத் திருடிவிட்டேன்," என்றாள்.

அவர்கள் ஒன்றும் சொல்ல இயலாமல் படுக்கையின் மேல் அப்படியே உட்கார்ந்து விட்டார்கள். இப்படிச் செய்தது தன் கணவன் சீமைக்குப் போய் படித்துவருவதற்காகத் தான் என்று விந்தியா சொன்னாள்.

"எங்களிடத்தில் அதை ஏன் சொல்லவில்லை?" என்று அவள் தந்தை கேட்டார்.

விந்தியவாஸினி, "சீமைக்குப் போவதில் ஒரு வேளை உமக்கு இஷ்டமில்லாமலிருக்குமோ என்று தான்," என்றாள்.

ராஜ குமார பாபுவுக்கு வெகு கோபம் வந்துவிட்டது. தாய் அழத் தொடங்கினாள், மகளும் அழுதாள். இந்த அழுகைச் சத்தத்தோடு கல்கத்தாவின் நாற்புறங்களிலு

யிருந்தவரும் ஆனந்தமயமான வாழ்த்திய கோஷங்கள் கலந்தன.

தன் தமையனிடத்திலும் கூடப் பணம் யாசிக்க ஒரு போதும் ஒப்புக்கொள்ளாத இந்த விந்தியா, தன் கணவன் மானத்தைப் பிராணனைக்கொடுத்தும் கூடத் தன் நெருங்கிய உறவினர்களிடத்திலிருந்து காக்க முயன்ற இம்மனைவி, இன்று உற்சவத்தில் வந்து கூடிய கும்பலின் கண்முன் தன் பத்தினியபிமானத்தையும், பெரிய வீட்டுப்பெண் என்னும் கௌரவத்தையும், தனக்குள்ள மரியாதையையும் பொடியாக்கிவிட்டு, பிரியமுள்ளவர்கள், பிரியமில்லாதவர்கள், தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் ஆகிய எல்லாருடைய கண்களிலும் விழுந்து கஸ்தூரியைப் போலப் புரளவேண் டியதாயிற்று. முன்னதாகவே ஆலோசித்து, சூழ்ச்சி செய்து, சாவியைத் திருடி, மனைவியின் சகாயத்தால் ராத்திரியிலேயே அநாதபந்து சிறைக்கு ஓடி விட்டான் என்ற பேச்சு சகல பந்துக்களும் நிறைந்த வீட்டில் பரவி விடவே எங்கு பார்த்தாலும், அட! அட! என்ற முழக்கம் கேட் டது. தாவண்டை சின்னதொண்டி புவனு, கமலா, பல சுற்றத்தார்கள், அண்டை வீட்டுக்காரர்கள், வேலைக்காரர் கள், வேலைக்காரிகள் ஆகிய எல்லோரும் கேட்டுக்கொண் டிருந்தார்கள். கதவடைத்திருந்த மருமகளறைக்குள் வீட்டு எஜமானனும் எஜமானியும் அழுதுகொண்டே நுழைவதைக் கண்டு யாவரும் பயந்து, இன்னதென்று அறிய விரும்பி, அங்கு வந்திருந்தார்கள்.

விந்தியவாஸினி யாருடைய முகத்தையும் பார்க்கவே யில்லை. கதவை சாத்திக்கொண்டு சாப்பிடாமல் படுக்கை

யில் படுத்துக்கொண்டிருந்தாள். இந்தச் சோக தசையில் அவள் என்ன பாடுகிறாள் படவில்லை. இந்தச் சதியா லோசனைக் காரியின் துஷ்ட புத்தியைக்கண்டு இப்படியும் உண்டோ! என்று சொல்லாதவர் பாவர். விந்தியாவின் யோக்கியதை இவ்வளவு காலம் தெரியாமலிருந்ததற்குக் காரணம் சந்தருப்பம் நேரிடாததுதானே ஒழிய வேறொன்று மில்லை என்று பலர் எண்ணினார்கள். அனேகமாக இவ்வீட்டில் நவராத்திரி பண்டிகை ஏதோ ஒருவாறு முடிவு பெற்றது.

ந

அவமானத்தாலும் துயரத்தாலும் தலை குனிந்தவளாய் விந்தியா புக்ககத்துக்குத் திரும்பி வந்தாள். அங்கு மகனைப் பிரிந்து வருந்தும் விதவையான மாமியாருக்கும் கணவனைப் பிரிந்து துன்புறும் மருமகளுக்கும் கூட்டுறவு வெகு பலப் பட்டு வந்தது. இருவரும் ஒருவருக்கொருவர் பக்கத்தில் இருந்துகொண்டு வாய்திறவாமல் இத் துயரத்தில் வெகு பொறுமையுடன் வீட்டிலுள்ள சின்னஞ்சிறு வேலைகளையும் தம் கைகளினாலேயே செய்து முடிப்பார்கள். அவளுக்கு மாமியார் எவ்வளவு கிட்டக்கிட்ட நெருங்கினாளோ அவ் வளவு தூரதூரப் போனார்கள் அவள் தாய் தந்தையர்கள். விந்தியா தன் மனதிற்குள், மாமியாரும் ஏழை, நானும் ஏழை, இருவரும் ஒரே துக்கத்தில் கட்டுண்டு கிடக்கிறோம் என்தாய் தந்தையர்களோ செல்வவான்கள், எங்கள் நிலைமைக்கும் அவர்கள் நிலைமைக்கும் வெகுதூரம் என்று எண்ணிக்கொண்டாள். எளிமை என்னும் ஒரு காரணத்

தாலேயே விந்தியா அவர்களுக்கு வெகு தூரத்திலிருக்க வேண்டியவள், அதோடு திருடினதாக வேறு ஒப்புக்கொண் டிருக்கிற படியால் அவள் இன்றும் எவ்வளவோ தாழ்ந்த நிலைமையில் விழுந்துவிட்டாள். இவ்வளவு பெரிய வித்யா சத்தின் சுமையை அன்பினால் ஏற்படும் கட்டு தனியாகத் தாங்கி நிற்குமா இல்லையா என்பது யாருக்குத் தெரியும்?

அநாதபந்து சீமைக்குப் போய் முதல் முதலில் மனைவிக்கு கிரமமாகக் கடிதம் எழுதி வந்தான். ஆனால் படிப்படியாக கடிதங்கள் வருவது அரிதாய்விட்டன, அப் படி வருகிற ஓரிரண்டு கடிதங்களில்கூட அவமதிப்பும் அலக்ஷியமும் காணப்பட்டது. படிப்பற்று வீட்டே கதியாய்க் கிடக்கும் அவன் மனைவியை விட வித்தை, புத்தி, ரூப, குணங்களில் மேம்பட்ட பல இங்கிலீஷ் கன்னிகைகள் அநாதபந்துவைத் தகுதி யுடையவனென்றும் யோக்யதை யும் அழகும் கூடவாய்ந்தவனென்றும் கொண்டாடி வந்தார் கள். இந்நிலைமையில் ஒற்றைத்துணியுடுத்து முக்காடிட்டு வெண்மை நிறமற்ற தன் மனையாளைத் தனக்குச் சமயோக் யதை யுடையவளாக அவன் கருதவில்லை என்பதில் ஆச்சரி யம் என்ன?

இப்படிக்கெல்லாம் இருந்தாலுங்கூட, பணக் கஷ்டம் ஏற்பட்டபோது ஆதரவற்ற இதே வங்காளிப் பெண்ணுக் குத் தந்தி யனுப்புவதில் அவனுக்கு எவ்வித சங்கோசமும் உண்டாகவில்லை. இதே வங்காளிப் பெண்ணும் இரு கைகளிலும் இரண்டு கண்ணாடி வளையல்களை மாத்திரம் வைத்துக்கொண்டு தேகத்திலணிந்திருந்த சமஸ்த ஆபரணங்

கலையும் விற்றுப் பணமனுப்பினாள். பட்டிக்காட்டுக் கிராமத்தில் பயமின்றி வைத்திருக்க இடமில்லை என்று அவளுடைய விலை யுயர்ந்த நகைகள் யாவும் தந்தை வீட்டிலேயே இருந்தன. கணவனுடைய பந்துக்கள் வீட்டில் தன்னை அழைத்திருப்பதாக சாக்குச் சொல்லிப் பலவித உபாயங்களால் விந்தியவாஸினி ஒவ்வொன்றாகத் தன் நகைகளை எல்லாம் வரவழைத்துக்கொண்டாள். கடைசியாக, கைவளை, வெள்ளிக்காப்பு, காசி துப்பட்டா முதலியவைகளையும் தன் சால்வையையுங் கூட விற்றுவிட்டு வெகு விநயத்தோடு தன் தலைமேல் ஆணையிட்டு, கண்ணீரால் கடிதத்தின் ஒவ்வொரு வரியையும் நனைத்து, விந்தியா தன் கணவனைத் திரும்பி வரும்படி பிரார்த்தித்து எழுதினாள்.

அவள் புருஷன் தலைமயிரைக் கத்திரித்துக்கொண்டு முக க்ஷவரம் செய்துகொண்டு சொக்காயும் நிஜாரும் உடுத்து பாரிஸ்டராகத் திரும்பி வந்து ஒரு 'ஓட்டலில்' இறங்கினான். சொந்த வீட்டில் போய் வாசம்செய்வது முடியாத காரியம். முதல் முதலில் அது தகுந்த இடமன்று; இரண்டாவது குக்கிராமத்தில் வசிக்கும் ஒரு ஏழைக் குடித்தனக்காரன் ஜாதி யிழந்துவிட்டால் அவன் கதியற்றுப்போய் விடுவான். மாமனார் வீட்டார் ஆசார சீலர்கள், பரம ஹிந்துக்கள், ஜாதி கெட்டவனுக்கு அவர்கள் இடம் கொடுக்க மாட்டார்கள்.

பணக்குறைவினால் வெகு சீக்கிரத்திலேயே ஓட்டலிலிருந்து ஒரு தனியிடத்தில் அவன் இறங்கவேண்டிய தாயிற்று. சீமையிலிருந்து வந்ததும் மனைவியையும் தாயை

யும் ஒன்றிரண்டு நாள் பகல் வேளையில் போய்ப் பார்த்து வந்தான், பிறகு அவர்களைக் காணவேயில்லை.

சோகத்தால் பிடிக்கப்பட்ட இருபாதர்களுக்கும் ஒரே ஒரு ஆறுதல் தான் இருந்தது. அநாதபந்து சுவதேசத்தில் பந்துக்களுக்குள் முன்னிடத்தில் இருக்கிறானே என்பது தான். படிப்படியாக அநாதபந்துவின் அசாதாரண பாரிஸ்டர் பட்டத்தின் கீர்த்தியில் அவர்கள் கொண்ட பெருமைக்கு அளவே இல்லை. வித்யை வாய்ந்தவன் தன் கீர்த்தி சாலியான கணவனுக்குத் தான் தகுந்த மனைவியல்லவென்று தன்னையே இகழ்ந்து கொள்வாள்; இப்படித் தன்னைத் தகுதியற்றவளென்று எண்ணிக் கொண்டதனால் தன் கணவனிடத்தில் தான் வைத்திருந்த மதிப்பு அதிகரித்தது.

அவள் துக்கத்தினால் கலக்கப்பட்டும் கர்வத்தினால் பூரித்துமிருப்பாள். மிலேச்ச ஆசாரங்களை அவள் வெறுப்பாள், இருந்தாலும் தன் கணவனைக் குறித்து தனக்குள்ளாகவே நினைத்துக்கொள்வாள்: ‘இக்காலத்தில் எவ்வளவோ பேர் துரைகளாகி விடுகிறார்கள், ஆனால் அது யாருக்கும் இவ்வளவு நன்றாக இல்லை—முற்றும் இவன் ஸ்வச்சமான சீமை துரை! வங்காளி என்று சொல்லவே முடியாது!"

வீட்டுச் செலவுக்குப் பணம் தட்டுப்படவே அநாதபந்து அருவருப்போடு, இப்பாழும் பாரத தேசத்தில் யோக்யதையைக் கேட்பார் கிடையாது. நம்மோடு கூடத் தொழில் செய்து வருபவர்களே பொறாமையால் நம்மை மேலே விடாமல் தடுத்து வருகிறார்கள், என்று எண்ணலானான்.

அவன் உணவுப் பொருள்களில் இறைச்சி குறைந்து கொண்டும் காய்கறிகள் அதிகரித்துக் கொண்டும் வந்தன. பொரித்த சாவலின் கௌரவ ஸ்தானத்தில் வறுத்த ஏரால் மீன் தான் பரிமாறப்பட்டது; ஆடையாபரணங்களின் பளபளப்பும் க்ஷவரம் செய்யப்பட்ட முகத்தின் வழுவழுப்பும் குறைந்துகொண்டே வந்தன. இப்படி அவன் வாழ்க்கையாகிய வீணையின் தந்திகள் படிப்படியாக உச்ச ஸ்தாயியிலிருந்து மத்தியமத்திற்கு இறங்கிக் கொண்டிருக்கையில் ராஜ குமார பாபுவின் குடும்பத்தில் நேர்ந்த பெரியதோர் கொடிய சம்பவம் அநாதபந்துவின் கஷ்ட ஜீவனத்தை அடியோடு மாற்றிவிட்டது. ராஜகுமார பாபுவின் ஒரே மகனான ஹரகுமாரபாபு தன் மனைவியோடும் தன் புத்திரனோடும் கங்கைக் கரையோரமாக விருந்த தன் மாமன் வீட்டுக்குப் போய் திரும்பும் போது படகு புகைக்கப்பலோடு மோதினதால் அவனும் அவன் மனைவியும் அவன் சிறுவனும் நதியில் மூழ்கி இறந்தார்கள். இச் சம்பவத்தால் ராஜகுமார பாபுவின் வம்சத்தில் மகளாகிய விந்தியவாஸினியைத் தவிர வேறு யாருமில்லாது போய்விட்டார்கள்.

இக்கொடிய துக்கத்திலிருந்து ஒருவாறு ஆறுதலடைந்ததும் ராஜகுமார பாபு அநாதபந்துவினிடம் போய், "அப்பா, உனக்குப் பிராயச் சித்தம் செய்து ஜாதியில் சேர்த்து விடுகிறேன். உன்னைத் தவிர்த்து எனக்கு யாருமில்லை," என்று வெகு நயமாகச் சொன்னார்.

அநாதபந்து உற்சாகத்துடனே இப்பேச்சுக்கு இணங்கினான். 'பார்—லைப்பிரேரி' யிலுள்ள சுதேச பாரிஸ்டர்

கள் தன்னிடத்தில் பொறுமைகொண்டு தன்னுடைய அசா
தாரண புத்தி கூர்மையைத் தக்கபடி மதிக்காததற்காகப்
பழிவாங்க இது நல்ல உபாயமாக இருக்கும் என்று எண்
ணினன்.

ராஜகுமார பாபு இவ்விஷயத்தில் சாஸ்திரங்களின்
விதி எப்படி என்று பண்டிதர்களைக் கேட்டார். அநாதபந்து
கோமாம்ஸம் (மாட்டு இறைச்சி) சாப்பிடாமல் இருந்திருந்
தால் தான் அவனை ஜாதியில் திரும்பவும் சேர்த்துக்கொள்ள
வழி யுண்டு என்று அவர்கள் சொன்னார்கள்.

வெளி நாட்டில் மேற் கூறிய நாற்கால் ஜந்துவின்
இறைச்சி தன்னுடையப் பிரியமான உணவுகளில் ஒன்றாக
இருந்தாலும் அதை "இல்லை" என்று ஒரு வாய்பேச்சால்
மறுப்பதில் எவ்வித கெடுதியும் இருப்பதாக அநாதன்
நினைக்கவில்லை. தனக்கு வேண்டியவர்களிடத்தில் அவன்
சொன்னதாவது: "ஒரு கூட்டத்தார் வேண்டுமென்றே
பொய் கதையைக் கேட்க ஏற்றுக்கொள்ளும்போது வாய்
பேச்சால் அவர்களைத் திருப்தி செய்வதில் கெடுதி ஒன்றும்
நான் காண்பதில்லை. கோமாம்ஸம் தின்ற நாக்கை கோம
யம், பொய் பேச்சு என்று சொல்லப்படும் இரண்டு இழி
வான பொருள்களைக் கொண்டு சுத்தப்படுத்தி விடலாம்
என்பது தற்காலத்தில் நம்முடையசமூகத்தாரின் கோட்
பாடு. இக்கோட்பாட்டுக்கு மீறி நடக்க எனக்கு
இஷ்டமில்லை."

பிராயச் சித்தம் செய்து ஜாதியில் சேர்க்க ஒரு சுப
தினம் குறித்தார்கள். இதற்கிடையில் அநாதபந்து

வேஷ்டி உத்திரியம் தரித்தது மாத்திரமன்றி பல காரணங்களாலும் நற்போதனைகளாலும் மேல் நாட்டு ஜனங்களின் வழக்க ஒழுக்கங்களை இகழ்ந்தும் ஹிந்துக்களின் வழக்க ஒழுக்கங்களைப் புகழ்ந்தும் பேசி வந்தான். அதைக்கேட்டு எல்லோரும் வெகு சந்தோஷப் பட்டார்கள்.

பிரீதி என்னும் கள் நிறைந்த விந்தியவாஸினியின் இளம் நெஞ்சம் ஆனந்தத்தாலும், கர்வத்தாலும் பூரித்தது. அவள் எண்ணிக்கொண்டாள்: சீமையிலிருந்து எவ்வளவோ பேர் வருகிறார்களே, அவர்கள் ஒரே அடியாய் சீமை துரைகளாய் விடுகிறார்கள், பார்த்தால் வங்காளி என்று கூட அறிய முடிவதில்லை; ஆனால் என் கணவன் சிறிதும் மாற்றமின்றியே திரும்பி வந்துவிட்டான்; மேலும் அவனுக்கு ஹிந்து தர்மத்தில் பக்தி முன்னரை விடப் பல மடங்கு அதிகமாய் விட்டது.

குறித்த தினத்தில் பிராமணப் பண்டிதர்கள் ராஜகுமார பாபுவின் வீட்டில் வந்து நிறைந்தார்கள். பணச் செலவிற்குக் குறைவே இல்லை. ஆகாரங்கள் தானங்கள் இவைகளுக்குத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஸ்திரீகளுக்குள்ளும் கொண்டாட்டத்திற்கு அளவேயில்லை. அழைக்கப்பட்டிருந்த சுற்றத்தார்களுக்குத் தங்குவதற்கும் உபசரணைக்காகவும் வீட்டில் ஒவ்வொரு அறையிலும் முற்றத்திலும் வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இப்பெரும் கோலாகலத்தில் ஓடி யாடிக் கொண்டிருந்த விந்திய வாஸினி தன் மலர்ந்த முகத்தோடு

சரத்கால சூரிய கிரணங்களால் இலேசாய் பூசப்பெற்ற மேகக்கூறு ஒன்று காற்றில் மிதந்து செல்வதைப் போல மிதந்து சென்ருள். இன்று நடக்கும் சடங்குகளி லெல்லாம் அவள் கணவனல்லவா முக்கிய புருஷன்! இவன் பொருட்டு அந்தரிக்ஷமே ஒரு நாடக மேடையைப்போல ஆகிவிடவில்லையா! இந் நாடகத்தில் திரை தூக்கினதும் காண்போர் கவனத்தை யெல்லாம் தன்னந்தனியாய் அநேக பந்துக்களே கவர்வான்! என்று அவள் மனம் பூரித்தாள். இப் பிராயச்சித்தமானது செய்த அபராதத்தை மனங் கசிந்து ஒப்புக்கொள்ளும் சடங்காகக் காணப்படவில்லை. ஏதோ தயவினுக்காக அவள் கணவன் அதைச் செய்து கொள்ள ஒப்புக்கொண்டான் போலிருந்தது. அநாதன் நிலையிலிருந்து வந்து ஹிந்துக்களின் சமூகத்தில் சேர்வ தனுல் அவர்களிடையே கௌரவப் பதித்தும் பெருமை வாய்ந்த வனாகக் காணப்பட்டான். அப்பெருமையின் ஒளி நாலா பக்கத்திலிருக்கும் பல வேறு கிரணங்களோடு பரவி பிரேமையினுல் கனிந்திருந்த விந்திய வாஸினியின் முகத்தின்மேல் அருமையானதொரு மகிமையின் காந்தியை வீசிற்று. வறுமையினுல் இதுவரையில் அநுபவித்த சகல துக்கங்களையும் அவமானத்தையும் தூரத் தள்ளிவிட்டு இன்று பந்துக்களெல்லாம் ஒன்று கூடியிருக்கும் தந்தை வீட்டில் அவர்களுடைய கண் முன்பு தலை தூக்கிக்கொண்டு கௌரவமான உயர்ந்த ஸ்தானத்தில் அவள் வீற்றிருந்தாள். கணவன் தன் மகத்துவத்தால் மனைவியின் தகுதியின்மை யைப் போக்கி உலகத்தார் காண அவளைச் சன்மானித்து விட்டான்.

சடங்குகள் பூர்த்தியாக நடைபெற்றன. அநாத பந்துவும் ஜாதியில் சேர்ந்துவிட்டான். வந்திருக்கும் பந்துக்களும் பிராமணர்களும் அவனோடு கூட ஒரே இடத்தில் உட்கார்ந்துகொண்டு வேண்டிய மட்டும் போஜனம் செய்தார்கள்.

சொந்தக்காரர்களான ஸ்திரிகள் மருமகனைப் பார்க்க வேண்டுமென்று அந்தப்புரத்திற்கு அவனை அழைத்தார்கள். மருமகன் நிம்மதையாய்த் தாம்பூலம் மென்று கொண்டு, வேடிக்கையாய் சிரித்த முகத்துடன், அசைந்து மெதுவாக நடந்துகொண்டு தரையிலிடிக்கும்படி நீண்ட உத்தரியத்தோடு அந்தப்புரத்தில் பிரவேசித்தான்.

சாப்பிட்ட பிறகு பிராமணர்களுக்குத் தக்ஷிணை கொடுக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள். இச்சமயத்தில் அவர்கள் சபா மண்டபத்தில் உட்கார்ந்துகொண்டு இரைச்சலிட்டுச் சச்சரவு செய்து தத்தம் பாண்டித்தியத்தை விளக்கிக் கொண்டிருந்தார்கள். எஜமானனை ராஜகுமார பாபு ஒரு நிமிஷம் இளைப்பாறலாம் என்று கோலாகலம் நிறைந்த அப்பண்டித சபையில் உட்கார்ந்துகொண்டு ஸ்மிருதிகளைப்பற்றிய தருக்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தார். அப்போது ஒரு வேலையாள் எஜமானன் கையில் பெயர் அச்சிட்டிருந்த ஒரு சீட்டைக்கொடுத்து "ஒரு துரைசானியம்மா வந்திருக்கிறாள்" என்று தெரிவித்தான்.

ராஜகுமார பாபுவுக்கு எடுத்துப்போட்டது. மறு நிமிஷத்திலேயே சீட்டை உற்று நோக்கினார். அதில்

"மிஸெஸ் அநாதபந்து ஸர்க்கார்," என்று இங்கிலீஷில் எழுதியிருந்தது—அநாதபந்து ஸர்க்காரின் மனைவி என்பது அதன் பொருள்.

ராஜகுமார பாபு அநேகமுறை பார்த்தும் இந்தச் சாமான்ய பதத்திற்குப் பொருள் கண்டு கொள்ள வில்லை. இச்சமயத்தில் சீமையிலிருந்து அப்போது தான் வந்த ஒரு இங்கிலீஷ் மாது சிவந்த கன்னங்களும், செம்பட்டைக் கூந்தலும், நீலக்கண்களும், பால் நுரைபோன்ற வெண்மையும், மான்போன்ற மென்னடையு முடையவளாய், தானே நேரில் சபையில் வந்து நின்று ஒவ்வொருவர் முகத்தையும் பார்க்கத் தொடங்கினள். ஆனால் தனக்குப் பழக்கமான முகத்தை அவள் அங்கு காணவில்லை. திடீரென்று ஒரு துரைசானியைக் காணவே தருக்கமெல்லாம் அடங்கிப் போய் விட்டது. ஸ்மசானத்தின் உள்ளதைப் போன்றதொரு ஆழ்ந்த நிசப்தம் சபா மண்டபத்தைக் கவர்ந்தது.

அத்தருணத்தில் தரையில் புரண்டு வருகிற உத்தரீயத்தைப் பொறுக்கிக்கொண்டு அசைந்து மெதுவாக நடந்து வரும் அநாதபந்து கொலு மண்டபத்தில் மறுபடி நுழைந்தான். ஒரு நிமிஷத்திற் குள்ளேயே அந்த இங்கிலீஷ் மாது வேகமாய்ப் போய் அவனைக் கட்டிக்கொண்டு தாம்பூலத்தால் சிவந்த அவன் உதடுகளை முத்தமிட்டாள்.

அன்று பிராயச் சித்தத்தைப் பற்றியுள்ள சாஸ்திரக் கோட்பாடுகளைக் குறித்துத் தருக்கம் மறுபடி அச்சபா மண்டபத்தில் நடைபெறவேயில்லை.

வரதக்ஷிணை.

ஐந்து ஆண் குழந்தைகளுக்குப் பிறகு ஒரு பெண் பிறக்கவே தாய் தந்தையர்கள் வெகு அருமையாய்ச் சீராட்டி அவளுக்கு நிருபமா (இணையற்றவள்) என்று பேர் வைத்தார்கள். இவ் வம்சத்தில் இவ்வளவு நயமான பெயரை இதற்குமுன் எப்போதும் வைத்ததே யில்லை, அநேகமாய் தெய்வங்களின் பெயர்தான் வழங்கி வந்தது— கணேசன், சுப்பிரமணியன், பார்வதி முதலியன அதற்கு உதாரணங்களாகும்.

நிருபமாவின் விவாகத்தைப்பற்றி இப்பொழுது பேச்சு நடந்துகொண்டிருந்தது. அவள் தந்தை ராமசுந்தரர் என்ன அலைந்து தேடியும் மனதிற்குப் பிடித்த வரன் ஒன்றும் கிடைக்கவில்லை. கடைசியாக ஒரு கொழுத்த ராய் பகதூர் பட்டதாரியின் ஒரே மகனைத் தேடிக் கண்டுபிடித்தார். மேற் கூறிய ராய் பகதூருடைய தகப்பனால் சிற்றின்ப விஷயங்களில் அதிகமாய்ப் பணநஷ்டம் ஏற்பட்டிருந்தும் குடும்பத்தின் பெயர் பெரியதாகவே இருந்தது.

மாப்பிள்ளை வீட்டார் பதினாயிரம் ரூபாய் வரதக்ஷிணையும் மற்றும் பல உயர்ந்த சீர் வரிசைகளும் தரவேண்டும் என்று கேட்டார்கள். ராமசுந்தரர் சிறிதும் ஆலோசிக்காமல் அதற்கெல்லாம் ஒப்புக்கொண்டுவிட்டு வந்தார்; இப்படிப்பட்ட வரனை அவர் எப்படி விட்டு விடுவார், பாவம்?

சிறிது கூடப் பணம் சாயவில்லை. அடகு வைத்தும் விற்றும் இன்னும் பலவிதத்தில் முயன்றும் கூட ஆறு ஏழு ஆயிரம் ரூபாய் குறைவு பட்டது! விவாகத்திற்காகக் குறித்த நாள நெருங்கிக்கொண்டே வந்தது.

முகூர்த்த நாளும் கடைசியாக வந்துவிட்டது. மிக வும் எதிய வட்டிக்கு யாரோ ஒருவன் பாக்கித்தொகையைக் கடன் கொடுக்க ஒப்புக்கொண்டான், ஆனால் அவன் சமயத் தில் வரவில்லை. அதனால் கலியாணப் பந்தலில் பெரிய அமளியாயிருந்தது. ராம சுந்தரர் நம்முடைய ராய் பகதூரின் கை கால்களைப் பிடித்துக்கொண்டு, "சுப காரியம் நடந்துபோகட்டுமே, நான் நிச்சயமாய்ப் பணத்தைச் சேகரித்துக் கொடுத்து விடுகிறேன்," என்று எவ்வளவோ கேட்டுக்கொண்டார். ராய் பகதூர் கண்டிப்பாய்ச் சொல்லி விட்டார், "கைமேல் பணம் வைக்காவிட்டால் மணமகனை மனையில் உட்கார வைக்க முடியாது," என்று.

இதனால் அந்தப்புர ஸ்திரீகள் ஓலமிட்டழுதார்கள். இவ்வளவு துன்பத்திற்கும் மூலகாரணமா யிருந்த மணப் பெண் கூறைப் புடவையோடு நகைகளை யணிந்து முகத்தில் சந்தனம் பூசிக்கொண்டு சும்மா உட்கார்ந்திருந்தாள். தன் னைக் கொள்ளப்போகும் விட்டாரின்மீது பக்தியாவது அன் பாவது அவள் மனதில் தோன்றியிருக்குமா என்பதைச் சொல்ல முடியாது.

இவ்வளவுக்கு மிடையில் நல்ல செய்தி ஒன்று வந்தது. மண மகன் தன் தந்தையினுடைய தெய்வீகக் கட்டளையை மீறி நடக்க ஆரம்பித்தான். தன் தகப்பனாரைப் பார்த்து

அவன், "இங்கு நடக்கும் வியாபாரமும் பேரமும் எனக்கு அர்த்தமாகவில்லை. நான் விவாகத்திற்காக வந்தேன், விவாகம் செய்துகொண்டு தான் போவேன்," என்றான்.

கண்டவர்களிடத்திலும் போய் தந்தை—"பார்த்தீர்களா ஐயா, தற்காலப் பிள்ளைகளின் விவகாரத்தை!" என்றார். அவர்களுக்குள் பிரவீணர்களான இரண்டொருவர், "பிள்ளைகள் சாஸ்திரம் பயில்வதில்லை, நீதி முறை பயில்வதில்லை, அது தான் இதற்கெல்லாம் காரணம்," என்றார்கள்.

தற்காலப்படிப்பின் விஷத் தன்மையைத் தன் மகனிடத்திலேயே பிரத்தியக்ஷமாய்க் கண்ட ராய் பகதூர் ஒன்றும் செய்யத் தோன்றாமல் உட்கார்ந்து விட்டார். இப்படிச் சோக முற்று மனக் களிப்பில்லாத நிலைமையில் விவாகம் ஏதோ ஒருவாறு நடந்தேறிற்று.

புக்ககத்துக்குப் போகவேண்டிய காலத்தில் நிருபமாவை அவள் தந்தை மார்போடணைத்துக் கட்டிக்கொண்டு கண்ணீர் சொரிந்தார்.—"அவர்கள் என்னை மறுபடி இங்கு வர விடமாட்டார்களா என்ன, அப்பா?" என்று நிரு கேட்டாள்.—"வர விடாமல் என்ன, அம்மா? நான் வந்து அழைத்து வருகிறேன்," என்று ராமசுந்தரர் சொல்லி அவளை சாந்தப்படுத்தினார்.

ராமசுந்தரர் வெகுசாய் மகளைப் பார்க்கப் போவார். ஆனால் சம்பந்திகள் வீட்டில் அவருக்கு ஒரு மரியாதையும் கிடைக்காது. வேலையாட்கள் கூட அவரை லக்ஷியம் செய்ய மாட்டார்கள். அந்தப்புரத்திற்கு வெளியில் ஒரு தனியறையில் அவர் தம் பெண்ணை ஐந்து நிமிஷ காலம் தான்

பார்க்க முடியும், சில தினங்களில் அதுகூட முடியாமற் போவதுண்டு.

சம்பந்திகள் வீட்டில் இப்படிப்பட்ட அவமானத்தைச் சகித்திருக்க முடியாது. ஆகையால் எப்படியாவது பணத்தைச் சேகரித்துக் கொடுத்து விடவேண்டுமென்று ராமசுந்தரர் தீர்மானித்துக் கொண்டார்.

ஆனால் இப்பொழுது தலைமேல் சுமந்து கிடக்கும் கடன் பளுவையே சமாளிப்பது கஷ்டசாத்தியமாக இருந்தது. வீட்டுச் செலவுக்கும் கூட அதிக திண்டாட்டம். இவைகளோடு கடன்காரர்கள் கண்ணில் படாமல் தப்பித்துக்கொள்வதற்கு எப்பொழுது பார்த்தாலும் பலவிதமான செய்கைகளைச் செய்து வரவேண்டியிருந்தது.

மற்றொரு புறத்தில் மாமியார் வீட்டில் மகள் நிற்பதும் குற்றம், உட்காருவதும் குற்றமாக இருந்தது. அவள் எப்பொழுது பார்த்தாலும் வசவு கேட்ட வண்ணமாயிருந்தாள். தாய் வீட்டார்களைப் பற்றின தூஷணைகளைக் கேட்டு அறையில்போய்க் கதவை மூடிக்கொண்டு கண்ணீர் விடுவது அவளுடைய தினசரி வேலையில் ஒன்றாகிவிட்டது.

மாமியாருடைய கோபம் சிறிதும் குறையவில்லை. யாராவது "ஆஹா, என்ன அழகு! மருமகள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாலே கண் குளிர்ந்திருக்குமே," என்று அவளைப் புகழ்ந்துவிட்டால் போதும், மாமியார் கடிந்துகொண்டு; "அழகிற்குச் சொல்லவேண்டுமா? பெண் வீட்டார் எப்படியோ அப்படித்தானே அவள் அழகும்!" என்பாள்.

மருமகளினுடைய ஆகார வஸ்திரங்களைப்பற்றி யாவரும் அசட்டையாகவே இருந்தார்கள். கருணையுள்ள அண்டை வீட்டார் யாராவது இப்படி அசட்டையாயிருப்பதைப்பற்றிச் சொல்வார்களானால் அவர்களுக்குப் பதில், "இதுவே அதிகமாயிற்றே" என்று மாமியார் சொல்லி, பூராக அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டுமானால் தந்தை பூராகப் பணம் கொடுத்திருக்க வேண்டும் என்ற கருத்தை வெளியிடுவாள். அங்கு யாவரும் நடந்து கொண்டதைப் பார்த்தால் மருமகளுக்கு அங்கு ஒருவித உரிமையும் இல்லை என்றும் அவள் வஞ்சனையாகத்தான் பிரவேசித்திருக்கிறாள் என்றும் எண்ணினார்கள் போலிருந்தது.

இப்படி மகள் அனுபவித்து வரும் கஷ்ட நிஷ்டூரங்கள் யாவும் தந்தையின் காதுக்கு ஒருவேளை எட்டியிருக்கும். அதனால் தான் ராமசுந்தரர் கடைசியாகத் தான் பாரம்பரையாய் வசித்து வரும் வீட்டை விற்றுவிட முயன்றார்.

ஆனால் தன் பிள்ளைகள் வீட்டை இழந்துவிடப் போகிறார்கள் என்ற செய்தியை அவர்களிடத்திலிருந்து அவர் மறைத்து வைத்திருந்தார். வீட்டை விற்றுவிட்டு அதிலேயே வாடகை கொடுத்துக்கொண்டு குடியிருப்பதென்றும், அதை வெகு சாமர்த்தியமாய்ச் செய்து தன் மரணத்திற்கு முன் அது சிறிதும் அவர்களுக்குத் தெரியாவண்ணம் நடந்து கொள்வதென்றும் அவர் தீர்மானித்துக் கொண்டார்.

ஆனால் பிள்ளைகளுக்கு அது தெரிந்துவிட்டது. எல்லாரும் அவரிடத்தில் வந்து அழுதார்கள். அதிலும் முதல்

மூவருக்குக் கலியாணமா யிருந்ததோடு சிலருக்குக் குழந்தைகளும் பிறந்திருந்தன. அவர்களால் பெருந்தடை ஏற்பட்டு விடவே வீட்டு விற்பனைப்பேச்சு அச்சமயத்துக்கு நின்று போயிற்று.

ராமசந்திரர் அப்பொழுது பலவிடங்களிலும் அதிக வட்டிக்குத் தீர்ப்பதாகக் கடன் வாங்கிவந்தார். வீட்டுச் செலவுக்கு வெகு கஷ்டமாய் விட்டது.

தந்தை முகத்தைக் கண்டதுமே நிரு யாவற்றையும் தெரிந்துகொண்டு விட்டாள். கிழவருடைய நரைமயிர், வாடிய முகம், சோர்ந்த மனம் யாவும் அவருடைய தரித்திர நிலைமையையும், கொடுங்கவலையையும் விளக்கிக் காட்டின. மகள் விஷயத்தில் அபராதப்பட்ட தந்தை தன் மனக் குறு குறுப்பை எப்படி மறைக்கக்கூடும்? இந்த விஷயத்தில் அவர் மனது எப்படித் துடிதுடித்தது என்பதை அவர் சம்பந்திகளின் அனுமதி பெற்று ஒரு கணப்பொழுது மகளை வந்து காணும்போது சிரிக்கும் சிரிப்பிலிருந்தே உணரலாம்.

இப்படித் துடித்துக் கொண்டிருக்கும் தந்தை மனதைச் சாந்தப் படுத்துவதற்காகத் தாய் வீட்டிற்குப் போய் சில நாட்களாவது இருக்கவேண்டுமென்று நிரு வெகு ஆவல் கொண்டிருந்தாள். தந்தையின் சோர்ந்த முகத்தைக் கண்டபோது அவரை விட்டு தூர இருக்க இயலாதவளாய்,—“அப்பா, என்னை ஒரு முறை நம் அகத்துக்கு அழைத்துப் போகிறீரா?” என்றாள்.—“அப்படியே செய்கிறேன், அம்மா,” என்றார் ராமசந்திரரும்.

ஆனால் அப்படிச் செய்ய அவருக்குச் சிறிதும் பாத்தியதை இல்லை—சொந்த மகளின் பேரில் தந்தைக்கு இயற்கையாயுள்ள உரிமையை வரதக்ஷிணைக்கு அடைமானமாகக் கொடுத்துவிட்டிருந்தார். மகளைக் கண்டு போகும் உரிமையைக்கூட அதிக சங்கோசப்பட்டு பிச்சையைப் போலத்தான் கேட்டு அனுமதிபெற வேண்டி யிருந்தது, கால வித்யாசத்தால் அதுவும் கிடைக்காமற் போய்விட்டால் இரண்டாம் பேச்சு சொல்ல அவருக்கு வாயில்லை.

ஆனால் மகள் தானாகவே தன் வீட்டிற்கு வரவேண்டுமென்று ஆசைப்படும்போது அவளை எப்படி அழைத்து வராமலிருக்க முடியும்! ஆகையால் சம்பந்திகளோடு இந்த விஷயத்தைப்பற்றிப் பிரஸ்தாபிப்பதற்கு முன் ராம சுந்தர் ஒரு மூவாயிரம் ரூபாய் சேகரிக்க எவ்வளவு தாழ்மை, எவ்வளவு அவமானம், எவ்வளவு தீங்கு ஏற்றுக்கொள்ள வேண்டி யிருந்தது என்பதின் சரித்திரத்தை இங்கு சொல்லாமலிருப்பதே மேல்.

நோட்டுகளைக் கைக்குட்டையில் சுற்றிவைத்து அங்கவஸ்திரத்தின் நுனியில் முடிபோட்டுக்கொண்டு ராமசுந்தரர் சம்பந்தி அருகில் வந்து உட்கார்ந்தார். முதல் முதலில் சிரித்த முகத்தோடு தம் கிராம சமாசாரங்களை எடுத்துப் பேசினார். ஹரகிருஷ்ணன் வீட்டில் பெரிய களவு ஒன்று நடந்திருந்தது, அதன் விவரங்களை அடியிலிருந்து சொல்லி முடித்தார். நவினமாதவன், ராதாமாதவன் என்னும் இரண்டு சகோதரர்களின் கல்வி பயிற்சியையும் சுபாவங்களையும் பற்றிப் பேசி ராதா மாதவனைப் புகழ்ந்து நவினமாதவனை இகழ்ந்தார். ஊரில் புதிய நோய் ஒன்று வந்திருந்

தது. அதைப்பற்றின பல விநோத செய்திகளைச் சொன்னார். கடைசியாக ஹாக்காவைக் கீழே வைத்துவிட்டு, பேச்சோடு பேச்சாக, "அது இருக்கட்டும், சம்பந்திகளே, அந்தப் பணம் இன்னும் பாக்கியாகவே இருக்கிறது அல்லவா, தினம் அதைப் பற்றி நினைத்துக்கொள்கிறேன், வரும்போது அதைக் கையில் எடுத்து வரலாமென்று. ஆனால் சமயத்தில் மறந்துபோய் விடுகிறது; வயதாய் விட்டதோ இல்லையோ?" என்று இப்படி ஒரு பெரிய பீடிகை போட்டுக்கொண்டு எலும்புக்கூட்டின் மூன்று எலும்புகளைப் போலிருந்த மூன்று நோட்டுகளை வெகு சகஜமாயும் வெகு அலக்ஷ்யமாகவும் எடுத்தார். மூவாயிரம் ரூபாய் நோட்டுகள் தான் கையில் இருந்ததைக் கண்ட ராய் பகதூர் கெட்டியாகச் சிரித்துக்கொண்டே,

"போதும், ஐயா, இவைகள் எனக்கு வேண்டாம்," என்று மறுத்துவிட்டு சாதாரணமாய் வழங்கும் ஒரு வங்காளிப் பழமொழியை மேற்கோளாகச்சொல்லி, அற்ப விஷயத்திற்காகத் தன் கையில் தார்க்கும் பூசிக்கொள்ளத் தனக்கு இஷ்டமில்லை என்றார்.

இது கேட்ட பிறகு பெண்ணை வீட்டுக்கு அழைத்துப் போகும் பிரஸ்தாபத்தை எடுக்க யாருக்குமே வாய் வராது—ராயபகதூர் மாத்திரம் அப்படி விட்டுவிடவில்லை. இவ்வித சம்பந்தி மரியாதைகளால் தமக்கு இன்னும் ஆகவேண்டியதொன்றுமில்லை என்று எண்ணி, உயிர் நிலையில் அடிபட்டவர் போலே சிறிது நேரம் சும்மாயிருந்துவிட்டுக் கடைசியாகத் தன் விஷயத்தைச் சொன்னார். ராய் பகதூர் ஒரு சிறு காரணம்கூட எடுத்துக்காட்டாமல், "அது இப்பொழுது

முடியாது,'' என்று சொல்லிப் பிறகு ஏதோ காரியமாகத் தம்மிடத்தை விட்டு எழுந்துபோய் விட்டார்.

ராம சுந்தரர் பெண்ணுக்கு முகத்தைக் காட்டாமலே நடுங்கிக் கொண்டிருக்கும் கைகளால் அந்த நோட்டுகளைத் தம் உத்தரீயத்தில் முடிபோட்டுக்கொண்டு வீடு திரும்பி விட்டார். என்றைக்கு முழுபணத்தையும் சேகரித்து அவர்களுக்குக் கொடுத்துவிட்டுச் சங்கோச மின்றித் தம் பெண்ணினிடத்தில் தமக்குள்ள பாத்தியதையைப் பெற முடிகிறதோ அன்றுவரை சம்பந்திகள் வீட்டுக்குப் போகிற தில்லை என்று தமக்குள்ளேயே அவர் தீர்மானித்துக் கொண்டார். பல நாட்கள் கழிந்தன. நிருபமா ஆள்மேல் ஆள்விட்டனுப்பினாள். ஆனால் தகப்பனாரைக் காணவே இல்லை. கடைசியில் ரோஷத்தால் ஆட்கள் அனுப்புவதை நிறுத்திவிட்டாள்.

ராம சுந்தரர் மனதில் வெகு துயரப்பட்டார். இருந்தாலும் அப்பொழுதுகூட அவர் போகவில்லை.

ஐப்பசி மாதம் வந்தது. ராமசுந்தரர், இம்முறை நவ ராத்திரிக்குக் குழந்தையை எப்படியாவது அழைத்து வந்து விடவேண்டும், இல்லாவிட்டால் நான்.......என்று ஒரு கடுமையான பிரமாணம் செய்துகொண்டார்.

பஞ்சமியன்றோ ஷஷ்டியன்றோ உத்தரீயத்தில் சில நோட்டுகளை முடிபோட்டுக்கொண்டு புறப்படத் தயாராய் இருந்தார். ஐந்து வயதுள்ள பேரன் ஒருவன் வந்து, "தாத்தா, எனக்கு வண்டி ஒன்று வாங்கிக்கொடுக்கிறீரா?'' என்று கேட்டான். அவனுக்குப் பாவம் வெகு நாளா

கவே ஆள் தன்னும் வண்டியொன்றிலேறி சவாரி செய்ய வேண்டுமென்ற ஆசையுண்டு; ஆனால் அவ்வாசையைத் தீர்த்துக்கொள்ள இதுவரை வழி ஒன்றும் கிடைக்கவில்லை. ஆறு வயதுள்ள பேத்தி ஒருத்தி அழுதுகொண்டே வந்து, “நவராத்திரியில் யாராவது கொலுவுக்கு அழைத்தால் போவதற்கு நல்ல பாவாடை ஒன்றுமில்லையே, தாத்தா,” என்றாள்.

ராம சுந்தரருக்கு அது தெரியும். ஹுக்கா பிடித்துக் கொண்டே இது விஷயமாக அவர் ஏதேதோ யோசனைகளெல்லாம் செய்து பார்த்தார். ராய் பகதூர் வீட்டில் நவராத்திரிக்கு அழைக்கும்போது தன்னுடைய நாட்டுப்பெண்கள் சொற்ப ஆபரணங்களை மாத்திரமே தரித்துக்கொண்டு ஏழை யாசகர்களைப்போலே போய் நிற்கவேண்டி இருக்குமே என்று எத்தனை எத்தனைப் பலமுறை அவர் பெருமூச்சு விட்டிருக்கிறார். அதனால் அவர் முகத்தில் ஆழ்ந்த வரிகள் தோன்றினதைத் தவிர்த்து வேறொரு பயனும் கிடைக்கவில்லை.

வறுமையினால் பெருந்தூறாக் கிடக்கும் தம் வீட்டு அருகுலைக் காதுக்கையை வாங்கிக்கொண்டு பெரியவர் சம்பந்திகள் வீட்டில் போய் நுழைந்தார். முன்பு அவருக்கிருந்த சங்கோசம் இப்பொழுது பறந்து போய்விட்டது. வேலையாட்களையும் கூட அச்சத்தோடும் நாணத்தோடும் இதுவரை அவர் பார்த்து வந்த பார்வை இப்பொழுது அவரிடத்தில் காணவே காணோம்; தம் சொந்த வீட்டில் பிரவேசிப்பதைப் போலவே தான் அவர் அங்கு பிரவேசித்தார். வீட்டில் ராய் பகதூர் இல்லை என்று கேட்கவே அவர் சிறிது நேரம்

அங்கு காக்க வேண்டியதாயிருந்தது. மனதில் பொங்கி எழும் சந்தோஷத்தை அடக்க முடியாதவராய் நேராகப் பெண்ணிடம் சென்றார். ஆனந்தத்தால் கண்களிலிருந்து நீர் பெருகிற்று. அப்பாவும் அழுதார், மகளும் அழுதாள். ஒரு பேச்சு கூடப் பேச இருவராலும் இயலவில்லை. இப்படிச் சில நிமிஷங்கள் கழிந்ததும், ராமசுந்தரர், "இந்தத் தடவை உன்னை வீட்டுக்கு அழைத்துப்போகிறேன், அம்மா, இனியொரு கஷ்டமுமில்லை," என்றார்.

இச் சமயத்தில் ராம சுந்தரருடைய மூத்த மகன் ஹரமோகனன் தன்னிரு குழந்தைகளோடும் அறையில் பிரவேசித்து, "அப்பா, எங்களை நீர் இப்போது நடுத்தெரு வில் விட்டு விட்டீரே! நாங்கள் என்ன செய்கிறது?" என்றான்.

ராம சுந்தரர் நெருப்பு போல எரிந்து விழுந்து, "உங்களுக்காக நான் நரகத்துக்குப் போகிறதா என்ன? நீங்கள் என் வாக்கைக் காப்பாற்ற என்னை விடமாட்டீர்கள் போலிருக்கிறதே!" என்று ஆக்குரோஷத்தோடு சொன்னார். ராம சுந்தரர் வீட்டை விற்றுவிட்டு, குமாரர்கள் அதை அறியா வண்ணம் பலவித ஏற்பாடுகள் செய்திருந்தார். ஆனாலும் அது அவர்களுக்குத் தெரிந்து விடவே அடக்க வொண்ணாத கோபம் அவருக்கு வந்துவிட்டது.

இச் சமயத்தில் அவருடைய பேரன் அவருடைய இரண்டு முழங் கால்களையும் பலமாய்ச் சேர்த்துக் கட்டிக் கொண்டு அவர் முகத்தை அண்ணாந்து பார்த்து, "தாத்தா, எனக்கு நீர் வண்டி வாங்கிக்கொடுக்க மாட்டீரா என்ன?" என்று கேட்டான்.

ராமசந்தரர் தலை குனிந்துகொண்டு பதில் ஒன்றும் சொல்லாமலிருப்பதைக் கண்டு குழந்தை நிருவினிடம் போய், "அக்கா, எனக்கு ஏதாவது ஒரு வண்டி வாங்கித் தருவாயா?" என்று கேட்டான்.

நிருபமாவுக்குச் செய்தி முழுவதும் விளங்கிவிட்டது. அவள், "அப்பா, என் மாமனாருக்கு நீர் ஒரு காலணு கொடுப்பீரேயானால் உம்முடைய மகளை இனி நீர் காண மாட்டீர். உம் பேரில் ஆணையிட்டுச் சொல்லுகிறேன்; பார்த்துக்கொள்ளும்," என்றாள்.

ராமசந்தரர், "சீ! நீ இந்த மாதிரி வார்த்தை சொல்லாதே, அம்மா! இந்த ரூபாயை நான் கொடாமற் போனேனானால் அப்போது உன் அப்பாவுக்கும் அவமானம், உனக்கு அவமானம்," என்றார்.

நிரு சொன்னாள்: "அப்பா, ரூபாயைக் கொடுப்பீரானால் அது தான் அவமானகரம்! உம் பெண்ணுக்குத் தன்னிலேயே ஒரு மரியாதை இல்லையா? வெறும் பணப்பை தானா நான், என்னிடம் பணமிருக்கும் வரைதான் என்னை மதிப்பதற்கு? வேண்டாம், அப்பா, பணத்தைக் கொடுத்து என்னை வீணில் அவமானப் படுத்துகிறீர். அதுவும் இப் பணத்திற்கு என் புருஷன் ஆசைப்படவேயில்லையே!"

ராமசந்தரர், "அப்படியானால் அவர்கள் உன்னை என்னோடு வீட்டுக்கு வர விடமாட்டார்களே!"

நிரு.—அவர்கள் அனுப்பா விட்டால் நீர் என்ன செய்வீர். நீரும் கேட்காமலே சும்மா இருந்துவிடும்.

ராமசுந்தரர் நடுங்கும் தன் கைகளால் கோட்டுகளைக் கட்டிக் தோள்மேல் போட்டுக்கொண்டுத் திருடனைப்போல ஒருவர் கண்ணிலும் படாமல் திரும்பி வீடுபோய்ச்சேர்ந்தார்.

பூராவும் பணத்தை ராம சுந்தரர் எடுத்து வந்திருந்ததும் அதைக் கொடுக்க வொட்டாமல் தடுத்து மறுபடி எடுத்துப் போகும்படி அவர் பெண் செய்ததும் ரகஸ்யமாக இருக்கவில்லை. நடந்த சம்பாஷணையை கதவுகளின் சந்து வழியாக ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த வேலைக்காரி ஒருத்தி நிருவின் மாமியாரிடத்தில் போய் யாவற்றையும் சொல்லி விட்டாள். இச் செய்தியை அறிந்ததும் மாமியாரின் ஆக்ரோஷம் மிதமிஞ்சி விட்டது.

மாமியார்வீடு நிருபமாவுக்கு ஒரு முள் படுக்கையாய் விட்டது. போதாத குறைக்கு விவாகமான சிறிது காலத்திற்கெல்லாம் அவள் புருஷன் டெபுடி மாஜிஸ்டிரேட் வேலை பெற்று வெளியூருக்குப் போய்விட்டார். பிறந்தகத்தாரோடு சேர்ந்து கெட்டுவிடுவாள் என்ற சாக்கினால் நிரு இனி அவர்களைப் பார்க்கக்கூடாதென்று தடுக்கப்பட்டாள்.

இதற்குச் சரியாக நிருவுக்குப் பெரிய வியாதி ஒன்று கண்டிருந்தது. அதன் பொருட்டு அவள் மாமியார் மீதே முழுபழியையும் சுமத்துவது சரியன்று. தன் உடம்பு விஷயத்தில் அவள் வெகு அஜாக்கிரதையாகவே இருந்தாள். கார்த்திகை மாதப் பனியில் தன் அறையில் தலை வைத்துப் படுத்துக்கொள்ளும் பக்கத்துக் கதவைத் திறந்து வைப்பாள்; குளிர் காலத்தில் உடம்பைப் போர்த்திக்கொள்ள மாட்டாள். காலத்தில் உணவு கொள்வதில்லை. வேலைக்காரிகள் போஜனமிடாமல் சில சமயங்களில் மறந்தாற்போலே போய்விட்

டால் அதை வாய்திறந்து கேட்கலாமே, அதையும் செய்ய மாட்டாள். எஜமானன், வேலையாட்களை, எஜமானி முதலானோர்களின் தயவின் பேரில் தான் ஒரு அயல் வீட்டிலிருந்து வருவதைப்போல தன்னை அவள் நடத்திக்கொண்டாள். அவ்வெண்ணம் அவள் மனதில் வரவர அதிகமாக வேரூன்றிவிட்டது. இப்படி அவள் நடந்து கொண்ட மாதிரி கூட மாமியாருக்குப் பிடிக்கவில்லை. சாப்பாடு விஷயத்தில் அவள் அசட்டையாயிருப்பதைக் கண்டால், “ நவாப்பு வீட்டுப் பெண்ணல்லவா அவள், ஏழை வீட்டுச் சோறு அவளுக்கு எப்படி ருசிக்கும் ?” என்பாள். “ அவள் அழகைப் பார்க்கவில்லையா, அவள் அழுகை, நாளுக்கு நாள் அவள் கொள்ளிக் கட்டையைப்போலே ஆய்க்கொண்டு வருகிறதே ?” என்று வேறு சில வேளைகளில் சொல்வாள்.

நிருவுக்கு வியாதி அதிகரித்தபோது, அவள் மனம் வாடியிருந்தால் “ இதெல்லாம் பெரிய மனுஷாள் வீட்டுப் பெண்ணின் பாசாங்கு,” என்பாள். ஒரு நாள் வெகு விசாயமாய் நிரு மாமியாரோடு, “ அப்பாவையும் என் சகோதரர்களையும் நான் ஒரு முறை பார்க்கவேண்டுமே, அம்மா!” என்று கேட்டாள். இதைக் கேட்ட மாமியார், “ இவ்வளவு சுதந்திரமும் பிறந்தகத்துக்குப் போவதற்குத் தானோ?” என்றாள்.

சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள்—ஒரு நாள் சாயங்காலம் நிருவுக்கு மேல் சுவாஸம் கண்டுவிட்டது. அன்று தான் முதல் தடவை ஒரு வைத்தியனை அழைப்பித்தார்கள். அதுவே தான் கடைசி தடவையுமாகி விட்டது.

வீட்டில் மூத்த மருமகள் இறந்து விட்டதனால் கிரியைகளெல்லாம் வெகு ஆடம்பரமாகவே நடைபெற்றன.

நவராத்திரியின் முடிவில் துர்க்கையின் விக்கிரகத்தை நதியில் விடும் சடங்கு விஷயத்தில் ராய் பகதூர் வீடு ஜில்லா முழுதும் பேர்போனதாக இருந்தது. அதைப்போலவே இம் மூத்த மருமகளின் கிரியையும் ஆடம்பரமாகத்தான் நடந்தது. அந்தப் பாகங்களில் எங்குமே கேட்டிராதபடிச் சந்தனக் கட்டைகளைச் சிதையாக அடுக்கி அதில் அவளைத் தகனம் செய்தார்கள். அவளுக்கு நடந்த சபிண்டிகரணத்தின் சம்பிரமம் ஒரு ராய் பகதூர் வீட்டில் தான் நடக்கக் கூடியதாக இருந்தது. இதன் பொருட்டு அவர்களுக்குச் சிறிது கடன்கூட ஏற்பட்டதாகச் சொல்லுகிறார்கள்.

ராமசுந்தரரைத் துக்கம் விசாரிக்க வந்தவர்களெல்லாரும் அவர் மகளின் சரமக் கிரியைகள் வெகு விமரிசையுடன் நடைபெற்றன வென்று சொல்லி அதை விஸ்தரித்தார்கள்.

மற்றொரு பக்கம் டெபுடி மாஜிஸ்டிரேட் டிடமிருந்து வந்த கடிதத்தில், "இங்கு தக்க ஏற்பாடுகள் செய்து வைத்திருக்கிறேன். இதைக் கண்டதும் சீக்கிரத்திலேயே என் மனைவியை அனுப்பிக் கொடுக்க வேண்டும்," என்று எழுதியிருந்தது. அதற்கு ராய் பகதூரின் தர்மபத்தினி, "அப்பா, உனக்கு வேறொரு பெண்ணை நிச்சயம் செய்து வைத்திருக்கிறோம். இதைக் கண்டதும் சீக்கிரத்திலேயே நீ ரஜா வாங்கிக்கொண்டு இங்கு வரவேண்டும்," என்று பதில் எழுதினாள்.

இம்முறை இருபதினாயிரம் ரூபாய் வரதக்ஷிணை, அதுவும் கையின் மேல் ரொக்கப் பணம்.

நமது இதரப் பிரசுரங்கள்

௧. ஸ்ரீ ரவீந்த்ர நாத் டாகூர் எழுதிய சிறு கதைகள்:

(1) அசாபங்கம் முதலியன ரூ. அ.

வெகு உத்தமமான மதிப்புரையுடன் கூடி இருக்கின்றன. புகழ்பெற்ற தமிழ் கவிசிரேஷ்டரான சி. சுப்பிரமணிய பாரதியாரும் தமிழ் தாயின் செல்வப் புதல்வரான வ. வே. சு. அய்யரும் மொழி பெயர்த்த கதைகள் 0 8

(2) தாளியா, வரதக்ஷிணை முதலியன

வங்காளி முதனூலிலிருந்து நேரில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள கதைகள் இவைகளில் முதனூலாசிரியன் கருத்துகளை அவருடைய தாய் பாஷையிலேயே போல தமிழ் மக்கள் அறிந்து கொள்ளுதல் சாத்தியமாகும் 0 8

௨. குப்பன் பித்தலாட்டங்கள்

ப்ரென்சு பேராசிரியனாகிய மோலியேர் இயற்றிய ஹாஸ்ய நாடகம். தாய்மாரின் இனிய அன்பில்லாது வளரும் புதல்வர்களை பணத்தில் பிடிப்புள்ள தந்தைமார்கள் இல்வசமாய்க் கிடைக்கும் புத்தி கூர்மையுள்ள வேலையாட்கள் வசம் விடுவதனால் தாம் படும் பாடுகளை வெகு வேடிக்கையாகவும் நகைப்பூட்டும்படியாகவும் இதில் காட்டியிருக்கிறது 0 6

௩. யுக வஸந்தி அல்லது அர்ஜுனன் மனநிலை (முதல் பாகம்)

ஸ்ரீமத் பகவத் கீதை ஒரு கதை ரூபமாகவும் அழகிய பிரகிருதி வர்ணனைகளுடனும் எழுதப்பட்டுள்ளது 0 4

௪. ஆதிபாண்டியன் அல்லது தர்மமே ஜயம்

இதில் பண்டை நாட்களில் பாரத தேசத்தில் வழங்கிய அரசர் உரிமை, ஜன உரிமை, யுத்த முறைகள், பல தர்மசங்கடங்களின் காரணம் முதலியன தெளிவாக்கப் பட்டுள்ளன. 0 6